விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஐப்பசி 16 திங்கட்கிழமை (02.11.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 318

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## போர்க்குற்றம் புரிந்தது விடுதலைப் புலிகளே!



### டெஸ்மண்ட் சில்வா அறிக்கை

(லண்டன்)

இறுதிக்கட்ட போரின்போது தமிழீழ விடு தலைப் புலிகளே ஒன்றுக்குபின் ஒன்றாக பல போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்க ளில் ஈடுபட்டதாக சேர் டெஸ்மண்ட் சில்வா அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் தீர்வுக்கு சிறந்த சந்தர்ப்பம்

### சந்திரிகா

(கொழும்பு)

அரசியல் தர்வுத் திட்டமொன்றை எட்டுவதற்கு தகுந்த சந்தர்ப்பம் உருவாகியள்ளது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாய க்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வுத் திட்ட மொன்றை எட்டுவதற்கு சிறந்த சந் தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

பிரதான அரசியல் கட்சிகள் அனைத்து அரசியல் தீர்வுத் திட்டம் எட்டுவது தொடர்பில் ஒருமித்த நிலைப்பாட்டைக் கொண்டிருக்கக் கூடிய சாத்தியம் எழுந்துள்ளது.

இந்த நிலைமையானது மிகவும் ஆரோக்கியமானது என முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா, கொழு ம்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் தெரிவித்து ள்ளார். (செ-12)

## தமிழர்களின் உணர்வுகளோடு இணைந்தது கார்த்திகை மாதம்

### விடுதலைப் பற்றுடன் சிறிதரன் பேச்சு

(யாழ்ப்பாணம்)

இந்த கார்த்திகை மாதம் தமி ழர்களின் உணர்வுகளோடும் நினைவுகளோடும் இணைந்த ஒரு மிக முக்கியமான மாதமாகும். இந்த மாதத்தில் நாட்டுகின்ற ஒவ் வொரு மரங்களும் வரங்களை தரும் என்பதற்கப்பால் விடுதலை யையும் பெற்றுத் தரும்.

இங்கு நடைபெற்றது இனப்படு கொலை இல்லை என கூறுபவர்கள். 23ஆம் பக்கம் பார்க்க

## மைத்திரியை இரகசியமாக சந்தித்தார் கோத்தபாய!

### ஜெனிவா தீர்மானத்தை எச்சரிக்க

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தி த்து பேச்சுவார்த்தை நடத்தியுள் ளார். கடந்த 27ஆம் திகதி நடந்த இந்தச் சந்திப்பின் போது, ஜெனிவா சூழ்ச்சியில் சிக்க வேண்டாம் என அவர் ஜனாதிபதியிடம் கூறியுள்ளார்.

ஜெனிவா தீர்மானங்களை அமுல்படுத்த சர்வதேச நீதவான்க 23ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவின் பாதுகாப்பு வாகனம் விபத்து

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு வாகனம் (ஜீப்), மோட்டார் சைக்கிள் ஒன்று டன் மோதி விபத்துக்குள்ளாகியுள் ளது.

பிடிகல - தலகத்தே வித்தியால யத்திற்கு அருகில் வைத்து நேற்று பிற்பகல் இந்த விபத்து ஏற்பட்டுள்ள 23ஆம் பக்கம் பார்க்க

## இயல்புநிலை இன்னமும் இல்லை

### மரநடுகை நிகழ்வில் விக்னேஸ்வரன் உரை

(யாழ்ப்பாணம்)

யுத்தம் நிறைவடைந்த பின்ன ரும் இயல்பு நிலை இன்னும் திரு ம்பவில்லை எனவும் கடந்தகால தவறுகளை சீர் செய்ய வேண்டிய கட் டாயம் இருப்பதாகவும் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வ ரன் தெரிவித்துள்ளார்.

கார்த்திகை மாதம் மரம் நடுகை மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டு நேற்று மரம் நடும் செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந் தினராக கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்று கையில், 04ஆம் பக்கம் பார்க்க




## கூட்டுப் பயிற்சி நேற்று நிறைவு

(கொழும்பு)

இலங்கை -இந்திய கடற்படை களுக்கு இடையில் கடந்த மாதம் 27ஆம் திகதி ஆரம்பமான கூட்டுப் பயிற்சி நேற்று நிறைவடைந்துள் ளது.

SLINEX 2015 என்ற பெயரி லான இந்தக் கூட்டுப் பயிற்சி திரு கோணமலைத் துறைமுகம் மற் 23ஆம் பக்கம் பார்க்க

## புஸ்ப நிதி மோசடி; விசாரணைக்கு அழைப்பு

(கொழும்பு)

பாரிய நிதி மோசடி தொடர்பி லான ஜனாதிபதி ஆணைக்குழுவின் எதிரில் விசாரணைக்காக முன் னிலையாகுமாறு முன்னாள் தெங்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத் புஸ் புகுமாரவிற்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது. மனைவியின் பெயரில் 23ஆம் பக்கம் பார்க்க

### மைத்திரியின் மேடையில்

## 'ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ' என கூறிய முன்னாள் மேயர்

(கொழும்பு)

சுதந்திரக் கட்சி வைபவமொன றில் ஜனாதிபதி மைத்திரிபாலவை விளிப்பதற்குப் பதில் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்று விளித்துள்ளார் கடுவெல முன்னாள மேயர் ஜி.எச்.புத்ததாச. கடந்த 29 ஆம் திகதி வியாழக்கிழமை சுத ந்திரக்கட்சியின் கிளை அலுவலக மொன்றை கடுவெல முன்னாள் மேயர் ஜி.எச். புத்ததாச, கடுவலை நகரில் திறந்துள்ளார். இந்த வைப வத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிரதம அதிதியாகக் கல ந்து கொண்டார். 23ஆம் பக்கம் பார்க்க

## தாய்லாந்தில் மைத்திரி



(பாங்ஹொக்)

தாய்லாந்து நாட்டுக்கு உத்தி யோகபூர்வ பயணம் மேற்கொண் டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தலைநகர் பாங்ஹொக் கில் உள்ள சுவர்ணபூமி விமான நிலையத்தை நேற்று பிற்பகல் 24ஆம் பக்கம் பார்க்க

## பதுங்குகுழி பற்றி எனக்குத் தெரியாது-சரத்



(கொழும்பு)

ஜனாதிபதி மாளிகையின் கீழ் பதுங்குகுழி இருந்தமை குறித்து 23ஆம் பக்கம் பார்க்க

## அமைச்சரவை கூட்டங்களில் ஆதிக்கம் செலுத்துகிறார் ரணில்

### சுதந்திரக் கட்சியினர் ஜனாதிபதியிடம் முறைப்பாடு

(கொழும்பு)

அமைச்சரவை கூட்டங்களில் சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் முன் வைக்கும் அமைச்சரவைப் பத்திர ங்களை பிரதமர் ரணில் விக்கிரம சிங்க உதாசீனப்படுத்துவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 29ஆம் திகதி வியாழக் கிழமை சுதந்திரக்கட்சி அமைச்ச ர்கள் மற்றும் ஜனாதிபதிக்கிடையி லான சந்திப்பின் போது இந்த முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டு ள்ளது.

சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் முன்வைக்கும் அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பில் பிரதமர் ஆதரவளிப்பதில்லை. அவற்றை 23ஆம் பக்கம் பார்க்க

## "பதவியைத் தூக்கி எறியுங்கள்" ஆனந்தசங்கரி ஆணித்தரம்

(கொழும்பு)

சிறையில் உள்ளவர்கள் அரசி யல் யுத்தக்குற்றவாளிகள் இல்லை என்ற நிலைப்பாட்டை ஆணித்தர மாக எடுத்துரையுங்கள் என தமிழா விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி தமி ழ்த் தேசிய கூட்டமைப்பினை வலி யுறுத்தியுள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க

# நாட்டில் நாளொன்றுக்கு 650 கருக்கலைப்புக்கள்!

(கொழும்பு)

நாட்டில் நாளொன்றுக்கு சராசரியாக 650க்கும் அதிகமான கருக்கலைப்புகள் இடம்பெறுவதாக சுகாதார அமைச்சின் குடும்பநல மருத்துவப் பிரிவு கூறியுள்ளது.

அதேவேளை இலங்கையில் 77 வீதமான கருத்தரிப்புகள் எதிர்பாராத கருத்தரிப்புகள் என்று சம்பந்தப்பட்டவர்களால் கருதப்படுவதாகவும் தமது ஆய்வுகள் கூறுவதாக அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது குறித்து பேசிய கிழக்கு மாகாண சமூக நல மருத்துவ நிபுணரான டாக்டர் எஸ். அருள்குமரன், கருக்கலைப்புக்கள் 1000 என்ற எண்ணிக்கையில் இருந்து தற்போது 650ஆக குறைந்துள்ளதாக கூறினார்.

கருக்கலைப்புகள் மருத்துவ காரணங்களுக்காக மாத்திரமே அரசாங்க மருத்துவமனைகளில் நடப்பதாகவும், ஆனாலும் சில சட்ட வரோத நிலையங்கள் இதற்காக செயற்படுவதாகவும், அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (செ-12)


## மலிவு விற்பனை

தீபாவளியை முன்னிட்டு வாடிக்கையாளரின் நலன் கருதி 15.10.2015 முதல் 10.11.2015 வரையில் விசேட விலைக் கழிவில் சகல விதமான பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

நாடவேண்டிய இடம்
லைடன் புடைவை நிலையம்,
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 021 222 2381

(C-2590)



## கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம்

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் திருமண மண்டபத்துடன் இணைந்த கலாசார மண்டபம் அமைப்பதற்கு உத்தேசித்துள்ளதால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றது. விண்ணப்பிக்க தகுதி உடையவர்கள் ஆலய நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

உத்தேச மதிப்பீட்டுத் தொகை 20 மில்லியன்.

0766017302
0776059577

ஆலய பரிபாலன சபை
அருள்மிகு கந்தசுவாமி
தேவஸ்தானம்,
கிளிநொச்சி.

(C-2592)


### கிராம அபி.திணைக்கள யாழ்.அலுவலர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலராக நா.பஞ்சலிங்கம் இன்று திங்கட்கிழமை தனது கடமையைப் பொறுப்பேற்கின்றார்.

கிளிநொச்சி மாவட்ட அலுவலராக கடமையாற்றிய இவரை திறமை, சேவை, மூப்பு ஆகியவற்றை கருத்தில் மாகாண கிராம அபிவிருத்தி திணைக் களத்தால் இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் மாவட்ட அலுவலராக கடமையாற்றிய இவர் கிராம அபிவிருத்தி சங்கங்களை மிகவும் வினைத்திறனுடன் இயங்க வைத்து வாழ்வாதார நிதி திட்டங்களை செயற்படுத்தி பொதுமக்கள் மத்தியில் நன்மதிப்பை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-254)

# தேக்கு மரக்குற்றிகளுடன் சிலாபத்தில் நால்வர் கைது



(சிலாபம்)

சிலாபம் தெதுறுஓயா திசையிலிருந்து சிலாபம் முகுனுவட்டவான் விலத்தவ பிரதேசத்தை நோக்கி சந்தேகத்திற்கிடமான முறையில் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றை சோனைக்குட் படுத்திய சிலாபம் பொலிஸார் அந்த லொறியிலிருந்து சுமார் ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான தேக்கு மரக் குற்றிகளுடன் அதில் பயணித்த நால்வரையும் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு குறித்த லொறியை நிறுத்துமாறு பொலிஸார் வழங்கிய சைகைய்யைப் பொருட்படுத்தாது அந்த லொறி வேகமாகச் சென்ற நிலையில் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் லொறியைப் பின்தொடர்ந்து துரத்திச் சென்றே மடக்கிப் பிடித்து சந்தேக நபர்களைக் கைது செய்ததாக சிலாபம் பொலிஸார் தெரிவித்தனர்.

சிலாபம் பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவின் சார்ஜனட் மற்றும் கான்ஸ்டபிள் ஆகிய இருவர் தமது கடமைக்குரிய சொகுசு மோட்டார் சைக்கிளில் வேறொரு பணி நிமித்தம் விலத்தவ நோக்கிச் சென்று கொண்டிருந்த போது மிக வேகமாக லொறி ஒன்று தெதுறு ஓயா திசையிலிருந்து விலத்தவ திசை நோக்கி வந்து கொண்டிருந்ததை அவதானித்துள்ளனர்.

பின்னர் அந்த லொறியை நிறுத்துமாறு அவர்கள் சைகை காட்டிய போதும் அந்த லொறி நிறுத்தாது வேகமாகப் பயணித்துள்ளதையடுத்து பொலிஸார் லொறியைப் பின்தொடர்ந்து துரத்திச் சென்று லொறியை மடக்கிப் பிடித்துள்ளனர்.

பொலிஸாரால் கைப்பற்றப் பட்ட லொறியினுள் சுமார் பத்து அடி நீளமும் 3-4 அடிகள் விட்டமும் கொண்ட 12 தேக்கு மரக்குற்றிகள் இருந்துள்ளதுடன் லொறி பதிவு மற்றும் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த தேக்கு மரக்குற்றிகள் தெதுறு ஓயா காட்டில் சட்டவிரோதமாக வெட்டி அனுமதிப்பத்திரமின்றி ஏற்றிச் சென்றிருப்பதாகவும், அவை முகுனுவட்டவான் விலத்தவ பிரதேசத்தில் இயங்கும் மர ஆலைக்கு கொண்டு சென்று கொண்டிருந்துள்ளமையும் விசாரணைகளிலிருந்து தெரிய வந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-12)

# விடுதி உரிமையாளர் கொலை முக்கிய சந்தேக நபர் கைது

(கொழும்பு)

அனுராதபுரம் பகுதியிலுள்ள இரவு விடுதியின் உரிமையாளரும் கராத்தே ஆசிரியருமான வசந்த சொய்சா கொலை செய்யப்பட்ட வழக்கின் பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எஸ்.எப்.லொக்கா என அழைக்கப்படும் இரோன் ரணசிங்க என்ற குறித்த சந்தேகநபர், சிலாபம் பகுதியில் வாகனத்தில் பயணித்துக் கொண்டிருந்த வேளை நேற்று இரவு 07.30 அளவில் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர குறிபிட்டுள்ளார்.

அண்மையில் அனுராதபுரம் பகுதியிலுள்ள இரவு விடுதிக்குள் நுழைந்த சிலர் அங்கிருந்த பொருட்களை சேதப்படுத்தியதோடு, அந்த விடுதியின் உரிமையாளர் வசந்த சொய்சாவையும் கொலை செய்தனர். இந்த சம்பவத்தில் மேலும் சிலர் காயமடைந்திருந்த னர்.

இது தொடர்பில் முன்னதாக 20 திற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், சம்பவத்தின் பிரதான சந்தேக நபராக கருதப்பட்ட எஸ்.எப்.லொக்காவின் சகோதரர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# பதில் பொலிஸ்மா அதிபராக பூஜித்த

(கொழும்பு)

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ மா அதிபர் பூஜித்த ஜெய சுந்தர பதில் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் உகாண்டாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளமையே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி நேற்று தொடக்கம் எதிர்வரும் ஐந்தாம் திகதி வரை பூஜித்த ஜெய சுந்தர பதில் பொலிஸ் மா அதிபராக கடமைகளை மேற்கொள்ளவுள்ளார்.

மேலும் ஐந்தாம் திகதிக்குப் பின்னர் பதில் பொலிஸ் மா அதிபராக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுக்கு பொறுபபான பிரதிப் பொலிஸ் மா அதிபர் எஸ்.எம்.விக்ரமசிங்க செயற்படுவார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (செ-12)

# மரண அறிவித்தல்

## திருமதி ரஞ்சித்குமார் சுகந்தினி



கரம்பொன் கிழக்கு காளி கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**ரஞ்சித்குமார் சுகந்தினி**

நேற்று 01/11/2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நாகராசா உலகாம்பிகையின் அன்பு மகளும் தனபாலசிங்கம் சூரியகலாவின் அன்பு மருமகளும் ரஞ்சித்குமாரின் (குணாலன்) பாசமிகு மனைவியும், நந்தினி (நந்தா), நந்தகோபால்(நந்தன்), நற்குணராசா (சின்னவன்) சுதர்சன் (ராஜன்), தயாளன் (தயா), கஜேந்தினி(கஜந்தா) கிருஸ்ணராசா(கஜந்தன்) ஆகியோரின் சகோதரியும் சுஜிந்தினி(டினு), கஜிந்தினி(அபி), கிஷாந் (குமரன்) ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று 02-11-2015 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பொன் மேற்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

காளி கோவிலடி,
கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்துறை.

தகவல்
குடும்பத்தினர்.

(2224)

# கட்டாக்காலி மாடுகளினால் வடமராட்சி வயல் நிலங்கள் பாதிப்பு

## விரைந்து கவனமெடுக்க விவசாயிகள் கோரிக்கை

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் கால்நடை மாடுகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது.

கரவெட்டி, கரணவாய், கிராய், கப்பூதூது போன்ற பிரதேசங்களில் உள்ள வயல் நிலங்களில் கட்டாக்காலி மாடுகள் அதிகரித்துக் காணப்படுகின்றது.

தற்போது காலபோக நெற்செய்கை என்பதால் அனைத்து வயல் நிலங்களிலும் நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் கால் நடை மாடுகள் இப் பயிர்ச் செய்கையினை தினமும் நாசம் செய்து வருகின்றன.

இதில் குறிப்பாக கட்டக்காலி மாடுகள் மற்றும் வளர்ப்பு மாடுகள் என்பன தினமும் வயல்வெளிகளில் இறங்கி பயிர்ச்செய்கையினை நாசம் செய்கின்றன.


இதுதொடர்பாக மாடுகளின் உரிமையாளர்களிடம் விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டிருந்தும் எந்தவொரு நடவடிக்கையும் உரிமையாளர்களால் எடுக்கப்படாத நிலையில் மாடுகள் மீண்டும் மீண்டும் வயல்களை நாசம் செய்கின்றன.

கட்டக்காலி மாடுகளை விவசாயிகள் பிடித்து விவசாய சம்மேளனங்களிடம் ஒப்படைத்து இருந்த நிலையிலும் வளர்ப்பு மாடுகளை கட்டுப்பாட்டுக்கள் கொண்டு வர முடியாத நிலையிலே உள்ளது.

அத்துடன் இதுதொடர்பாக விவசாய சம்மேளனங்களில் விவசாயிகளால் முறையிடப்படும் எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை இடம்பெறவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பில் விவசாய சம்மேளனங்கள் விரைந்து கவனமெடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கேட்டுக் கொள்கின்றனர். (செ-5,60)


# யாழ். உயர் தொழில்நுட்பவியல் மாணவர்கள் கவனயீர்ப்பு போராட்டம்



கொழும்பில் கடந்த வாரம் உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறி மாணவர்கள் நடத்திய ஊர்வலத்தின் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலை கண்டித்து யாழ். உயர் தொழில்நுட்பவியல் கல்லூரி மாணவர்கள் நேற்றைய தினம் தமது விரிவுரைகளை புறக் கணித்து கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை யாழ். உயர் தொழில்நுட்பவியல் கல்லூரி முன்றலில் மேற்கொண்டனர்.

மாணவர்கள் மீதான தாக்குதல் மிகவும் கண்டிக்கத் தக்கது என்றும் இவ்வாறான செயற்பாடுகள் இனி இடம் பெறக் கூடாது என்றும் பல்வேறு சுலோகங்களை கைகளில் ஏந்தியவாறு நேற்றைய தினம் முழுவதும் விரிவுரைகளை புறக்கணித்து அனைத்து மாணவர்களும் இப் போராடத்தில் கலந்து கொண்டனர். (படங்கள் பொ. சோபிகா)



## சர்வகட்சி யோசனைக்கு அமைய அரசியல் அமைப்பில் சீர்திருத்தம்

### பிரதியமைச்சர் விக்கிரமரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பு சீர்த்திருத்தமானது சர்வகட்சி யோசனைக்கு அமையவே மேற்கொள்ளப்படும் என்று பிரதி அமைச்சர் ஏரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது ஐ.நா. தீர்மானம் தொடர்பில் சர்வகட்சி கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அரசியலமைப்பு சீர்த்திருத்தம் செய்யப்படும் வரை இந்தக் கலந்துரையாடல் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐ.நா. தீர்மானம் தொடர்பில் எமது அரசியலமைப்புக்கு அமைவாக உள்ளகப் பொறிமுறையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்பதே அரசின் நிலைப்பாடு. இது தொடர்பில் சர்வகட்சிகளினதும் யோசனைகளையும் அதற்கான தீர்வுகளையும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரியிருந்தார்.

இது தொடர்பில் ஐ.தே.கவின் நிலைப்பாடே அரசின் நிலைப்பாடாகும். ஆகவே, யோசனைகளை நாங்கள் தெரிவிக்கவில்லை.

எனினும், இந்த சர்வகட்சி கலந்துரையாடல்களானது அரசியலமைப்பு சீர்த்திருத்தம் செய்யப்படும் வரை தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்; மாத்தறையில் மகிந்த குமுறல்

(கொழும்பு)

அரச தலைவர் என்ற ரீதியில் நாட்டிற்காக தான் முன்னெடுத்த தீர்மானங்களை கேலிக்குட்படுத்துகின்றமை, நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் நடவடிக்கை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாத்தறை ஹக்மன பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலபகுதியில் எந்தவொரு தாக்குதலையும் எதிர்கொண்டு, நாட்டைமுன்னோக்கிகொண்டு செல்வதற்காகவே ஜனாதிபதி நிலக்கீழ் மாளிகை நிர்மாணிக்கப்பட்டதாகவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்தார்.

நிலத்திற்கு கீழ் மாளிகை. என்று இன்று கூறினாலும் உண்மையில் அது ஒரு பதுங்குழி என அவர் தெரிவித்துள்ளார்.

அந்த பதுங்குக்குழியில் தாங்கள் கூட்டங்கள் நடத்தியதாகவும், ஒன்று அல்லது இரண்டு வாரங்கள் தொடர்ந்து தாக்குதல் மேற்கொண்டால் அவற்றில் இருந்து தங்களை காப்பாற்றிக் கொள்ளவே அவ்வாறான ஒரு பதுங்கு குழியை நிர்மாணித்ததாகவும் மகிந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## வெள்ளைக்கொடி விவகாரம் குறித்த குற்றச்சாட்டை மறுக்கிறார் கோத்தா

விடுதலைப்புலிகளின் சமாதான செயலாளர் புலித்தேவனை காப்பாற்றுவதற்காகவே வெள்ளைக்கொடி சரணடைதல் சம்பவத்தை முன்னாள் அரசாங்கம் ஏற்பாடு செய்ததாக கூறப்பட்ட குற்றச்சாட்டை, முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நிராகரித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்தக்குற்றச்சாட்டை சுமத்தியிருந்தார்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறும் நோக்கில் வடக்கு, கிழக்கு மக்களை வாக்களிக்காமல் தடுக்க விடுதலைப் புலிகளுக்கு மகிந்த தரப்பினர் பெருந்தொகை பணத்தை வழங்கியதாக குற்றச் சாட்டுக்கள் எழுந்திருந்தன.

இதன்போது குறித்த பணப் பரிமாற்றம் புலித்தேவனுக்கு ஊடாகவே மேற்கொள்ளப்பட்டதாக ரணில் குற்றம் சுமத்தியிருந்தார்.

எனவே புலித்தேவனை காப்பாற்றும் நோக்கிலேயே இறுதிக்கட்ட போரின் போது வெள்ளைக்கொடி ஏந்தி சரணடைய புலித்தேவனுக்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டதாக ரணில் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை கோத்தபாய மறுத்துள்ளார்.

அத்துடன் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட ஒரு ஒப்பந்தம் என்ற குற்றச்சாட்டையும் கோத்தபாய மறுத்துள்ளார்.(இ-7-10)

## ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு இதுவரை 1157 முறைப்பாடுகள்

(கொழும்பு)

பாரிய மோசடிகள் தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு பொதுமக்களிடமிருந்து 1157 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் தொடக்கம் 2015 ஆம் ஆண்டு ஜனவரி வரையான காலப்பகுதிக்குள் நடைபெற்ற மோசடிகள் தொடர்பாக விசாரிக்கும் அதிகாரம் மட்டுமே குறித்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு முன்னைய வருடங்களின் மோசடிகள் தொடர்பில் ஆராய ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இல்லை என்றும் பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## கராத்தே வீரர் படுகொலை தொடர்பாக கைதான 27பேருக்கும் விளக்கமறியல்

அநுராதபுரம் இரவு விடுதியின உரிமையாளரான கராத்தே வீரர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இதுவரை 27 பேர் கைது செய்யப்பட்டு, அவர்கள் எதிர்வரும் நவம்பர் மாதம் 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்தக் கொலை சம்பவத்தை திட்டம் தீட்டிய இரண்டு சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்ட நிலையில், அவர்களில் ஒருவர் கைது செயயப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துடன், இராணுவத்திலிருந்து தப்பியோடிய இரோன ரணசிங்க என்ற சந்தேகநபரும் இந்த கொலையுடன் தொடர்புப்பட்டுள்ளதாகவும், அவரை கைது செய்வதற்கான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தங்காலை பகுதியில் நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டதாகவும், அவர் இரோன் ரணசிங்கவின் சகோதரன் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

அநுராதபுரம் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்த நிலையிலேயே இவர் இன்று கைது செய்யப்பட்டுள்ளதுடன், தங்காலை பொலிஸார் அவரை அநுராதபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)

## பல்கலைக்கழக வளாகத்தினுள் போதைப்பொருள் விநியோகம்

மொறட்டுவை பல்கலைக் கழக வளாகத்தில் ஹெரோயின் விநியோகித்த குற்றச்சாட்டில் அங்கு கடமையாற்றிய முன்னாள் ஊழியர் ஒருவர் 3600 ஹெறோயின் பக்கற்றுகளுடன் மொரட்டுமுல்ல பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப் பொருளை கொள்வனவு செய்வதற்காக வருகை தந்த ஹைபிட் காரொன்றின் உரிமையாளர், கொட்டாவை கல்கிஸை மார்க்கத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள பேருந்தின் நடத்துநர் மற்றும் சாரதி ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள்விநியோகத்தில் ஈடுபட்டதாக கூறபபடும் சந்தேகநபர் மொறட்டுவை மற்றும் ஜயவர்தனபுர பல்கலைக் கழகங்களில் சேவையாற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வர்த்தகத்தில் ஈடுபட்ட நபர் கட்டுபெத்த பகுதியைச் சேர்ந்தவர் எனவும், பேருந்தின் சாரதி, நடத்துநர் மற்றும் காரின் உரிமையாளர் ஆகியோர் பண்டாரகம, சுவாரிபொல, கெஸ்பேவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள போதைப்பொருள் விநியோகத்தருக்கு எதிராக கல்கிஸை நீதிமன்றத்தில் ஏற்கனவே வழக்கு விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும், அவர் இடைக்கிடையே பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் தொலைபேசி அழைப்புக்களின் மூலம் இந்த போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-7-10)

# இயல்புநிலை...

சில காலத்திற்கு முன்னர் வட பகுதியில் காணப்பட்ட பல காட்டு மரங்கள், பனை மரங்கள், தென்னை கள் எனப் பெருவாரியான மரங்கள் வெட்டப்பட்டு Bunkerகளுக்கும், எல்லை வேலிகளுக்குமெனப் பய ன்படுத்தப்பட்டன. மேலும் காட்டு மரங்கள் பல தீராந்திகள், பலகை கள், விறகுத் தேவைகளுக்காக வென அனுமதியுடனும், களவாக வும் வெட்டி அழிக்கப்பட்டன. இத னால் நாட்டில் மழையில்லாமற் போனது.

போரின் நிமித்தம் சுவாசிக்கச் சுத்தமான காற்று இல்லாமற் போனது. பறவையினங்கள் கூடு கட்டி வாழ்வதற்கான சந்தடியில் லாத இடங்கள், நீர்க்கரையோர ங்கள் இல்லாமற்போயின. நாடு விட்டு நாடு மாதக்கணக்காகப் பற ந்து வந்து சேர்கின்ற சைபீரியன் தாராக்கள் போன்ற பறவைகள் தங்குவதற்கு ஏற்ற இடமில்லாமற் போனது. காட்டு யானைகள் அமைதியாகத் தங்குவதற்கும், தமக்குரிய உணவுகளை பெற்றுக் கொள்வதற்கும் ஏற்ற சூழல் இல்லா மற் போனது. இதனால் அவை ஊர்மனைகளுக்குள் புகுந்து தென் னந்தோப்புக்கள், வாழைத் தோப்பு க்களை அழித்தது மட்டுமன்றி மக்களையும் கொன்று வந்தன, வருகின்றன. ஆகவே மாற்றப்பட வேண்டிய ஒரு அவசர நிலை இவற்றால் ஏற்பட்டுள்ளது. போர் முடிவுக்கு வந்த போதும் இயல்பு நிலை இன்னும் திரும்பவில்லை. கடந்தகாலத் தவறுகளைச் சீர்செய்ய வேண்டியுள்ளது.

ஆண்டவன் படைப்பில் எல்லா உயிரினங்களுக்கும் அமைதியாக வாழ்வதற்கு உரித்துண்டு. ஆனால் மனிதர்களின் தான்தோன்றித்தன மான போக்குகளால் இயற்கையின் சமநிலை பாதிப்படைந்துள்ளது.

மரங்களின் வேர்களினால் உறிஞ்சப்படுகின்ற நீர் ஆவியாகி மேலே செல்வதாலேயே மழைவீழ் ச்சி கூடுதலாகக் கிடைக்கின்றது. தெற்கில் உள்ள சிங்கராஜ காடுகள் போன்றவற்றில் காணப்படுகின்ற பெருமரங்களின் காரணமாகவே அங்கு மழை வீழ்ச்சி கூடுதலாகக் காணப்படுவதுடன் நீர்ச்சக்கர சுழ ற்சி முறையும் பேணப்படுகின்றது.

காட்டில் காணப்படுகின்ற பெரிய புல்வெளிகள் பல மிருகங்களின் உணவுத் தேவைக்கான பிரதான காரணியாக இருக்கின்றபோதும் அவற்றிடையே பெரிய மரங்கள் வளர்ந்து நிழல் கொடுக்கின்ற போது இப் புல்வெளிகள் அழிவதற் கான சாத்தியக்கூறுகள் காணப்படு கின்ற போதும் காட்டு யானைகள் இப்பெரிய மரங்களின் இலை குழை களைத் தமது உணவாக உள்கொள கின்ற போது இப்புற்தரைகள் பாது காக்கப்படுகின்றன. ஏனைய மிருக ங்களுக்கும் உணவு கிடைக்கி ன்றது. இது இயற்கையால் ஏற்படு த்தப்படும் சமநிலை. இன்று அள வுக்கதிகமான இரசாயன உரப் பாவனையால் நிலத்தடி குடிநீரில் Nitrates அளவுக்கதிகமாகி நில த்தடி நீர் குடிப்பதற்கு ஒவ்வாததாகி விட்டது. இதைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் எமக்குண்டு. கனிப்பொருட்களின் சுழற்சிக்கு தாவரங்கள் எவ்வளவு முக்கிய மென்பதையும் நாம் கணக்கில் எடுக்க வேண்டும். இரசாயன உரப் பாவனையைக் கட்டுப்படுத்தி இய ற்கைப் பசளைகளை உருவாக் குவதற்கும் விறகுத் தேவைக ளைப் பூர்த்தி செய்வதற்கும் மரங் களை உருவாக்க வேண்டியது எமது பாரிய பொறுப்பாகி வந்து ள்ளது.

இந்த நவம்பர் மாதத்தில் ஐந்து லட்சம் மரக்கன்றுகளை நடவுள் ளோம். வீட்டிற்கு ஒரு மரம் நடுவ தன் மூலம் நாட்டைக் காப்போம் என்பதை சுலோகங்கள் மட்டில் மட்டும் கூறிக் கொண்டிருக்காது ஒவ்வொருவரும் தமது வீட்டில், தோட்டத்தில் ஆகக்குறைந்தது ஒரு மரத்தையேனும் நடுவதன் மூலம் பல நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் வீட்டு க்கு ஒரு மரம் என்பது கட்டாயமாக் கப்பட்டுள்ளது. ஏதோ ஒரு காரண த்தால் வீட்டில் உள்ள ஒரு மரம் பட் டுப் போய் விட்டால் உடனடியாக இன்னோர் மரம் நாட்டப்பட்டு விட வேண்டும் என்பது இது அந்நாட்டுச் சட்டம்.

இயற்கையோடு ஒன்றி வாழ அவர்கள் எத்தனிக்கின்றார்கள். ஆனால் சிலர் எம்மிடையே கூட மரங்களை அழிப்போம். மனைக ளைக் கட்டுவோம் என்று இயற்கை யைப் பாழாக்கி வருகின்றார்கள். அண்மையில் எமது வன்னிக் காட் டில் இருக்கும் காடுகள் பற்றிய கூகுள் படம் ஒன்றைப் பார்க்க நேர் ந்தது. மன்னாரில் நானாட்டானில் இருந்து முல்லைத்தீவு வரையில் ஒரு கோடு கீறினோமானால் அந் தக் கோட்டின் நடுவில் பல இடங்க ளில் காட்டினுள் களவாக காட்டு மரங்கள் வெட்டப்பட்டு நிலமானது வெளியாக்கப்பட்டுள்ளதைக் கூகுள் படம் பளிச்சென்று காட்டியது.


யார் இதைச் செய்கின்றார்கள், விலையுயர்ந்த காட்டு மரங்கள் எவ்வாறு களவாகக் கடத்திச் செல்ல ப்படுகின்றன, வன இலாகா அதிகா ரிகளும் வனவிலங்குகள் திணை க்கள அதிகாரிகளும் என்ன செய்கி ன்றார்கள், ஏது செய்கின்றார்கள் என்பதை நாம் அறிய முடியாமல் இருக்கின்றது. இவை மத்திய அர சாங்கத்தின் கீழ்வரும் திணைக் களங்கள். அரசியல் செல்வாக்கு டன்தான் இந்தக் காட்டை அழிக் கும் கைங்கரியம் கைகூடி வருகி ன்றது என்பது கண்கூடு. இந்த இட ங்களில் எல்லாம் யாரைக் குடிய மர்த்தப் போகின்றார்கள் என்பது கேள்விக் குறியாக இருக்கின்றது.

காட்டின் நடுவே மொட்டை யாக்கப்படும் இடங்கள் மீளவும் மர ங்கள் வளர்த்துப் பாதுகாக்கப்பட வேண்டும். எமது வன இலாகா அலுவலர்கள் இனியாவது விழி த்துக் கொள்வார்கள் என்று நம் புகின்றேன். அத்திணைக்களத்தின் பணியாளர் வெற்றிடங்களுக்குப் பெருவாரியாக வடமாகாணத்துக்கு வெளியில் இருந்து ஊழியர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றும் கேள்விப் படுகின்றேன். வெளியில் இருந்து வருபவனுக்கு எமது இய ற்கை நிலையைப் பேணிக்காக்க வேண்டும் என்ற எண்ணம் இரு க்காது. இவர்களால் எம்மக்களின் வேலைவாய்ப்புக்கள் தடைப்படு கின்றன.

இவ்வாறான சிக்கல்கள் மத்தி யில்தான் நாங்கள் மரம் நாட்டும் இந்தக் கைங்கரியத்தை நேற்று ஆர ம்பித்துள்ளோம் என்றார். (செ-12)

சார்ஜா டெஸ்ட்

## அண்டர்சன், பிரோட் வேகத்தில் பாகிஸ்தான் 234 ஓட்டங்களில் சுருண்டது



இங்கிலாந்தின் வேகப் புயல் களான அண்டர்சன், பிரோட்டின் பந்து வீச்சு சூறாவளிக்குள் சிக்கி பாகிஸ்தான் அணி 234 ஓட்ட ங்களுக்கு ஆட்டமிழந்தது.

ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு சுற் றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி அங்கு பாகிஸ் தான் அணியுடன் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கு பற்றுகிறது.

இத்தொடரின் முதல் இரு டெஸ்ட போட்டிகளின் முடிவில் பாகிஸ் தான் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில் பாகிஸ்தான்- இங்கிலாந்து அணிகளுக்கு இடை யிலான 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் சார்ஜாவில் நேற்று ஆரம்ப மானது.

நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா உல் ஹக் முதலில் துடுப் பாட்டத்தை தேர்வு செய்தார்.

அதன்படி மொகமட் ஹபீஸ், அசார் அலி ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

அண்டர்சனின் அதிவேக பந்து வீச்சில் அசார் அலி ஓட்டமேதும் எடுக்காமல்டக் அவுட்டாகி வெளியேறி னார். அடுத்து சொகைப் மாலிக் களம் இறங்க,

ஹபீஸ் 27 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மொயீன் அலியின் சுழ லில் வெளியேற, 3ஆவது விக் கெட் டுக்கு மாலிக்குடன் யூனிஸ் கான் ஜோடி சேர்ந்தார்.

மாலிக் 38 ஓட்டங்கள் எடுத்து அண்டர்சனின் பந்திலும், யூனுஸ் கான் 31 ஓட்டங்கள் எடுத்த நிலை யில் பிரோட்டின் பந்திலும் ஆட்ட மிழந்தனர்.

அடுத்து அணித்தலைவர் மிஸ்பா உல் ஹக் களம் இறங்கி சிறப்பாக விளையாடினாலும் மறுமுனை யில், அசாத் ஷபிக் 5, சர்ப்ராஷ் அக மட் 39, வஹாப் ரியாஸ் 0, யாசீர் ஷா 7 என விரைவாக வெளியேறினர். தாக்குப்பிடித்து ஆடிய அணித் தலைவர் மிஸ்பா 71 ஓட்டங்கள் எடு த்து 9ஆவது விக்கெட்டாக ஆட்ட மிழந்தார்.

இறுதியில் பாகிஸ்தான் அணி தமது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 234 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பில் அண்டர்சன் சிறப் பாக பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களும் பிரோட், மொயின் அலி, பட்டேல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களும் கைப் பற்றினர்.

பின்னர் முதல் இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் 2 ஓவர்களை எதிர் கொண்டு விக்கெட் இழப்பின்றி 4 ஓட்டங்களை எடுத்துள்ளது.

களத்தில் அணித் தலைவர் குக் (0), மொயீன் அலி (4) உள்ளனர்.

போட்டியின் 2ஆம் நாள் ஆட் டம் இன்றாகும்.

8ஆவது உலகக் கிண்ண ரக்பி தொடர்

## ஆஸியை 34-17 என்ற புள்ளிகள் கணக்கில் வீழ்த்தி 3ஆவது தடவையாக சம்பியனாகியது நியூசிலாந்து






சக வீரர் டான் காட்டேயுடன் கிண் ணத்தை பகிரும் அணித் தலைவர் றிச்சி மக்கே



பிரித்தானிய இளவரசர் வில்லியம் ஸிடம் இருந்து கிண்ணத்தை பெறும் நியூசிலாந்து அணித் தலைவர் றிச்சி மக்கே

8வது உலகக் கிண்ண ரக்பி தொடரில் நடப்புச் சம்பியன் நியூ சிலாந்து அணி சம்பியனாகியது.

• நேற்று முன்தினம் சனிக் கிழமை நடைபெற்ற வெற்றியா ளரை தீர்மானிக்கும் இறுதிப் போட் டியில்,

அவுஸ்திரேலிய அணியை 34-17 என்ற புள்ளிகள் கணக்கில் வெற்றி கொண்ட நியூசிலாந்து அணி 3ஆவது முறையாக சம்பிய னாகியது.

இந்தியா - பாகிஸ்தான், அவுஸ் திரேலியா- இங்கிலாந்து இடையே கிரிக்கெட் போட்டி நடைபெற்றால் எவ்வளவு பரபரப்பு காணப்படு மோ, அதேபோல்தான் அவுஸ் திரேலியா கண்டத்தில் அமைந் துள்ள அவுஸ்திரேலியாவுக்கும், நியூசிலாந்துக்கும் இடையில் எந்த வொரு போட்டி நடைபெற்றாலும் அதிக எதிர்பார்ப்பு நிலவும்.

இருநாட்டு வீரர்களும் ஆடு களத்தில் எலியும் பூனையுமாக மோதிக் கொள்வார்கள். அப்படி ஒரு வாய்ப்பு ரக்பி இறுதிப் போட்டி யில் அமைந்தது.

லண்டனில் நேற்று முன்தினம் ரக்பி இறுதிப்போட்டி நடைபெற்றது. இதில் நியூசிலாந்து - அவுஸ் திரேலிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இதில் நியூசிலாந்து சிறப்பாக விளையாடி 34-17 என்று அவுஸ் திரேலியாவை வீழ்த்தி 3ஆவது முறையாக சம்பியனாகியது.

வெண்கல பதக்கத்துக்கான இறுதிப் போட்டியில் தென்னா பிரிக்க அணி 24 - 13 என்ற கண க்கில் ஆர்ஜென்ரினா அணியை வெற்றி கொண்டது

# காட்டிக் கொடுப்பு குற்றச்சாட்டை
# நான் ஏற்க மாட்டேன்

## அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

(கொழும்பு)

**2012 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனீவா கூட்டத் தொடரில் அரசாங்கத்தின் நீதியமைச்சராக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பங்கு கொண்டமை, தமிழ் மக்களுக்கு எதிரான காட்டிக்கொடுப்பு என்று கூறப்படுகின்றமையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 25 வருடங்கள் நிறைவடைவதை நினைவுகூரும் வகையில், கொழும்பில் கடந்த வெள்ளிக்கிழமை முஸ்லிம் காங்கிரஸினால் கருத்தரங்கொன்று நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமையின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் விருந்தினர்களில் ஒருவராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். அதன் போது, ஜெனிவா கூட்டத்தொடரில் 2012 ஆம் ஆண்டு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச் சர் ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டமை, தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்த காட்டிக் கொடுப்பு நடவடிக்கை என்று அவர் விமர்சித்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் அந்த விமர்சனம் தொடர்பில் கருத்துக் தெரிவுக்கும் போதே, அமைச்சர் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில், அமைச்சர் ஹகீம் மேலும் தெரிவிக்கையில்,

"ஜெனிவா கூட்டத்தில் நான் பங்குபற்றிமையை வைத்துக் கொண்டு, முஸ்லிம் காங்கிரஸ் தலைமை தமிழ் சமூகத்துக்கு எதிராக காட்டிக்கொடுப்பொன்றினை மேற்கொண்டது எனக் கூறுவதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

முஸ்லிம் காங்கிரஸினுடைய அரசியல் தீர்மானங்கள், தமிழ் தரப்புக்களால் பல தடவை விமர்சிக்கப்படுகின்றவையாகவும், ஜீரணிக்க முடியாதவையாகவும் இருந்தமையை நாங்கள் மிகத் தெளிவாக அறிந்து வைத்திருக்கின்றோம்.

ஒரு கட்சி என்கின்ற வகையில் அரசாங்கத்துடன் சேர்வதற்கோ, விலகுவதற்கோ எடுக்கின்ற தீர்மானங்கள், எங்கள் கட்சியில் எடுக்கப்படுகின்ற பல்வேறு கலந்துரையாடல்களினூடாக மேற்கொள்ளப்படுகின்றன.



இந்த ஒவ்வொரு சந்தரப்பத்திலும் எங்களுடைய நியாயப்படுத்தல்களை மாற்று அரசியல் கட்சிகள் ஏற்றுக்கொள்வதென்பது இயலாததாக இருக்கக் கூடும்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் - நீதியமைச்சர் என்ற அந்தஸ்தில் இருந்து கொண்டு, நீதியமைச்சு சார்ந்த விடயங்களுக்கு பதில் கூற வேண்டியிருந்ததால்தான், அப்போது நான் ஜெனிவா செல்வது தவிர்க்க முடியாததாக இருந்தது.

மேலும், ஜெனிவா கூட்டத் தொடர் கருத்தாடல்களின்போது, பூரணமானதொரு மனிதவுரிமை விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பது குறித்த விடயத்தை அங்கு நான் வலியுறுத்தியிருந்தேன் என்பதையும் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

மேலும், இறுதிக் கட்ட யுத்தத்தின்போது நடந்த விவகாரங்கள் தொடர்பிலும், நல்லிணக்கம் சம்பந்தமான விடயங்களின் போதும், அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் நான் அங்கு சுட்டிக்காட்டியிருந்தேன் என்பதையும் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

மேலும், இறுதிக் கட்ட யுத்தத்தின்போது நடந்த விவகாரங்கள் தொடர்பிலும், நல்லிணக்கம் சம்பந்தமான விடயங்களின் போதும், அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் நான் அங்கு சுட்டிக்காட்டியிருந்தேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## நாடக கீர்த்தி பட்டம் வழங்கல்



மலையக கலை கலாசார சங்கத்தினரால் கண்டி கெப்பிட்டிப்பொல கலாசார மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்ட கௌரவிப்பு நிகழ்வில் உபய கதிர்காமம் புலோலி தெற்கைச் சேர்ந்த சமாதான நீதவான் சாமசிறி சதாசிவம் வல்லிபுரநாதன் "நாடக கீர்த்தி" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான கௌரவிப்பினையும் பட்டத்தினையும் கண்டி இந்திய துணை உயர்ஸ்தானிகர் திருமதி ராதா வெங்கட்ராமன் வழங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 5ம் தர வெட்டுப்புள்ளியில் மாற்றம் ஏதுமில்லை

இவ்வருடம் நடைபெற்ற 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளுக்கான ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வெட்டுப்புள்ளியில் எந்த மாற்றமும் இல்லை என கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

வெட்டுப்புள்ளிகள் உயர்த்தப்பட்டுள்ளதால் பெருமளவு மாணவர்கள் பரீட்சையில் சித்தியடைய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தினால் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கடந்த வியாழக்கிழமை மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டிருந்தது.

இது பற்றி கருத்துத் தெரிவித்த அமைச்சர், வெட்டுப் புள்ளியில் அந்தவித தவறும் ஏற்படவில்லை. சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாக கல்வி அமைச்சு கவனம் செலுத்தும் . அத்துடன் பெற்றோர் தமது பிள்ளைகளை தமது வசிப்பிடத்திற்கு அருகிலு ள்ள பாடசாலைகளில் அனுமதிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (3)

## 60 வயதுக்கு மேற்பட்டோரில் 5ல் ஒருவர் உளவியல் உபாதையை எதிர்நோக்குகிறார்

இலங்கையில் 60 வயதுக்கும் மேற்பட்டவர்களில் 5 பேரில் ஒருவர் ஏதோ ஒரு உளவியல் உபாதையை எதிர்நோக்குவதாக கொழும்பு தேசிய வைத்தியசாலை மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

துயரம், வெறுப்பு ஆகியன காரணமாக ஏற்படும் மன அழுத்தங்கள் பெரியவர்களிடையே அதிகளவில் காணப்படுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்த மனநிலையிலான நோய்க்கு உரிய சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை என்றால், அவர்கள் வலிப்பு நோயினால் பாதிக்கப்படக் கூடிய ஆபத்து இருப்பதாக நரம்பியல் மருத்துவர் பத்ம குணரத்ன தெரிவித்துள்ளார்.

வயது முதிர்ந்தவர்களில் 15 வீதமானவர்களின் மூளையில் நரம்பு செல்கள் இறந்துள்ளதால், அவர்கள் டிமென்ஷியா என்ற நோய பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

வயது முதிர்ந்தவர்கள் தனிமையில் இருப்பதால், அவர்கள் மன ரீதியான நோய்களுக்கு உள்ளாவதாகவும் இதனால், அவர்களை தொடர்ந்தும் மகிழ்ச்சியுடன் நோய்கள் இன்றி இருக்க வழிவகை செய்ய வேண்டும் எனவும் மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (இ-7-10)

## லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபரிடம் விசாரணை

சண்டேலீடர் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஒருவர் விசாரணை செய்யப்படவுள்ளார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் ஜெயந்த விக்கிரமரட்ன மற்றும் கல்கிஸை பொலிஸ் நிலையத்தை சேர்ந்த பல அலுவலர்களிடம் இந்த கொலை தொடர்பில் விசாரணை செய்யப்படவுள்ளனர்.

ஏற்கனவே இந்தக்கொலை தொடர்பில் விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட விக்கிரமதுங்கவின் குறிப்பு புத்தகம் பொலிஸில் இருந்து காணாமல் போயுள்ளது. அத்துடன் கொலை தொடர்பிலான பல சாட்சியங்களும் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கொலை தொடர்பில் முன்னதாக விசாரணை செய்யப்பட்ட இராணுவப்புலனாய்வின் அலுவலர் கந்தேகெதர பிரியவன்சவை மீண்டும் விசாரணை செய்ய சிஐடியினர் சட்டமா அதிபரின் ஆலோசனையை கோரியுள்ளனர்.

ஏற்கனவே இவர்சட்டமா அதிபரின் ஆலோசனையின்பேரில் பிணையில் செல்ல அனுமதிக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-7-10)

## ராசி பலன்

**02.11.2015**
(ஐப்பசி 16, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு,
சஷ்டி முற்பகல் 10.17 மணிவரை
புனர்பூசம் முன்னிரவு 9.52 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
சுபமுகூர்த்த நாள்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | சந் |
| | கிரகநிலை சந்திராஷ்டமம் அனுசம்-கேட்டை மாலை 3.46 இற்கு கட-சந் | | |
| | | | குரு செவ் சுக் |
| | சனி | சூரி, புத | ராகு |

**மீனம்** – பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், ஆசைகள் நிறைவேற ஆனைமுகனை வழிபட வேண்டிய நாள், தொழில் வளர்ச்சியுண்டு.

**மேடம்** – சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்** – தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், உள்ளம் மகிழும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** – சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், தொழிலில் உயரதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், ஆழ்ந்த சிந்தையுண்டு, கணபதி வழிபாடு காரிய வெற்றி தரும்.

**கும்பம்** – ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**கடகம்** – கொடுக்கல் -வாங்கல்களில் கவனம் தேவை, பயணத்தால் பலன் கிடைக்கும், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**மகரம்** – நினைத்த காரியம் நிறைவேறும் நாள், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்** – சுப காரியச் செலவுகள் அதிகரிக்கும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொருளாதார நிலை திருப்திகரமாக அமையும், மாற்றங்களால் ஏற்றம் காணும் நாள்.

**தனுசு** – முக்கியமான விடயங்களை காலை நேரத்திலேயே செய்வது நல்லது, மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், சஞ்சலங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்** – தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும் வாய்ப்புண்டு, சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**துலாம்** – குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், தூரதேச் செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**கன்னி** – சகோதர வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், செல்வ நிலை உயரும், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, தடைப்பட்ட காரியங்கள் கைகூடும்.

# மாவீரர்களின் நினைவாக

# விடுதலையின் குறியீடாகவுள்ள மரங்களை நாம் நாட்டுவோம்

## வடக்கு விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

**எங்களுடைய சகோதரர்கள் எங்களுக்காக உயிரிழந்த நினைவாக இந்த கார்த்திகை மாதம் உள்ளது. மாவீரர்களின் நினைவாக தமிழ்மக்களின் கண்ணீரால் நிரம்புகின்ற மாதமாகவும் இம்மாதம் உள்ளது. இந்தப் புனிதமான மாதத்தில் அனைவரும் ஒன்றிணைந்து விடுதலையின் குறியீடாகவுள்ள மரங்களை நாட்டுவோம் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

செம்மணிப் பகுதியில் நேற்றைய தினம் நடைபெற்ற மரம் நடுகை ஆரம்ப வைபவத்தில் உரையாற்றும் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மரநடுகை நிகழ்ச்சியென்பது ஊர்கூடி தேரிழுக்கும் நிகழ்ச்சியாகும்.

எங்களுக்கு வழிகாட்டியவர்கள் எங்களுடைய முன்னோர்கள். அவர்கள் ஒப்படைத்த பணியை நாங்கள் நிறைவேற்றிக்கொண்டுள்ளோம்.

தனியொரு அமைச்சோ மாகாண சபையோ செய்ய முடியாத வேலையை ஒட்டு மொத்த சமூகத்தினையும் எங்கள் பால் திரட்டி இத்திட்டத்தை நிறைவேற்றி வருகின்றோம்.

இயற்கை எங்களுக்கு எவ்வாறு உதவும் என்ற சுயநல நோக்குடனேயே நாம் மரங்களை நாட்டுகின்றோம்.

இது தவறு, இயற்கையின் ஒரு அங்கம்தான். மனிதர்கள் ஏராளமான நுண்ணுயிர்களின் கூட்டமைப்பே இயற்கை. இதனை மனிதன் புரிந்து கொள்ளவேண்டும். இயற்கையினை எவ்வாறு மனிதன் ஆக்கிரமித்தானோ இவ் ஆக்கிரமிப்பு பரிணாமம் பெற்றுஇனங்களுக்கிடையில் ஆக்கிரமிப்பை ஏற்படுத்தியுள்ளன.

எவ்வாறு எங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பை நாங்கள் எதிர்த்து விடுதலைக்காக போராடினோமோஅதேபோல் இயற்கை மீதான ஆக்கிரமிப்பையும் எதிர்த்து போராட வேண்டும்.

மரங்களை அழித்து கட்டடங்களைக் கட்டியெழுப்பி வருகின்றோம்.

மரம் நாங்கள் வாழ்ந்த வீடுகள் மட்டுமல்ல, நாங்கள் வணங்கும் தெய்வங்கள் கூடவாகும்.

மரத்திற்கு அற்புதமான பெயரொன்றை வைத்துள்ளோம். தாவரம் என்று சொல்லி வரம் தா என்று சொல்லி மரங்களை வணங்கியதால் தான் மரங்களுக்குத் தாவரம் என பெயர் வரக்காரணமாகும்.

மரங்களை வழிபட்ட நாங்கள், பிறந்த நாளின் போதும் கூட்டங்களின் திறப்பு விழாக்களின்போதும் வெவ்வேறு நிகழ்வுகளுக்கு மரங்களை நாட்டி வருகின்றோம்.

இவற்றுக்கெல்லாம் மேலாக மரணித்தவர்கள் நினைவாகவும் மரங்களை நாட்டுகின்ற வழக்கம் எம்மிடம் இருக்கின்றது.

நடைபெற்று முடிந்த போராட்டத்தில் எங்களுக்காக உயிர் நீத்த எங்கள் சகோதரர்களை நினைவுகூரும் முகமாக கார்த்திகை மாதத்தில் மாவீரர் தினமொன்று அனுஷ்டித்து வருகின்றோம்.

ஒரு கூட்டு நினைவாக இந்தக் காலப்பகுதியினை நாம் அடையாளப்படுத்தியுள்ளோம்.

கூட்டு வணக்க நிகழ்வில் நாமும் எமது உறவுகளை நினைத்து கண்ணீரால் நனைகின்ற மாதமாக இந்த் கார்த்திகை மாதம் உள்ளது.

இந்த மண்ணில் மறக்க முடியாத ஒரு சம்பவத்தைக் கொண்டுள்ளோம். 1995 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த பின்னர் சீருடையில் சென்ற பாடசாலை சிறுமியான கிருஷாந்தி என்ற சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்தி புதைத்த புதை குழி இந்தசெம்மணிபிரதேசம்தான்.

கிருஷாந்தி மட்டுமல்ல ஆயிரமாயிரம் மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். மரம் நடுகை வெறுமனே சம்பிரதாயபூர்வமான நிகழ்வல்ல. எங்களது உணர்வுகளோடு இணைந்த நிகழ்வாகும்.

விடுதலையின் குறியீடு மரமாகும். ஆகவே நாங்கள் அத்தனை பேரும் ஒன்றிணைந்து எமது விடுதலையை நோக்கி 5 இலட்சம் மரக்கன்றுகளை நாட்டுவோம் என்றார் அமைச்சர். (இ-4)

















மாவீரர்கள் நினைவாக மரம் நடுகை திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றையதினம் யாழ்.செம்மணிப்பகுதியில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் இம்மரம் நடுகை திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்ததோடு மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றிருந்தன. (படங்கள்:-உ.சாளின்)

## வாழும் கலைப்பயிற்சி

யாழ் வாழும்கலை அமைப்பின் ஊடாக நடத்தப்படும் வாழும் கலைப்பயிற்சி இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை மாலை 5.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை சட்டநாதர் கோவிலடியில் உள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதன் போது பூஜ்ய ஸ்ரீலஸ்ரீ ரவிசங்கர் குருஜினால் வடிவமைக்கப்பட்ட எளிய யோகாசனங்கள், பிரணாயாமம், சக்தி வாய் ந்த சுதர்சனக் கிரியா என் னும் மூச்சுப் பயிற்சி உள்ளிட்ட உடல், உள ஆன்மீக மேம பாட்டைத் தரக் கூடிய பயிற்சி கள் இடம் பெறவுள்ளன. (இ-5)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையின் அதிபர் திருமதி எஸ். சூரியராஜா தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை வடமாகாண ஆரம்பக்கல்விப் பணிப்பாளர் ட.ராஜலிங்கம், வலிகாம கல்வி வலய ஆரம்ப பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.உதயரட்ணம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது ஆசியுரையினை சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்ய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

நினைவுப் பேருரையினை மானிப்பாய் சோதி வேம்படி வித்தியாசாலையின் பழையமாணவனும், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினருமான க.உஷாந்தன் நிகழ்த்தவுள்ளார். (இ-4)

## இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சார சபையின் 46 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இலங்கை மின்சார சபை, வடமாகாண ஊழியர் நலன் புரி மற்றும் விளையாட்டுக் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரத்ததான நிகழ்வு இன்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபை பிரதிப் பொது முகாமையாளர் அலுவலக கலை அரங்கத்தில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை நடைபெறவுள்ளது. (இ-5)

## பயணிக்க முடியாத நிலையில் யாக்கரு விநாயகர் ஆலய வீதி

(கரணவாய்)

வடமராட்சி- கரவெட்டி கிழக்கு ஜே/368 கிராம சேவையாளர் பிரிவில் வள்ளி யாக்கரு விநாயகர் ஆலய வீதி பயணிக்க முடியாத நிலையில் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மழைகாலத்தில் வீதிகளில் உள்ளகுன்றுகுழிகளில்வெள்ள நீர் தேங்கி நிற்பதால் இவ்வீதியூடாக செல்லும் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்கு பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உறுப்பினர்கள் கவனத்திற்கு கொண்டு வந்து இவ்வீதியைநல்லமுறையில் திருத்தித் தருமாறு வீதிப் பயனாளிகளால் கிராமத்து பொது அமைப்புக்களிடம் கேட்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக குன்றும் குழியுமாக காணப்படுகின்ற இவ் வீதியை இதுவரை யாரும் கண்டு கொள்ளவில்லை.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தங்களது கவனத்தில் கொண்டு இவ்வீதியைத் திருத்தித் தருமாறு பயனாளிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-60)

# புதிய வகுப்பறை திறப்பு விழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் சமூகப் புரவலர் மாணிக்கம் சுப்பிரமணியம் என்பவரால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ள புதிய வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் பே.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜா கலந்துகொள்வுள்ளார். இதன்போது வரவேற்புரையினை ஆசிரியர் வே.அன்பழகன் வழங்கவுள்ளார். ஆசியுரையினை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு. திருமுருகன் வழங்கவுள்ளதுடன் தலைமையுரையினை அதிபர் பே.தனபாலசிங்கம் நிகழ்த்துவார்.ஏற்புரையினை விழா நாயகன் மா.சுப்பிரமணியம் நிகழ்த்தவுள்ளார். (இ-5)


## யாரிடம் பேசுவது?

யார் என்னை புரிந்து கொள்வார்? நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்? நான் என்ன தவறு செய்தேன்? என்னால் ஒன்றுமே முடியாது நான் என்ன செய்வது?

**எம்முடன் பேசுங்கள்**

**கை கொடுக்கும் நண்பர்கள்**

**104, 4, ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

**காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 1 மணிவரை**

☆ மதசார்பற்றது ☆ ரகசியம் பேணப்படும்

**021 222 8117, 077 900 8776**

Sponsored by enlightenment circle an arm of saiva munnetta sangam UK (2116)


# ஆபாச இணையத்தள பாவனையை தடை செய்யக்கோரி கையெழுத்து

ஆபாச இணையத்தளங்களை தடை செய்ய கோரி, பொது மக்களிடம் கையெழுத்து பெறும் வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என ஆலோசனைகள் மற்றும் நல்லிணக்கச் சபை தெரிவித்துள்ளது.

சிறுவருக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் போன்ற குற்றங்கள் பல பெருகிவர இதுவும் காரணம் என, அந்த சபையின் செயலாளர் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மஹீல போல் தெரிவித்துள்ளார்.இதன்படி குறித்த மனுவில் மக்களிடம் கையெழுத்துப் பெறும் நடவடிக்கைகள் நவம்பர் 4 ஆம் திகதி காலை 9 மணி முதல்மாலை 6 மணிவரை இடம்பெறவுள்ளன.

கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

இதனையடுத்து குறித்த மனு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (இ-7-10)


## சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்



யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரியின் சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியரான

**திருமதி மங்களேஸ்வரி சிவசிதம்பரலிங்கம்**

(பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை)

அவர்கள் 02.11.2015 திங்கட்கிழமை அறுபது வயதைப் பூர்த்தி செய்து தன் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வுபெறுகிறார்

(2204)

### சேவை விபரம்

முதல் நியமனத் திகதி: 25.05.1977

60 ஆம் அகவை: 02.11.2015

வவு/ தாண்டிக்குளம் அ.த.க.பாடசாலை: 30.05.1977-11.01.1981

யா/ பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சி கலாசாலை: 12.01.1981-30.06.1982

மு/முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க.பாடசாலை: 01.07.1982-30.04.1986

யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்: 01.05.1986-11.02.1992

யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்: 12.02.1992-23.02.2003

யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி: 24.02.2003-01.11.2015

எமது கல்லூரியில் நல்லாசிரியராக அரும்பணிபுரிந்து இன்று ஓய்வுபெறும் ஆசிரியையை மனதார வாழ்த்துகின்றோம்.

**கல்லூரிச் சமூகம், யாழ்.உரும்பிராய் இந்துக் கல்லூரி.**



## கல்யாண மாலை

இவர்களுக்கு **மணமகள் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா:08செவ் 12 ல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:பட்டதாரி/லண்டன் NOT PR
தொ.இ: B/5132

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 19உயரம்: 158cm
தகைமை/தொழில் : MBBS/ வைத்தியர்
தொ.இ: B/5133

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 39செவ் 7 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்
தொ.இ: B/5134

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 23 உயரம்: 5'10"
தகைமை/தொழில்:O/Lடோகா
தொ.இ: B/5135

இவர்களுக்கு **மணமகன் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 40 செவ் 7 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:BSC/அரசதொழில்
தொ.இ: G/5154

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 38
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்
தொ.இ: G/5159

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 60செவ் 8 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/5160

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 53செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/5164

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:-021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



முருகசோதி திபானுஜன்
176 புள்ளிகள்



சாந்தலிங்கம் ரேனுஜா
156 புள்ளிகள்

02.11.2015 மற்றும் 25.11.2015 இல் பிறந்த நாளைக் கொண்டாடும் 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த **மகாலக்சுமியின் அன்பு மாணவச் செல்வங்களை பாராட்டி வாழ்த்துகின்றோம். யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் 176 புள்ளிபெற்ற முருகசோதி திபானுஜன் மற்றும் யா/ வட்டு மத்திய கல்லூரியில் 156 புள்ளிகள் பெற்ற மாணவி சாந்தலிங்கம் ரேனுஜா** ஆகிய மாணவச் செல்வங்கள் சகல கலைகளும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துவதோடு இனிய பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மடத்துப் பிள்ளையார் கோவிலடி, தொல்புரம். (2219)

அன்புடன் வாழ்த்தும்
சீட்டு மாமா, பொன்.தனபாலசிங்கம்


# நவீன் திஸாநாயக்க அமைச்சில் உறவினர்களுக்கு முதலிடம்

(கொழும்பு)

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவும் தனது அமைச்சின் கீழுள்ள நிறுவனங் களுக்கு உறவினர்களை நியமிப்பதில் ஆர்வம் காட்டி வருவதாக தெரிய வந்துள்ளது. மகிந்த அரசின் குடும்ப ஆதிக்கம் மற்றும் உறவினர்களுக்கு முதலிடக் கொள்கைகளை எதிர்த்து பொது மக்களின் வாக்குகள் மூலம் நல்லாட்சி அரசாங்கம் பதவிக்கு வந்தது.

ஆனால் இந்த அரசாங்கத்திலும் ஜனாதிபதி தொடக்கம் சாதாரண பிரதியமைச்சர்கள் வரை உறவினர்களுக்கு முதலிடக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகின்றது.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தனது அமைச்சின் கீழ் துறைமுக அதிகார சபையில் மட்டும் 13 பேருக்கும் அதிக மான உறவினர்களை பல் வேறு பதவிகளுக்கு நியமித் துக் கொண்டுள்ளார்.

தற்போது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸாநாயக்கவும் அதேபோன்று தனது அமைச்சின் கீழுள்ள நிறுவனங்க ளின் முக்கிய பதவிகளுக்கு உறவினர்களை நியமிப்பதில் ஆர்வம் காட்டி வருவதாக தெரிய வந்துள்ளது.

பெருந்தோட்டக் கைத்தொ ழில் அமைச்சின் துறைசார் விடயங்களுக்குள்உள்ளடக்கப்படும் இலங்கைத் தேயிலை கடுமையான விலை வீழ்ச் சியை எதிர்கொண்டுள்ளது. எனினும் இதைப் பற்றி யெல்லாம் கவலைப்படாமல் அமைச்சர் நவீன் திஸாநாயக்க தனது உறவினர் ஒரு வரை தேயிலை அபிவிருத்திச் சபையின் முக்கிய பதவிக்கு நியமித்துக் கொண்டுள்ளார். (இ-7-10)

# அன்புவழி கல்விச் செயற்பாடுகள் சிறந்த சமுதாயத்தை உருவாக்கும்

## வடக்கு மாகாண முதலமைச்சர் அறிவுரை

(முழங்காவில்)

**மாணவர்கள் விருப்புடன் கல்வி கற்கக்கூடிய விதத்தில் கற்பித்தல்கள் அமைய வேண்டும். அன்பு வழியில் கல்வி முன்னெடுப்புக்களை மேற்கொள்வதன் மூலமாக சிறந்த ஒரு கல்விச் சமுதாயத்தை நாம் உருவாக்க முடியும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**



வன்னிப் பகுதியில் இயங்கி வருகின்ற இலவசக் கணனிக் கல்லூரிகளின் மூன்றாவது சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் மு/மல்லாவி யோகபுரம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

கடந்தகால கொடிய யுத்தத்தினால் வீடுகளை இழந்து, உறவுகளை இழந்து, தாய், தந்தையரை இழந்து, அவயவங்களை இழந்து மிகவும் பாதிக்கப்பட்ட எமது மக்கள் குறிப்பாக மாணவ, மாணவியர்கள் இந்த இழப்புக்களினால் துவண்டுவிடக்கூடாது என்ற நன் நோக்கோடு இவ்வாறான கணனிப் பயிற்சிக் கல்லூரிகளை மல்லாவி, முள்ளியவளை, நெடுங்கேணி ஆகிய இடங்களில் அமைத்துப் பயிற்சி அளித்து வருகின்றார்கள் தேசிய தொழில்நுட்பக் கல்லூரியினர்.

இக் கல்லூரிகளின் மூலமாக இம் மாணவர்களுக்குக் கணனிப் பயிற்சிகளை முற்றிலும் இலவசமாக வழங்கி வருவதுடன் இப் பயிற்சிகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கி வருகின்றார்கள்.

எனினும் இப்பேர்ப்பட்ட கல்லூரிகள் அரச அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளாக இருப்பது மிகவும் அவசியமானதாகும். அவ்வாறான அங்கீகாரங்களைப் பெற்றிருக்காவிட்டால் அவற்றை உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சில காலங்களுக்கு முன்னர் அரச திணைக்களங்களில் கணனித் தொழில்நுட்ப உதவியாளர்களை அரச சேவையில் இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சையில் வடபகுதியைச் சேர்ந்த பல பரீட்சார்த்திகள் அப் பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று முன்னிலையில் தெரிவாகிய போதும் நேர்முகத் தேர்வின் போது அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கணனிச் சான்றிதழ்களை வழங்கிய கல்லூரிகள் அரச அங்கீகாரங்களைப் பெற்றிருக்காமை, எத்தனை மணித்தியாலப் பயிற்சிகள் வழங்கப்பட்டன என்ற விபரங்கள் சான்றிதழ்களில் குறிப்பிடப்பட்டிருக்காமை போன்ற காரணங்களால் அவர்கள் அப் பதவிகளுக்குத் தெரிவாகியிருக்கவில்லை என நான் அறிய வருகின்றேன்.

போட்டியில் மிக நன்றாகச் செய்தும் இப்பேர்ப்பட்ட காரணங்களினால் அவர்கள் நிராகரிக்கப்பட்டார்கள்.

இதை நான் இங்கு குறிப்பிடுவது நிர்வாகத்தினரின் கவனத்திற்கும், மாணவர்களின் எதிர்கால நன்மை கருதியுமேயாகும்.

பாடசாலைகளில் விழாக்கள் முக்கியம். கல்வியுடன் இணைந்த கல்விக் கண்காட்சி, கல்விச் சுற்றுலா போன்ற நிகழ்வுகளுக்கு முன்னுரிமை கொடுப்பதன் மூலம் கடைநிலை மாணவனைக்கூட புத்தகத்தை விரிக்க வைக்க முடியும். ஆனால் பகட்டு நிகழ்வுகளால் மாணவ சமுதாயத்தின் கல்வி நிலை பாதிக்கப்படுகின்றது.

நான் பாடசாலைகளை மட்டும் குறையாகக் கூறவில்லை. பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வி தொடர்பான நெருக்கமான கரிசனையை வெளிக்காட்டுகின்றார்களா? என்பதும் பரிசீலித்துப் பார்க்கப்பட வேண்டும். பாடசாலை முடிந்தவுடன் பிள்ளைகள் வீடுவந்து சேர்கின்றார்களா? வேறு எங்கு செல்கின்றார்கள்? தனியார் கல்வி நிலையங்களுக்கு செல்பவர்கள் அங்கு கிரமமாகச் செல்கின்றார்களா, வகுப்புக்கள் நிறைவடைந்ததும் வீடு திரும்புகின்றார்களா? அல்லது வேறெங்கும் செல்கின்றார்களா? என்பதைப் பெற்றோர்கள் கண்டறிய வேண்டும். மாலையில் விளையாட்டு மைதானத்தில் நின்றால்கூட அது வரவேற்கப்பட வேண்டும்.

ஆனால் எனக்குப் பலவிதமான தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன. ஒரு வயோதிபர் அண்மையில் கூறினார், எனது வீட்டுக்கருகில் இருக்கும் முச்சந்தியில் பின்னேரங்களில் மாணவர்கள் பலர் புத்தகங்களுடன் வந்திருந்து சாராயம், பியர் போன்றவற்றை அருந்துகின்றார்கள். அருந்திவிட்டு வெற்றுப் போத்தல்களை எனது தோட்டத்திற்குள் எறிந்து விட்டுச் செல்கின்றார்கள். ஏன் அப்படிச் செய்கின்றீர்கள் என்று கேட்டால் "அங்கிள்! நீங்கள் போத்தல்களை விற்றுக் காசாக்குங்கள். எமக்கு அந்தப் பணம் தேவையில்லை. எங்களுக்கு வெளிநாட்டில் இருந்து பணம் கிடைக்கின்றது" என்று கூறுகின்றார்கள் என்றார்.

விசாரித்துப் பார்த்ததில் அவர்கள் பிரத்தியேக வகுப்புக்களுக்குப் போகாமல் வந்தவர்கள் என்று தெரிந்து கொண்டார். ஆகவே பெற்றோர்களாகிய எங்களுடைய கவனக் குறைவே தெருச் சண்டைகள், கோஷ்டி மோதல், போதைப் பழக்கங்கள் என தீய வழிகளுக்கு எமது மாணவச் செல்வங்களை இட்டுச்செல்கின்றது.

மாணவர்கள் விருப்புடன் கல்வி கற்கக்கூடிய விதத்தில் கற்பித்தல்கள் அமைய வேண்டும். அதை நான் கூறி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அன்பு வழியில் கல்வி முன்னெடுப்புக்களை மேற்கொள்வதன் மூலமாக சிறந்த ஒரு கல்விச் சமுதாயத்தை நாம் உருவாக்கலாம்.

நாம் அனைவரும் பாடுபட்டால் மாணவர்களை நல்ல வழியில் சென்று கல்வியில் உயர்ச்சி பெற வழிவகுக்கலாம் என்றார். (2)




# மது ஒழிப்பு விழிப்புணர்வு துண்டுப்பிரசுர விநியோகம்

## கிளி.தேசிய சேமிப்பு வங்கி உத்தியோகத்தர்களினால் முன்னெடுப்பு




(கிளிநொச்சி)

நாடளாவிய ரீதியில் ஒக்டோபர் மாதம் சிறுவர், முதியோர் மது ஒழிப்பு மாதமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதையொட்டி கிளிநொச்சி தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ந.குகதாசன் தலைமையில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் மது ஒழிப்பு தொடர்பான துண்டுப்பிரசுர விநியோகம், கருத்துரைகள் என்பன வங்கி உத்தியோகத்தர்களினால் நடத்தப்பட்டது.

"எமது இல்லம் போதையில் இருந்து விடுபட்டுள்ளது, உள்ளத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்குகின்றது, புகைத்தல் மற்றும் மதுபான பாவனை இல்லாத இல்லத்தில் சேமிப்பை நோக்கி" எனும் துண்டுப் பிரசுரம் தேசிய சேமிப்பு வங்கி மற்றும் புகையிலை, மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தகவலாக வங்கி உத்தியோகத்தர்களினால் வெளிப்படுத்தப்பட்டது.

இதன்போது ஒரு மாதத்திற்கு புகைத்தலின் போது ஒருவருக்கு ஏற்படும் செலவீனம் 4 ஆயிரத்து 950 ரூபா எனவும் மதுபான செலவீனம் 7 ஆயிரத்து 440 ரூபா எனவும் மொத்தமாக 12 ஆயிரத்து 390 ரூபா என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

மதுபானம் மற்றும் புகைத்தலுக்கு செலவிடும் தொகையை சேமிப்போமானால் வீட்டிற்கு தேவையான அத்தியாவசியமான பொருட்களை எவ்வளவு கொள்வனவு செய்ய முடியும் என அவதானியுங்கள்.

இதன்மூலம் ஒரு மாதத்திற்கு சேமிக்கும் பணத்தை உங்கள் குடும்பத்தின் சந்தோசத்திற்கான ஒரு முதலீடாக மேற்கொள்ள முடியும். எனவே புகைத்தல் மற்றும் மதுபான பாவனையில் இருந்து விடுபட்டு குடும்பத்திற்கும் உடல் நலத்திற்கும் கேடு விளைவிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என அவர்களால் வலியுறுத்தப்பட்டது. (2-254)



கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த சிவநகர் கிராம பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களை ஊக்குவிப்பதற்காக பத்து துவிச்சக்கர வண்டிகள் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணிக்கு யாழ். நல்லூரிலுள்ள நாவலர் மண்டபத்தில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறையைச் சேர்ந்த பேராசிரியர் மா.வேதநாதன் தலைமையில் நடைபெற்றது. லண்டன் சைவ முன்னேற்றச் சங்கம், லண்டனிலுள்ள கொசின் இன்சுறியுகராட்டே சங்கம் ஆகியவை துவிச்சக்கர வண்டிகளை கொள்வனவு செய்வதற்கான நிதியை வழங்கி இருந்தன. (படம்: சிவநகர் செய்தியாளர்)

# சமூகப் பிரச்சினைகளுக்கு அடிப்படை காரணம் போதைப்பொருள் பாவனை

## கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டு

சமூகத்தில் இடம்பெறும் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் அடிப்படை காரணமாக போதைப்பொருள் பாவனை அமைகிறது என கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது சமூகத்தினரிடையே அதிகரித்து வரும் சமூக விரோத செயற்பாடுகளை தடுப்பதற்கு நாம் ஒவ்வொருவரும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அண்மைக் காலமாக எமது பிரதேசத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் வன்புணர்வுச்




சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவற்றிற்கான காரணத்தை ஆராயும் போது அடிப்படைக் காரணியாக போதைப் பொருள் பாவனையே காரணமாக அமைகிறது.

ஒவ்வொரு பிரதேசத்திலுமாக உத்தியோகத்தர்கள்,கிராமசேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் அனைவரும் தத்தமது சமூகத்தில் இடம் பெறும் சம்பவங்களை உற்று நோக்குவதோடு கண்காணிக்கவும் வேண்டும்.

சிறிதளவேனும் சந்தேகிக்கப்படக் கூடிய வகையில் நடைபெறும் சம்பவங்களை உடனடியாக பொலிஸ் அதிகாரிக்கு தெரியப் படுத்த வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொரு தரப்பினரும் விழிப்புணர்வுடன் செயற்பட்டால் மட்டுமே குற்றச் செயல்களை தடுப்பதோடு எமது சமூகத்தை போதைப்பொருள் பாவனையிலிருந்து பாதுகாக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-9)

# மண்சரிவில் உயிரிழந்தவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி



(மல்லாவி)

பரந்தன் மெதடிஸ்த திருச்சபையின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட ஸ்கொட்லாந்து மண்சரிவுகளின் ஓராண்டு நினைவு நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் கிளிநொச்சியில் அனுஷ்டிக்கப்பட்டது.குறித்த அனர்த்தத்தில் உயிரிழந்த உறவுகளின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை முன்னெடுக்கப்பட்டதுடன், மெழுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து பெந்தோட்ட சமூக மேம்பாட்டு திருப்பணியினரால் 7 அம்ச கோரிக்கைகள் அடங்கிய ஊடக அறிக்கை வெளியிடப்பட்டது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுத்தல், லயத்து வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்தல்,ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட அம்சங்கள் அவ்வ றிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பெருந்தோட்ட சமூக மேம்பாட்டு திருப்பணியின் இணைப்பாளரும், பரந்தன் கிளிநொச்சி சேகரத்தின் குருவானவரும், இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் ஊடக (தமிழ்) இணைப்பாளருமான அருட்தந்தை செங்கன் தேவதாசனினால் அறிக்கை வெளியிடப்பட்டது. (2-15)

# முல்லைத்தீவு கடற்கரையில் சட்டவிரோத மணல் அகழ்வு

## நேரில் சென்று பார்வையிட்டார் ரவிகரன்



(குருமன்காடு)

முல்லைத்தீவு கடற்கரையில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வொன்று நடைபெற்றுள்ளது என கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து குறித்த இடத்திற்கு விரைந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் குறித்த இடங்களை பார்வையிட்டு அகழ்விடங்களை ஒளிப்படக்கருவியில் பதிவு செய்ததோடு இவை தொடர்பான முறைப்பாடொன்றையும் முல்லைத்தீவு பொலிஸ் நிலைய தலைமை அதிகாரியிடம் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு நகரையண்டிய கடற்கரைப்பகுதியில் மணல் அகழ்வில் இராணுவத் தினர் ஈடுபடுவதாக பொது மக்கள் வழங்கிய தகவலையடுத்து நேற்று முற்பகல் 11 மணியளவில் அவ்விட த்திற்கு செல்வதற்கிடையில் அவர்கள் அவ்விடத்தில் இருந்து சென்றுவிட்டார்கள்.

இருப்பினும் அவ்விடத்தில் சட்டவிரோத மணல் அகழ்வொன்று நடைபெற்றிருப்பதற்கான வாகனத் தடங்கள் மற்றும் மண் வெட்டி அள்ளல் தடங்கள் காணப்பட்டன.

அவைகளை எனது ஒளிப்படக்கருவியில் பதிவுசெய்து இது தொடர்பான முறைப் பாடொன்றை முல்லைத்தீவு பொலிஸ் நிலைய தலைமை அதிகாரியிடம் கையளித்துள்ளேன.

இராணுவத்தினர் கடற்கரையோரங்களில் மணல் அகழ்வதை ஏற்கனவே பல இடங்களில் நேரில் சென்று பார்த்து எச்சரித்து அந்நடவடிக்கைகள் அவ்விடங்களில் மேலும் தொடர்வதை நிறுத்த முடிந்திருக்கிறது.

இவ்வாறான மணல் அகழ்வுகளில் எவர் ஈடுபடினும் அதனை எமது தேசத்தில் அனுமதிக்கமுடியாது என்றும் அவர் தெரிவித்திருந்தார். (2-250)

# முதியோர்களுக்கு மதிப்பளித்து அரவணைக்கின்ற சூழலை நாம் எல்லோரிடமும் ஏற்படுத்த வேண்டும்

## பூநகரி பிரதேச செயலாளர் தெரிவிப்பு

சிறுவர்களையும் முதியவர்களையும் அரவணைக்கின்ற, மதிப்பளிக்கின்ற மன நிலை எல்லோரிடமும் ஏற்படுத்தப்பட வேண்டுமென பூநகரி பிரதேச செயலர் ச.கிருஸ்ணேந்திரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி முழங்காவில் மத்திய மகா வித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பூநகரிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட சிறுவர் முதியோர் மதிப்பளிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளாா.

அவர் மேலும் தெரிவிக்கையில், "அந்தந்த தினங்களை கொண்டாடவேண்டுமென்ற வழமை ஏன் ஏற்படுகின்றதென்றால் எங்களுடைய பண்பாடு பாரம்பரியங்களை அல்லது எமது வாழ்க்கைச் சக்கரத்திலே முன்னோர்கள் பயன்படுத்திய உத்திகளை பின்பற்ற மறுக்கும்போது அதற்குரிய தேவைகளை வலியுறுத்தும் வகையில் தேசிய வேலைத்திட்டங்களை தயாரிக்கவேண்டிய தேவையுள்ளது.

எமது பண்பாட்டிலே சிறுவர்களுக்கு மகிழ்ச்சிக்குரிய வீட்டுச்சூழலும் முதியோர்களின் அறிவுறுத்தல்களை, வழிகாட்டல்களை கண்ணியத்துடன் பின்பற்றக்கூடிய வாழ்க்கை நெறியும் இருந்துவந்தது. தற்போது அந்த நெறியிலிருந்து நாகரிகம் என்ற பெயரைச் சொல்லி நீக்கி பயணித்ததாலே எமது நற்பழக்கங்களை நல்ல செயற்பாடுகளை புறந்தள்ளியிருக்கின்றோம் என்று கருதவேண்டியுள்ளது.

பிரதேச செயலக, மாவட்டச் செயலக தேசிய ரீதியாக சர்வதேச ரீதியாக இவ்விழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. ஒக்டோபர் முதலாம் திகதியே சர்வதேச சிறுவர் முதியோர் தினம் என ஐ.நா. பிரகடனப்படுத்தியிருந்தது. அதன் பிரகாரம் சகலரும் இத்தினத்தினை சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். நாமும் அத்தேவையறிந்து எமது பண்பாடு முதியோர்களின் விழுமியங்களை பின்பற்றி உலகத்திற்கு ஒரு செய்தியினை சொல்ல விளைகின்றோம். சிறுவர்களை நற்பிரஜைகள் ஆக்குவதும், முதியோர்களை மதிப்பளித்து அரவணைக்கின்ற சூழலை எல்லோரிடமும் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (2)

# கைதான இந்திய மீனவர்கள் 5 பேருக்கு விளக்கமறியல்



இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட 5 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க மன்னார் பதில் நீதவான் இ.கயஸ் பெல்டானோ நேற்று உத்தரவிட்டார்.

படகு ஒன்றில் இலங்கை கடற்பரப்பினுள் அத்து மீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்களை கடற்படையினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கைது செய்துள்ளனர். அவர்களில் ஜீவன் பிரைசர் (வயது-15) என்ற சிறுவனும் அடங்குகின்றான்.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட குறித்த 6 இந்திய மீனவர்களும் தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மன்னார் மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இதன் போது குறித்த மீனவர்களை யாழ். இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜா நேரில் சென்று பார்வையிட்டார்.

கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் விசாரனைகளின் பின்னர் நேற்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பதில் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

மேலும் வயது குறைந்த ஜீவன் பிரைசர்(வயது-15) என்ற சிறுவனை மன்னார் சிறுவர் இல்லத்தில் அனுமதிக்குமாறு மன்னார் பதில் நீதவான் உத்தரவிட்டார்.

இதேவேளை தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கடந்த இரு தடவைகள் கைது செய்யப்பட்ட 35 இந்திய மீனவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-4)

# 'உலக ஈரநில' தினத்தையொட்டி மாணவர்களுக்கு சித்திரப்போட்டி

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி "உலக ஈரநில" தினம் கொண்டாடப்படவுள்ளது.

இத்தினத்தையொட்டி மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஏற்பாட்டில் மத்திய கல்வியமைச்சு, வன ஜீவராசிகள் திணைக்களம்,விஜய் சிறுவர் பத்திரிகை ஆகிய வற்றின் அனுசரணையுடன் நாடு தழுவிய ரீதியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு இடையில் சித் திரப்போட்டி நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல். மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மேற்படி போட்டியில் துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயின்று வருகின்ற தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையிலுள்ள மாணவர்கள் பங்கேற்க முடியும்.


இப் போட்டிக்கான இறுதி முடிவுத்திகதி அடுத்த மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமையாகும். போட்டி தொடர்பான மேலதிக விபரங்கள் பாடசாலைகளுக்கு சுற்றுநிருபம் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## கல்வியாளர் சேவை ஆட்சேர்ப்பிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை ஆசிரிய கல்வியாளர் சேவையின் 3 ஆம் வகுப்பிற்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விசேட ஏற்பாடு ஒன்றைப் பொதுச் சேவை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

விசேட கல்வி, தொழில் நுட்பப் பாடங்கள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், மேலைத்தேய சங்கீதம், சித்திரம், சங்கீதம், உடற்கல்வி மற்றும் கிறிஸ்தவ சமயம் ஆகிய பாடங்களுக்கே தற்காலிக பதவி என்ற அடிப்படையில் நியமனம் வழங்கப்படவிருக்கிறது. கல்வியாளர் சேவைக்கென எதிர்பார்க்கப்படும் தகைமைகளை விடக் குறைந்தளவு தகைமைகளுடன் இப்பாடங்களுக்கான ஆட்சேர்ப்பு இடம்பெறுவதனாலேயே தற்காலிகப் பதவி நியமனம் வழங்கப்படு கின்றது. இவர்கள் சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் திகதியில் இருந்து ஐந்து ஆண்டுகளுள் குறிப்பிட்ட தகைமைகளில் பூர்த்தி செய்து கொண்டால் நிரந்தரப் பதவிக்கு உரித்தாவர்என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் பாடத் துறையில் ஆசிரிய பயிற்சிச் சான்றிதழுடன் ஏழு வருடங்களுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவத்தைக் கொண்டிருக்கும் இலங்கை ஆசிரிய சேவை, அதிபர் சேவை, கல்வி நிர்வாக சேவ்வையைச் சேர்ந்தவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவுத் திகதி 30.11. 2015 ஆகும். தெரிவுகள் நேர்முகப் பரீட்சை மற்றும் பிரயோகப் பரீட்சை என்ற அடிப்படையல் இடம்பெறவுள்ளன. விணணப்பப் படிவத்தையும் மேலதிக விபரத்தையும் கடந்த வெள்ளிக்கிழமை 30.10. 2015 வெளியாகிய அரச வர்த்தமானியில் பார்வையிடலாம். (இ-7-10)




# கொழும்பு துறைமுக விரிவாக்கத்திட்டத்தில் சீனாவுடன் போட்டியில் குதிக்கிறது இந்தியா

(கொழும்பு)—

**சீனாவின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட கொழும் புத்துறைமுக விரிவாக்க திட்டத்தில் இந்தியரசு துறை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த துறை முக நிறுவனங்கள் ஈடுபடுவதை ஊக்குவிப்பதில் இந்திய அரசாங்கம் அக்கறை காண்பிப்பதாக டில்லி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. இது தொடர்பாக இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் அணுகியுள்ளது.**

அத்துடன், தெற்காசியாவின் மிகவும் பரபரப்பான துறைமுகமான கொழும்புத் துறைமுகத்தின், கிழக்கு முனையத்தை விரிவாக்கும் திட்டத்துக்கு, தம்முடன் இணைந்து செயற்படத்தக்க பொருத்தமானதொரு மூலோபாய முதலீட்டு நிறுவனத்தை, அடையாளம் காண உதவும்படி, இலங்கையின் மிகப் பெரிய தனியார் நிறுவனங்களில் ஒன்றான ஜோன் கீல்ஸ ஹோல்டிங்ஸ் நிறுவனம், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்திடம் கேட்டுள்ளது.

இதுதொடர்பாக புதுடில்லியில் உள்ள இந்தியாவின் கப்பல்துறை அமைச்சுக்கு, இந்தியத் தூதரகம் கடிதம் அனுப்பியுள்ளது.

இந்தியாவின் சரக்குகளைப் பரிமாற்றும் முக்கியமான மையமாக கொழும்புத் துறைமுகம் இருப்பதால், இந்திய நிறுவனம் ஒன்று இதில் ஈடுபடுவது நன்மையளிப்பதாக இருக்கும் என்று அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம், கொழும்புத் துறைமுகத்தில் தெற்கு, கிழக்கு, மேற்கு முனையங்கள் என்று மூன்று கொள்கலன முனையங்களை அமைக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

இதில் கிழக்கு கொள்கலன் முனையத் திட்டம், இலங்கை துறைமுக அதிகாரசபையால் நிர்வகிக்கப்படும் வகையில், 330 மில்லியன் டொலர் செலவில் நடைமுறைப்படுத்தப் படுகிறது.

1200 மீற்றர் நீளமுடைய, இந்த கிழக்கு கொள்கலன் முனையத் திட்டத்தின், 400 மீற்றர் வரையான பகுதி, கட்டுமானப் பணிகள் முடிந்து, கடந்த ஏப்ரல் மாதம் திறந்து வைக்கப்பட்டது.

இதற்கு, ஆசிய அபிவிருத்தி வங்கி, 81.7 வீதமும், இலங்கை துறைமுக அதிகார சபை 18.3 வீதமும் நிதியை ஒதுக்கியுள்ளன.

இந்த கொள்கலன் முனையத்துக்கு, முனையத்தில் கப்பல்களை ஈர்க்கத்தக்க, அபிவிருத்தி செய்து செயற்படுத்தும் ஒரு செயற்பாட்டாளரை இலங்கை துறைமுக அதிகார சபை ஆர்வத்துடன் எதிர்பாாப்பதாக இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, கொழும்புத் துறைமுகத்தின் தெற்கு கொள்கலன் முனையம், ஏற்கனவே செயற்படத் தொடங்கி விட்டது.

சீன மேர்ச்சன்ட் ஹோல்டிங்ஸ் இன்டநஷனல் நிறுவனம் 85 வீதமும், இலங்கை துறைமுக அதிகாரசபை 15 வீதமும், இந்த முனையத்தில் முதலிட்டுள்ளன. இந்த முனையத்தை கட்டி, செயற்படுத்தி 35 ஆண்டுகளில் கைமாற்றும் உடன்பாட்டை சீன நிறுவனம் இலங்கை துறைமுக அதிகார சபையுடன் செய்து கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## பொறுப்புக்கூறல் விவகாரம் குறித்து சமந்தா பவருடன் விஜயதாஸ பேச்சு



திறந்த அரசுகளின் கூட்டமைப்பில், இலங்கை இணைந்து கொண்டுள்ளமை, இன்னும் கூடுதலான பொறுப்புக்கூறலை நோக்கிய அதன் இனனொரு அடி என்று தெரி வித்துள்ளார் ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர்.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவை கடந்த மாதம் 29ஆம் திகதி சந்தித்துப் பேச்சு நடத்திய போதே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

மெக்சிகோவில் நடைபெற்ற திறந்த அரசுகளின் கூட்டமைப்பின் பூகோள மாநாட்டின் பக்க நிகழ்வாக இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்த மாநாட்டில், இலங்கையும் திறந்த அரசுகளின் கூட்டமைப்பின் உறுப்பு நாடாக இணைந்து கொள்வதாக, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜ பக்ஷ அறிவித்திருந்தார்.

இந்தக் கூட்டமைப்பில் இலங்கை இணைந்து கொண்டதை, விஜயதாஸ ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது சமந்தா பவர் வரவேற்றுள்ளார்.

அதேவேளை, இந்தச் சந்திப்பின் போது, பொறுப்புக் கூறல் தொடர்பான இலங்கையின் நகர்வுகள் தொடர்பாக சமந்தா பவரும், விஜயதாஸ ராஜபக்ஷவும் கலந்துரையாடியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன்.

இந்தப் பேச்சுக்களில் இலங்கையின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வாவும், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தில் ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் தொழிலாளர் விவகாரங்களுக்கான உதவிச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கியும் கலந்து கொண்டனர். (இ-7-10)

## உத்தியோகபூர்வ வீடுகளை ஒப்படைக்காத 30முன்னாள் எம்.பிக்களுக்கு எதிராக வழக்கு

இதுவரையில் உத்தியோகபூர்வ வீடுகளை ஒப்படைக்காத கடந்த அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 30 பேருக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கு பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு தீர்மானித்துள்ளது.

உத்தியோகபூர்வ வீடுகளை ஒப்படைக்குமாறு பல முறை கடிதம் மூலம் அறிவித்த போதிலும் அதற்கு பதிலளிக்காமையினால் இந்த தீர்மானத்தை மேற்கொண்டதாக அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளாா.

ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ இல்லத்தை ஒப்படைக்காமையினால் புதிதாக வீடு கோரியுள்ள அமைச்சர்களுக்கு வீடுகளை வழங்க முடியாமல் உள்ளதெனவும், குறித்த அமைச்சர்கள் தொடர்ந்து இது தொடர்பில் கோரிக்கை முன்வைத்து அமைச்சுக்கு வருவதாகவும் அவர் தெரிவித்தார். உத்தியோகபூர்வ இல்லத்தை ஒப்படைக்காத அமைச்சர், உறுப்பினர்கள் கடந்த பொது தேர்தலில் தோல்வியுற்றவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7-10)

## அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள் குறித்து முன்னேற்றம் காட்டாமை ஏமாற்றமளிக்கிறது

### பொன்சேகா ஆதங்கம்

பொது மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் குறித்து புதிய அரசாங்கம் இதுவரை முன்னேற்றம் காட்டாமை ஏமாற்றமளிப்பதாக முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதம் இடம் பெற்ற ஜனாதிபதி தேர்தலின் போது மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வேண்டும் என பொது மக்கள் மற்றும் பல அரசியல் வாதிகள் அவரை ஆதரித்ததாக பொன்சேகா தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்றதன் பின்னர் நிறைய ஊடக சுதந்திரம் மற்றும் ஐக்கிய நாடுகளின் உறவுகளில் முன்னேற்றம் காணப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனினும் புதிய அரசாங்கம் பொது மக்களின் வாழ்க்கை செலவினை குறைப்பதாக வாக்குறுதியளித்த சலுகைகள் இன்னமும் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்தார்.

நேரம் வேகமாக போகிறது. அத்துடன் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன ஏற்கனவே அதிகமான நேரத்தை செலவழித்து விட்டார், மக்களை மகிழ்ச்சியாக வைப்பதற்கு அவர் இன்னும் நிறைய விடயங்களை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேலும் குறிப்பிடடுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7-10)

# அமெரிக்க நிகழ்ச்சி நிரலுக்குள் மைத்திரி அரசாங்கம்!



திறந்த அரசாங்கங்களின் கூட்டமைப்பில் இலங்கையும் இணைந்து கொண்டுள்ளதான செய்தி ஊடகங்களில் குறிப்பாக தமிழ் ஊடகங்களில் அவ்வளவாக முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை.

கடந்த வாரம் மெக்ஸிகோவில் நடந்த திறந்த அரசாங்கங்களின் கூட்டமைப்பில் பூகோள மாநாட்டிலேயே இந்த அமைப்பில் இணைந்து கொள்வதான அறிவிப்பை இலங்கையின் சார்பில் வெளியிட்டிருந்தார் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ.

கடந்த 27ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை நடந்த இந்த மாநாட்டில் இலங்கையின் சார்பில் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ. பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஸ டி சில்வா. அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திறந்த அரசாங்கங்களின் கூட்டமைப்பு என்பது என்ன? அதன் முக்கியத்துவம் என்ன? என்பது வெளியில் அதிகம் அறியப்படாத விடயமாக இருப்பதால் தான் இந்த அமைப்பில் இலங்கையும் இணைந்துகொண்ட விவகாரம் அவ்வளவாக முக்கியத்துவம் பெறாமைக்கு காரணம் என்றாலும். இந்த மாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்க குழுவுக்கு தலைமை தாங்கிய ஐநாவுக்கான அமெரிக்கத் தூதுவர் சமந்தா பவர் நிகழ்த்திய உரையில் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி தொடர்பாக தெரிவித்த கருத்துக்கள் இங்குள்ள ஊடகங்களால் உள்வாங்கப்பட்டிருந்தன.

அமெரிக்க உயர் அதிகாரி ஒருவர் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியை மோசமாக விமர்சித்தார் என்று பல ஊடகங்கள் தலைப்பிட்டிருந்தன.

சமந்தா பவர் அமெரிக்காவில் ஆட்சியிலிருக்கும் ஒபாமா அரசாங்கத்தின் மிக முக்கியமான ஒரு அதிகாரி. அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு மிகவும் நெருக்கமானவர்.

இலங்கை தொடர்பாக ஜெனிவாவில் தீர்மானங்கள் கொண்டுவருவதில் இவரது பங்கும் முக்கியமானது.

அதனால்தான் இம்முறை ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டுவந்த தீர்மான வரைபில் இருந்து சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்புடன் விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என்றிருந்த பதம் நீக்கப்பட்டவுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஜெனிவாவிலிருந்து அவசரமாக நியூயோர்க்கிற்கு புறப்பட்டுச் சென்றார்.

அவர் சமந்தா பவரையும், முன்னர் இலங்கையில் தூதுவராக இருந்தவரும் தற்போது சமந்தா பவருக்கு அடுத்த நிலையில், ஐநாவுக்கான பிரதித் தூதுவராக இருப்பவருமான மிச்சேல் ஜே சிசனையும் சந்தித்துப் பேசினார்.

அதற்குப் பின்னர்தான் கொமன்வெல்த் மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடன் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற பதம் தீர்மான வரைபில் உறுதி செய்யப்பட்டது.

அமெரிக்க அரசாங்கத்தின் இலங்கைக்கு ஆதரவான அதிகாரிகள், இலங்கைக்கு சாதகமான அதிகாரிகள் பலர் இருந்தாலும், சமந்தா பவர், சூசன் ரைஸ், ரொபேட் ஓ பிளேக் போன்றவர்களின் முயற்சியால் தான் ஜெனிவாவில் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன.

மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் பிரட் அடம்ஸ் அண்மையில் ஒரு பேட்டியின் போது,

அமெரிக்க அரசாங்கத்தில் வேறுபட்ட சக்திகள் செயற்படுகின்றன. அமெரிக்க அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிலர் இலங்கை மீதான ஐ.நா தீர்மானத்தை வரவேற்கவில்லை. இவ்வாறானதொரு தீர்மானத்தை இவர்கள் விரும்பவில்லை.

இவர்கள் இந்த தீர்மானம் தொடர்பாக இந்தியா என்ன நினைக்கிறது, சீனா என்ன நினைக்கிறது? இதில் சீனாவின் பங்கு எத்தகையது என்பது தொடர்பாக மட்டுமே கவலை கொள்கின்றனர்.

இலங்கை தொடர்பான பிரச்சினையை தமது நாடு சார்பாக நோக்காது சீனாவின் கோட்பாடுகளின் ஊடாக நோக்குகின்ற சிலர் அமெரிக்க அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர் என்று கூறியிருந்தார்.

ரொபேட் ஓ பிளேக் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவிச் செயலராக பதவி உயர்த்தப்பட்ட பின்னர் தான் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை கொண்டுவரும் முயற்சிகளை உந்தித்தள்ளினார் என்றும் அவர் கூறியிருந்தார்.

அப்போது பிளேக்கிற்கு இராஜாங்கத் திணைக்களத்தில் ஆதரவாக இருந்தவர்கள் தான் சமந்தா பவரும், சூசன் ரைஸ்சும். சமந்தா பவர் ஐநாவுக்கான தூதுவராக இருந்தாலும், இன்னமும் இலங்கை விவகாரங்களுடன் நெருக்கமாகவே இருக்கிறார் என்பதற்கு ஜெனிவா தீர்மான வரைபு நெருக்கடி ஏற்பட்ட போது, சுமந்திரன் அவருடன் கலந்துரையாடியதையும், மெக்ஸிக்கோ மாநாட்டில் அவர் வெளியிட்ட கருத்துக்களையும் வைத்து உணர்ந்து கொள்ளலாம்.

மெக்ஸிக்கோ மாநாட்டில் சமந்தா பவரின் உரை கிட்டத்தட்ட 2350 சொற்களைக் கொண்டதாக இருந்தது. அதில் இலங்கை விவகாரம் பற்றி அவர் கிட்டத்தட்ட 600 சொற்களைக் கொண்ட உரையை நிகழ்த்தியிருந்தார்.

இறுதியாக உங்களுக்கு ஒரு உதாரணத்தை கூறுகிறேன் என்று தொடங்கிய அவர். இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை விரிவாக விபரித்திருந்தார்.

முன்னைய ஆட்சியின் நிலை, தற்போதைய ஆட்சியின் போக்கு, தற்போதைய அரசாங்கம் சிவில் சமூகத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டியதன் அவசியம். அதற்குள்ள பொறுப்புகள். கடப்பாடுகளை அவர் விபரித்திருந்தார்.

அண்மைக்காலத்தில் இலங்கை தொடர்பாக அமெரிக்காவின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் இலங்கைக்கு வெளியில் நிகழ்த்திய மிக நீண்ட உரை இதுவாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அவரது இந்த உரை, இலங்கையின் அரசியல் மாற்றங்களை வரவேற்பதாக மட்டும் அமையவில்லை. புதிய அரசாங்கத்திற்கு இருக்கின்ற பொறுப்புணர்வுகளைச் சுட்டிக் காட்டுவதாகவும் அமைந்திருந்தது.

திறந்த அரசாங்கங்களின் கூட்டமைப்பு என்பது இந்தப் பொறுப்புணர்வை நிறைவேற்றும் கடப்பாடுகளை ஏற்றுக் கொள்ளுகின்ற அமைப்புத்தான். இதற்குள்தான் இலங்கையும் இப்போது உள்வாங்கப்பட்டுள் ளது.

கூடுதல் வெளிப்படைத் தன்மை, ஊழலுக்கு எதிராக போராடுதல், பொறுப்புக்கூறுதல், சிவில் சமூகங்களின் பங்களிப்பை அதிகரித்தல், இது தான் திறந்த அரசாங்கங்களின் கூட்டமைப்பின் பிரதான கொள்கை.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்துக்கும் இந்தக் கொள்கைகளுக்கும் துளியளவு சம்பந்தமும் இருந்திருக்கவில்லை. ஆனால் இப்போதைய அரசாங்கத்தை இந்த அமைப்புக்குள் இழுத்துச் சென்றிருக்கிறது அமெரிக்கா.

இதன்மூலம் கூடுதல் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல், ஊழல் ஒழிப்பில் இலங்கை அரசாங்கத்தின் கடமை மற்றும் பொறுப்பு என்பன ஒருபடி மேலாக உயர்த்தப்பட்டுள்ளது.

2011ம் ஆண்டு அமெரிக்கா, பிரித்தானியா, நோர்வே, தென்னாபிரிக்கா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், பிரேசில், மெக்ஸிக்கோ ஆகிய எட்டு நாடுகளும் ஒன்பது சிவில் சமூக அமைப்புகளும் இணைந்து இந்த அமைப்பை உருவாக்கியிருந்தன.

இப்போது இலங்கையுடன் சேர்ந்து இந்த அமைப்பில் 67 நாடுகள் இணைந்திருக்கின்றன. எனினும் ஆசியாவில் இந்த அமைப்பில் இணைந்துகொண்ட நாடுகள் குறைவே.

அதுவும் தெற்காசியாவில் இலங்கை மட்டுமே இதில் இணைந்திருக்கிறது. இந்தியா கூட இதில் இன்னமும் இணையவில்லை. திறந்த அரசுகளின் கூட்டமைப்பில் இலங்கை இணைந்து கொண்டமை, ஆட்சி மாற்றத்தின் விளைவு என்றே கூறலாம்.

ஆட்சி மாற்றத்தை அடுத்து மைத்திரிபால சிறிசேனவின் அரசாங்கம், கடைப்பிடிக்கும் கொள்கை திறந்த அரசுகளின் கூட்டமைப்பில் இணைவதற்கான தகைமைகளை அளித்து விட்டதாக மட்டும் கருதமுடியாது.

திறந்த அரசுகளின் கூட்டமைப்பின் கொள்கைகளை மைத்திரிபால சிறிசேன அரசாங்கம் முழுமையாக நிறைவேற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கே. இந்த அமைப்புக்குள் இலங்கையை இழுத்துச் சென்றிருக்கிறது அமெரிக்கா. பொறுப்புக்கூறல் என்பது இந்த அமைப்பின் முக்கியமான கொள்கை.

இதற்கான பொறிமுறை, தொழில் நுட்ப உதவிகளை அளித்தலிலும் இந்த அமைப்பு கவனம் செலுத்தி வருகிறது. அதேவேளை இலங்கை அரசாங்கம் சிவில் சமூகத்தின் கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டு மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்று சமந்தா பவர் தனது உரையில் கூறியிருந்தார்.

சிவில் சமூகத்தின் ஆதரவு இலங்கை அரசின் இயங்கியல் மாற்றத்துக்கு முக்கியமான ஒன்று எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். அதைவிட சில ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் சிவில் சமூகம் என்ற வளம் இருந்திருக்கவில்லை என்றும், ஆனால் இப்போது அது அரசாங்கத்தின் செயற்பாடுகளை வடிவமைப்பதில் அதிகளவான பங்களிப்பை மேற்கொள்வதில் உறுதி கொண்ட அரியதொரு வளமாக இருப்பதாகவும் அவர் கூறியிருந்தார்.

இலங்கையின் சிறிய சமூகம், ஆட்சி மாற்றத்தில் கணிசமான பங்கை ஆற்றியது. அவ்வாறு ஆட்சிமாற்றத்தில் பங்களிப்பு செய்யக்கூடிய வகையில், இலங்கையின் சிவில் சமூகத்தை ஒன்றிணைத்து வலுப்படுத்தியதில் அமெரிக்காவின் பங்கு முக்கியமானது.

2012ம் ஆண்டு கொழும்பில் அமெரிக்கத் தூதுவராகப் பொறுப்பேற்ற மிச்சேல் ஜே சிசன் தான் சிவில் சமூகத்தை வலுப்படுத்தி, அது ஆட்சி மாற்றத்தில் பங்காற்றும் நிலையை ஏற்படுத்தியிருந்தார்.

அது உள்நாட்டில் செய்யப்பட்ட முக்கியமான மாற்றம். இப்போது சிவில் சமூகத்துக்கும், இலங்கை அரசாங்கத்துக்கும் இடையிலான நெருக்கத்தை வலுப்படுத்தி, சர்வதேச அளவில் பொறுப்புக்கூறும் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படும் கடப்பாட்டை உறுதிப்படுத்தி இருக்கிறது அமெரிக்கா. அதற்காகத்தான் திறந்த அரசாங்கங்களின் கூட்டமைப்புக்குள் இலங்கை இழுத்துச் செல்லப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவின் இந்த நிகழ்ச்சி நிரல் இலங்கை அரசாங்கத்துக்கு உற்சாக மூட்டுவதாகவே இருந்தாலும், தனது பிரஜைகளுக்கான கடமைகளை முறையாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பை இலங்கை இன்னமும் கூடுதலாக உணரும் நிலைக்கு கொண்டு சென்றிருக்கிறது என்பதும் உண்மை.

-ஹரிகரன்-

# சிறுவர் பாலியல் வீடியோ வைத்திருந்த ஐ.நா.பணியாளர் அதிரடி பதவிநீக்கம்

(ஜெனிவா)

**சிறுவர்கள் தொடர்பான பாலியல் வீடியோக்களை மின்னஞ்சல் மூலமாக பகிர்ந்துகொண்ட ஐ.நா. சபையை சேர்ந்த நான்கு ஊழியர்கள் பணியில் இருந்து நீக்கப் பட்டுள்ளனர்.**




ஐ.நா. சபையில் 188 நாடுகளை சேர்ந்த 41 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் பணியாற்றுகின்றனர்.

இந்நிலையில் சிறுவர்களின் பாலியல் வீடியோக்களை பதிவு செய்து வைத்திருந்ததற்காகவும் ஒருவருக்கு ஒருவர் மின்னஞ்சலில் பகிர்ந்து கொண்டதற்காகவும் 4 ஊழியர்களை பணியில் இருந்து நீக்கியுள்ளதாக ஐ.நா. சபை நிர்வாகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐ.நா. சபைக்கு சொந்தமான வாகனத்தை சட்டவிரோதமாக கஞ்சா கடத்துவதற்கு பயன்படுத்திய ஒருவரும் பணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவர்கள் எந்த பகுதியில் பணி செய்பவர்கள் மற்றும் அவர்களது தனிப்பட்ட விபரங்கள் ஆகியன எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (3-7)

# பாக். உள்ளூராட்சி தேர்தல்; வன்முறையில் 11 பேர் பலி!



(லாகூர்)

பாகிஸ்தானில் உள்ளூராட்சி தேர்தலின் போது இரு தரப்பினரிடைய ஏற்பட்ட வன்முறை சம்பவத்தில் சுமார் 11 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தானின் பல்வேறு இடங்களில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் மற்றும் அதன் கூட்டணி கட்சிகளுக்கு, முன்னாள் கிரிக்கெட் வீரர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெக்ரிக் கட்சி கடும் சவால் விடுத்து வருகிறது.

கடந்த மாதம் இரண்டு மாகாணங்களில் நடைபெற்ற உள்ளூராட்சி தேர்தலில், இம்ரான் கானின் கட்சி கைபர் பக்துன்காவா பகுதியிலும், நவாஸ் ஷெரீப் மற்றும் அதன் கூட்டணி கட்சிகள் மேற்கு பலுசிஸ்தான் பகுதியில் வெற்றி பெற்றது.

இந்நிலையில், பாகிஸ்தானில் பஞ்சாப் மற்றும் சிந்து மாகாணங்களில நேற்றுமுன்தினம் உள்ளூராட்சி தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடைபெற்ற சிந்து மாகாணம் முக்கியத்துவம் வாய்ந்த இடமாக கருதப்படுகிறது. பஞ்சாபில் 14 மாவட்டங்களிலும் சிந்து மாகாணத்தில் 8 மாவட்டங்களிலும் தேர்தல் நடைபெற்றது. பஞ்சாபில் 1578 இடங்களுக்கு 40,101 வேட்பாளர்களும், சிந்து மாகாணத்தில் 10 ஆயிரம் வேட்பாளர்களும் போட்டியிட்டனர்.

இரு தரப்பிற்கும் இடையே கடும் போட்டி நிலவி வந்த நிலையில், நேற்று முன்தினம் தேர்தலின் போது வன்முறை வெடித்தது. தெற்கு சிந்து மாகாணத்தில் உள்ள கார்பர் மாவட்டத்தில் இந்த வன்முறை சம்பவம் நடைபெற்றது.

இம்ரான் கானின் கட்சியினரும், நவாஸ் ஷெரீப் கட்சியினரும் ஒருவரை ஒருவர் கடுமையாக தாக்கிக் கொண்டனர். மேலும் துப்பாக்கிச் சூடும் நடைபெற்றது.

இரு தரப்பு அரசியல் கட்சிகளுக்கு இடையே நடைபெற்ற கடும் துப்பாக்கிச் சூட்டு தாக்குதலில் 11 பேர் உயிரிழந்ததாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (3-7)

# நீதித்துறைசார் நியமனங்களில் அதிகபட்ச நேர்மை வேண்டும்

## இந்திய ஜனாதிபதி தெரிவிப்பு



(புதுடில்லி)

நதித்துறை நியமன நடைமுறையில் யாரும் தலையிடக்கூடாது என்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

டில்லி உச்சநீதிமன்றத்தின் பொன்விழா டில்லி விஞ்ஞான பவனில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் பங்கேற்ற ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி பேசும்போது,

நீதித்துறை அமைப்பு தன்னாட்சி அதிகாரத்தைக் கொண்டது. இது ஜனநாயகத்துக்கு மிகவும் முக்கிய அம்சமாகும். நீதித்துறை நியமன நடைமுறைகளில் அதிக பட்ச நேர்மை இருப்பதை உறுதிசெய்ய வேண்டும்.

இதில் சிறந்தவர்களைத் தேர்ந்தெடுக்க நாம் எத்தகைய நடைமுறையை பின்பற்றினாலும் அது சிறந்த அமைப்பைக் கொண்டதாகவும் வெளிப்படைத் தன்மை கொள்கையைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும். நதித்துறை நியமன நடைமுறையில் யாரும் தலையிடக்கூடாது. ஜனநாயகத்தின் முக்கியமான 4 தூண்களில் ஒன்றாக நீதித்துறை இருப்பதால் எப்போதெல்லாம் தேவைப்படுகிறதோ அப்போது அதில் சுய பரிசோதனையும் மற்றும் சுய திருத்தங்களும் செய்து கொள்ளப் படவேண்டும்.

நீதிமன்றங்களில் தீர்ப்புகள் விரைவாக அமைவது அவசியமானது. நீதிவழங்குவதை தாமதப்படுத்தக் கூடாது. மேலும், நீதிமன்றங்கள் எளிதாக அணுகும் வகையிலும், குறைந்த செலவீனங்களையும் கொண்டதாக இருக்க வேண்டும்.

உயர்நீதிமன்றத்தில் 60 ஆயிரம் வழக்குகளும், உச்சநீதிமன்றத்தில் 40 இலட்சம் வழக்குகளும், இதர நீதிமன்றங்களில் 2 கோடியே 60 இலட்சம் வழக்குகளும் தேங்கிக் கிடக்கின்றன. இவற்றுக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும என ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார். (3-7)

# ரஷ்யாவை சேர்ந்த சிறுமிக்கு தமிழக சிறுவனின் இதயம் பொருத்தி மருத்துவர்கள் சாதனை

(சென்னை)

சென்னையில் ரஷ்யாவை சேர்ந்த சிறுமிக்கு தமிழகத்தை சேர்ந்த சிறுவனின் இதயத்தை பொருத்தி மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

• சைபீரியாவைச் சேர்ந்த விக்டோரியா என்ற 10 வயதுச் சிறுமி Restrictive Cardio Myopathy என்ற நோயால் பாதிக்கப்பட்டுளளார்.

இதய மாற்று அறுவை சிகிச்சை செய்யாவிட்டால் விக்டோரியா பிழைப்பது அரிது என்று மருத்துவர்கள் கூறியதால் குடும்பத்தினர் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

ரஷ்ய நாட்டின் மருத்துவச் சட்டப்படி, மழலையரின் உடம்பில் அங்க மாற்று அறுவை சிகிச்சை செய்வதற்கு அனுமதி கிடையாது.

இந்நிலையில், தரமான இதய மாற்று அறுவை சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் குறித்து இணையத்தில் தேடியபோது தமிழகத்தைச் சேர்ந்த முன்னணி மருத்துவர் கே.ஆர்.பாலகிருஷ்ணனை பற்றி தெரியவந்துள்ளது.

எனவே விக்டோரியாவின் குடும்பத்தினர், ரஷ்ய ஜனாதிபதி புதினை சந்தித்து விண்ணப்பித்துள் ளனர்.

இந்தியாவில் அறுவை சிகிச்சை மேற்கொள்வதற்கான அனுமதியை புதின் வழங்கியுள்ளார்.

கடந்த மாதம் திருவாரூர் அருகே, வீதி விபத்தில் மூளைச்சாவு அடைந்த சிறுவனின் உடல் உறுப்புக்களை தானம் செய்ய அவரது குடும்பத்தினர் அனுமதி அளித்துள்ளனர்.

இந்நிலையில், விக்டோரியாவுடன் குடும்பத்தினர் சென்னை வந்து, மருத்துவமனையில் விக்டோரியாவை அனுமதித்துள்ளனர்.

பின்னர், அந்த சிறுவனின் இருதயத்தை விக்டோரியாவின் உடலில் பொருத்தி பாலகிருஷ்ணன் தலைமையிலான மருத்துவக் குழு சாதனை படைத்துள்ளனர்.

விக்டோரியாவின் தாயார் கூறுகையில், எங்களின் மகிழ்ச்சியைச் சொல்ல வார்த்தைகளே இல்லை.

என் மகளின் உயிரைக் காப்பாற்றிய இந்திய மருத்துவர்களுக்கும், அவள் வாழ, தன் மகனின் இதயத்தை அளித்த அந்தத் தாய்க்கும் நாங்கள் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என தெரிவித்துள்ளார். (3-7)

# இந்தியாவின் உயரமான மனிதர் மரணம்

இந்தியாவிலேயே உயரமான மனிதராக இருந்த தெலுங்கானா மாநிலத்தை சேர்ந்த குத்தையா மாரடைப்பால் மரணமடைந்தார்.

தெலுங்கானா மாநிலம் கரிம் நகர் மாவட்டத்துக்கு உட்பட்ட புட்னூர் கிராமத்தில் வசித்து வந்தவர் கே.குத்தையா (வயது 40). 7 அடி 6 அங்குலம் உயரம் கொண்ட இவர், இந்தியாவின் மிகவும் உயரமான மனிதர் என்று வர்ணிக்கப்பட்டார்.

மேலும் ஆசிய அளவில் 2-வது இடத்திலும் இருந்தார். ஐதராபாத் நகரில் வசித்து வந்த அவரை ஏராளமானோர் பார்த்து சென்றனர்.

குடிசைத்தொழில் பொருட்களை விற்று பிழைப்பு நடத்தி வந்த குத்தையா, சமீப காலமாக நோயால் பாதிக்கப்பட்டு இருந்தார். இதனால் அவர் அங்குள்ள இ.எஸ்.ஐ. வைத்தியசாலையில் கடந்த சில நாட்களாக அனுமதிக்கப்பட்டு இருந்தார்.


நேற்று முன்தினம் இரவு குத்தையாவுக்கு திடீரென மாரடைப்பு ஏற்பட்டது. இதனால் வைத்தியசாலையிலேயே அவரது உயிர் பிரிந்தது. அவரது உடல் நேற்று காலையில் அவரது சொந்த ஊருக்கு கொண்டு செல்லப்பட்டது. (3-7)

# ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகளே விமானத்தைச் சுட்டு வீழ்த்தினர்

## ரஷ்யாவில் தேசிய துக்கதினம் அனுஷ்டிப்பு

(கெய்ரோ)

**எகிப்திலிருந்து ரஷ்யாவுக்கு 224 பயணிகளுடன் சென்ற விமானத்தை ஐ.எஸ்.தீவிரவாதிகளே சுட்டு வீழ்த்தியதாக தெரிவிக்கப்படுகிறது.**



எகிப்து நாட்டில் உள்ள சினாய் கோஸ்டல் ரிசார்ட்டில் இருந்து ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ் பெர்கிற்கு 217 பயணிகள். 7 ஊழியர்களுடன் நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்ற பயணிகள் விமானம் 23 நிமிடங்களில் மத்திய சினாய் பகுதியில் விழுந்து நொறுங்கியது.

செங்கடலை ஒட்டியுள்ள கடற்கரை நகரமான ஷர்ம்-அல்-ஷேக் நகரில் இருந்து திரும்பிய அந்த விமானத்தில் இருந்தவர்கள் பெரும்பாலும் ரஷ்ய நாட்டு சுற்றுலா பயணிகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

17 குழந்தைகள் உட்பட 224 பேரும் பலியான இந்த விமானத்தை எகிப்தில் உள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்திய தாகவும் தெரியவந்துள்ளது.

இந்த கோரச் சம்பவத்தில் பலியானவர்களின் உடல்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ள எகிப்து அதிகாரிகள் விபத்துக்குள்ளான விமானத்தின் இரு கறுப்புப் பெட்டிகளும் கண்டெடுக்கப்பட்டதாக தெரிவித்துள்ளனர்.

அவற்றில் பதிவாகியுள்ள விமானியின் உரையாடலை ஆய்வு செய்த பின்னர், அந்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதா? அல்லது, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தரையில் விழுந்து நொறுங்கியதா? என்ற விபரம் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த கோர விபத்து உலகம் முழுவதும் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. பல நாட்டு தலைவர்களும் விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கலையும். வருத்தத்தையும் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், இந்த விபத்தை ரஷ்யாவின் மிகப்பெரும் சோக சம்பவமாக குறிப்பிடும் வகையில், நேற்று முதலாம் திகதி தேசிய துக்க தினமாக அனுசரிக்க வேண்டும் என ரஷ்ய ஜனாதிபதி புதின் அறிவித்துள்ளார். (3-7)

## கனடா அமைச்சரவையில் முதன்முறையாக அதிக பெண்கள்

கனடாவின் புதிய பிரதமராக பதவியேற்கும் ஜஸ்டின் ட்ரிடியுவின் புதிய அமைச்சரவையில் 12 பெண்கள் இடம்பெறுகின்றனர்.

கடந்த 19ஆம் திகதி நடைபெற்று முடிந்த 42வது கனேடிய பொதுத் தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களை பெற்று வெற்றி பெற்ற லிபரல கட்சியின் தலைவர் ஜஸ்டின் ட்ரிடியு கனடாவில் 23வது பிரதமராக பதவியேற்கவுள்ளார்.


இவர் நாளை மறுதினம் புதன் கிழமை பிரதமராக பதவியேற்பார் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் ஜெனரல் டேவிட் ஜோன்ஸ்டன் தலைமையில் இந்த பதவியேற்பு விழா நடைபெறவுள்ளது.

பிரதமரின் பதவியேற்பை தொடர்ந்து 25 உறுப்பினர்களை கொண்ட அமைச்சரவை பதவிப் பிரமாணமும் இடம்பெறுகிறது.

25 பேர் அமைச்சர்களாக தெரிவு செய்யப்படவுள்ள நிலையில், அவர்களில் 12 பேர் பெண்கள் இருப்பார்கள் என தெரியவந்துள்ளது.

கனடா வரலாற்றில் அமைச்சரவையில் அதிக அளவிலான பெண்கள் இடம்பெறுவது இதுவே முதன்முறையாகும். (3-7)

## சிரியாவுக்கு அமெரிக்க படைகள் ஒபாமா அதிகாரபூர்வ ஒப்புதல்



சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக அமெரிக்க கூட்டுப் படைகள் வான்வழி தாக்குதல்கள் நடத்தி வருகின்றன.

இருந்த போதிலும் அங்கு அமெரிக்க படைகள் அனுப்பி வைக்கப்படமாட்டாது என கூறப்பட்டு வந்தது. மத்திய கிழக்கு நாடுகளில் போர் நடவடிக்கையில்ஈடுபட ஜனாதிபதிஒபாமா விரும்பாததே இதற்கு காரணம்.

ஆனால் இப்போது இதில் சிறிய அளவிலான மாற்றம் ஏற்பட்டுள்ளது. சிரியாவுக்கு அமெரிக்க சிறப்பு படை அடுத்த மாதம் அனுப்பி வைக்கப்படும் என தகவல்கள் கூறுகின்றன. இதற்கான அதிகார பூர்வ ஒப்புதலை ஜனாதிபதி ஒபாமா வழங்கி உள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி மாளிகை செய்தி தொடர்பாளர் ஜோஷ் எர்னஸ்ட் நிருபர்களிடம் பேசும்போது. சிரியா படைகளுக்கு பயிற்சி அளிக்கவும், ஆலோசனை வழங்கவும். உதவிகள் செய்யவும் அமெரிக்க சிறப்பு படை அனுப்பி வைககப்படுகிறது.

50 இற்கும் குறைவான எண்ணிக்கையிலான வீரர்கள் தான் இந்தப் படையில் இடம் பெறுவார்கள் என கூறினார்.

இதேபோன்று ஈராக் நாட்டுக்கும் கூடுதலான சிறப்பு படைகளை அனுப்புவதற்கான வாய்ப்பை ஜோஷ் எர்னஸ்ட் நிராகரிக்கவில்லை. (3-7)

## ருமேனியாவில் விடுதியில் தீ; 27 பேர் பலி, 155பேர் காயம்



ருமேனியாவில் இரவு விடுதி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 27 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

ருமேனியாவின் புக்கரெஸ்டில் உள்ள இரவு விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவு வானவேடிக்கையுடன் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தில் கூரை தீப்பிடித்து எரிந்ததுடன் மளமளவென பரவ தொடங்கியது.

இதனையடுத்து அங்கு கூடியிருந்த மக்கள் அலறியடித்துக் கொண்டு வெளியேறும் போது, பலர் தீயில் சிக்கி பரிதவித்தனர்.

இந்த விபத்தில் 27 பேர் உயிரிழந்தனர், 155 பேர் படுகாயம் அடைந்தனர்.

இந்நிலையில் காயமடைந்த நபர்களுக்கு இரத்தம் தேவைப்படுவதால் பொதுமக்கள் இரத்த தானம் செய்ய முன்வர வேண்டும் என சுகாதாரத்துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் இதுகுறித்து விரிவான விசாரணை நடத்தவும் துணை பிரதமர் காப்ரியேல் ஒபிரியா இணக்கம் தெரிவித்துள்ளார். (3-7)

## கழுத்தறுத்து கொலை செய்யும் ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள்

சிரியாவில் அமெரிக்கா நடத்திய தாக்குதலுக்கு பதிலடி தரும் விதமாக 4 பிணைக்கைதிகளின் கழுத்தை அறுத்து கொல்லும் வீடியோவை வெளியிட்டு ஐ.எஸ். தீவிரவாதிகள் அதிர்ச்சியளித்துள்ளனர்.

சிரியாவில் ஐ.எஸ்.அமைப்பினருக்கு சொந்தமான சிறைச்சாலையில் அதிரடி தாக்குதல் நடத்திய அமெரிக்க சிறப்பு படையினர் 70 கைதிகளை மீட்டனர்.

இதில் ஐ.எஸ்.அமைப்பின் முக்கிய அதிகாரி ஜோஸ்வா வீலர் உட்பட 20 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இந்நிலையில் இந்த தாக்குதலுக்கு பழி வாங்கும் நடவடிக்கையாக குர்திஷ் படையை சேர்ந்த 4 வீரர்களின் தலையை வெட்டி கொலை செய்யும் வீடியோவை வெளியிட்டு ஐ.எஸ். அமைப்பினர் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

அந்த வீடியோவில் பேசும் தீவிரவாதி ஒருவர் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் பெயரை குறிப்பிட்டு நீங்கள் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாகவே இந்த படுகொலையை செய்கிறோம் என்று கூறுகிறார்.

பின்னர் பிணைக்கைதிகளில் ஒருவரின் கழுத்தை அறுத்து கொலை செய்கின்றார். அதை மற்ற பிணைக்கைதிகள் பார்க்க கட்டாயப்படுத்தப்படுகின்றனர்.

இதையடுத்து அவர்களையும் தீவிரவாதிகள் படுகொலை செய்கின்ற காட்சிகள் அந்த வீடியோவில் இடம்பெற்றுள்ளது.

தற்போது வெளியாகியுள்ள இந்த வீடியோ பல்வேறு தரப்பினரையும் கடும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. (3-7)

# எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை விஜேவீரவின் மனைவி கவலை

இலங்கையில் தொடர்ந்தும் தனக்கோ தன் குழந்தைகளுக்கோ பாதுகாப்பு இல்லை என்று படுகொலை செய்யப்பட்ட ஜே.வி.பி. யின் தலைவர் ரோஹண விஜேவீரவின் மனைவி தெரிவித்துள்ளார்.

ரோஹண விஜேவீரவின் மனைவி சித்திராங்கனி இது தொடர்பாக பி.பி.சி.சந்தேசயவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் தனது பிள்ளைகள் பாடசாலை மற்றும் பல்கலைக்கழகங்களில் ஏனைய மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களால் பல்வேறு அவமானங்களையும், ஒதுக்கல்களையும் எதிர்கொள்ள நேரிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் உயிரிழந்த தனது கணவன் மற்றும் ஜே.வி.பி. யினரின் செயற்பாடுகளால் சமூகத்தின் மத்தியில் இருந்து தனது பிள்ளைகளின் மீது அநாவசிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவதாக சுட்டிக்காட்டும் அவர், தான் மட்டுமன்றி தனது பிள்ளை களும் ஒருபோதும் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டதில்லை என்றும் வலியுறுத்தியுள்ளார்.

எனினும் இன்றுவரை தான் மற்றும் தனது குழந்தைகள் பல்வேறு வழிகளில் பாதிக்கப்பட்டது மாத்திரமன்றி, தனது சொத்துக்களும் இழந்து வருமானம் ஏதுமற்ற நிலையில் வாழ நேர்ந்துள்ளதாக சித்திராங்கனி வேதனை தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் தனக்கோ, தன் குழந்தைகளுக்கோ இலங்கை எந்த வகையிலும் பாதுகாப்பான நாடாக அமையப் போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# உள்ளூராட்சி சபை உதவியாளர்கள் விரைவில் செயலாளர்களாக பதவி உயர்வு செய்யப்படுவர்

வடக்கு, கிழக்கில் விசேட ஆளணியாக நியமிக்கப்பட்டவர்களில் பெரும்பாலான உள்ளூராட்சி உதவியாளர்கள் வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளில் நீண்டகாலமாக செயலாளர்களாக உள்ளனர்.

மீதமானவர்களையும் செயலாளர்களாக நியமனம் செய்ய வடமாகாண முதல்வர் மற்றும் பிரதம செயலாளர்களுடன் தொடர்பு கொண்டுள்ளேன் என வடமாகாண வாணிபத்துறை அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு உள்ளூராட்சி உதவியாளர்களின் பதவி உயர்வு செயலாளர் நியமனம் குறித்து மேலும் கருத்து தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு 2014 ஆம் ஆண்டில் வகுப்பு ஒன்று பதவி உயர்வு கிடைத்திருக்கவேண்டும். ஆனால் 2004 ஆம் ஆண்டு கிடைக்க் வேண்டிய வகுப்பு II பதவி உயர்வு கூட இதுவரை அவர்களுக்கு வழுங்கப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாகவும் இவர்களுக்கான பதவி உயர்வு 1999 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆம் திகதி முதல் செயற்படும்படியான சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் கிடைக்கும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தற்போது வடக்கில் முகாமைத்துவ உதவியாளர்கள், 'உள்ளூராட்சி உதவியாளர்கள் பதவி வகிப்பவர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்களாக பதவி வகித்து வருகின்றனர்.

உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு வடமாகாண சபை 'சுப்பிறா' தர பரீட்சைக்கு இதுவரை இடமளிக்கவில்லை.

எதிர்காலத்தில் சேவைப்பிரமாணக் குறிப்பில் மாற்றம் செய்து 'சுப்பிறா' தர பரீட்சைக்கு இடமளிக்க பிரதம செயலாளருடன் பேசவுள்ளேன்,

தற்போது உள்ளூராட்சி சபைக்குச் செயலாளர் நியமனம் வழங்கும்போது விசேட ஆளணியாக உள்ளூராட்சி சபைக்கு என கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களையும் 'சுப்பிறா' தர முகாமைததுவ உதவியாளர்களையும் இணைந்த வகையில் நியமனம் செய்யப் படவேண்டும்.


இது தொடர்பிலும் வடக்கு மாகாண முதல்வர், பிரதம செயலாளர் ஆகியோருடன் பேசியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 220 | 250 | 200 |
| தக்காளி | 140 | 140 | 150 | 150 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 100 | 70-90 | 80 | 100 | 100 |
| கரட் | 80 | 70-230 | 60-120 | 160 | 70 |
| பூசணி | 60 | 50 | 40 | 60 | 40 |
| புடோல் | 80 | 70 | 140 | 100 | 50 |
| வாழைக்காய் | 70 | 40 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 140 | 110-140 | 120 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 130 | 100-150 | 140 | 160 | 120 |
| பாகற்காய் | 160 | 200 | 200 | 240 | 180 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 120 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 70 | 100 | 80 |
| பய்ற்றங்காய் | 180 | 150-170 | 150 | 160 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 120 | 90 |
| பீற்றூட் | 40 | 25-40 | 40 | 60 | 50 |
| கறிமிளகாய் | 200 | 200-300 | 180 | 200 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 70-100 | 140 | 160 | 120 |
| போஞ்சி | 200 | — | — | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 60 | — | 80 | 70 |
| கீரை - 1 பிடி | 30 | 20 | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 380 | 360-400 | 400 | 600 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 50 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 200 | — | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | — | — | — | 180 |
| முள்ளங்கி | 50 | 60 | 40 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 25 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## "தமிழரசுக் கட்சி" செல்வநாயகம் தொடங்கினார் 24




...நீதி, நேர்மை, தூய வாழ்க்கை முதலான உயர் பண்புகளைக் கொண்டிருந்த இவரை அரசியலுக்கு வருமாறு பொன்னம்பலம் அழைத்தார். தமிழர்களின் நலனுக்காகப் பாடுபட விரும்பி செல்வநாயகம் அரசியலில் அடியெடுத்து வைத்தார்.

1945 ஆம் ஆண்டிலேயே வழக்கறிஞர் தொழிலில் மாதம் 10 ஆயிரம் ரூபாய் சம்பாதித்தவர், செல்வா. அரசியலில் நுழைந்து பணம் சம்பாதித்தவர்களுக்கு மத்தியில் கட்சிக்காக தன் பணத்தைச் செலவிட்டவர் இவர். இதனால் இறுதிக் காலத்தில் பொருளதார ரீதியில் சிரமப் பட்டார்.

### தமிழரசுக் கட்சி

செல்வநாயகத்தின் தமிழரசு கட்சியின் (ஆங்கிலத்தில் பெடரல் கட்சி) தொடக்கக் கூட்டம், 1949 ஆம் ஆண்டு ஜனவரி இரண்டவது வாரத்தில் கொள்ளுப்பட்டியில் உள்ள அவர் வீட்டில் நடந்தது. தமிழர்களுக்கு மாநில சுயாட்சி பெற்றுத் தருவதற்குத் தமிழரசுக் கட்சி போராடும் என்று அவர் அறிவித்தார்.

தன் கட்சியின் நோக்கங்களை விளக்க, பல்வேறு இடங்களில் நடந்த கூட்டங்களில் செல்வநாயகம் பேசினார். இந்தக் கூட்டங்களில் நட்சத்திர பேச்சாளராக அமிர்தலிங்கம் (செல்வநாயகம் மறைவுக்குப் பிறகு இலங்கைத் தமிழர்களின் தலைவராக விளங்கியவர்) அறிமுகப் படுத்தப்பட்டார். கட்சிப் பணிகளில் வன்னியசிங்கம் முக்கிய பங்கெடுத்துக்கொண்டார்.

### கண் துடைப்பு மசோதா

இதற்கிடையே பொன்னம்பலத்துக்குக் கொடுத்த வாக்குறுதிக்காகப் பிரஜா உரிமை சட்டத்தில் திருத்தங்கள் செய்யும் ஒரு மசோதாவைப் பாராளுமன்றத்தில் பிரதமர் சேனநாயகா கொண்டு வந்தார்.

இது வெறும் கண்துடைப்பாகவே நடந்தது. பிரஜா உரிமை பெறாதவர்கள் அந்த உரிமையைப் பெற திருமணம் ஆனவராக இருந்தால் இலங்கையில் தொடர்ந்து 7 ஆண்டுகள் வசித்திருக்க வேண்டும். திருமணம் ஆகாதவராக இருந்தால் 10 ஆண்டுகள் வசித்திருக்க வேண்டும் என்று



டட்லி சேனநாயகா

இந்தத் திருத்தங்களில் கூறப்பட்டிருந்தது. தன்னுடைய பாட்டன், முப்பாட்டன் எல்லாம் இலங்கையில் வசித்தவர்கள் என்பதற்கெல்லாம் ஆதாரங்கள் காட்ட வேண்டியிருந்தது.

பாராளுமன்றத்தில் இந்தத் திருத்தத்தின் மீது விவாதம் நடைபெற்றபோது செல்வநாயகம் அதைக் கடுமையாக எதிர்த்தார். பிரஜா உரிமையை இழந்தவர்கள் அதைப் பெறுவதற்கு உதவும் வகையில் திருத்த மசோதா அமைய வேண்டும்.

இப்போது பிரதமர் தாக்கல் செய்துள்ள மசோதா பிரஜா உரிமை பெற உதவுவதற்குப் பதிலாகப் பல தடைகளை ஏற்படுத்தி உள்ளது. பல தோட்டத்தொழிலாளர்கள், அடுக்கடி தங்கள் இருப்பிடங்களை மாற்றி இருக்கிறார்கள். அப்படியிருக்க அவர்கள் எப்படித் தாங்கள் தொடர்ந்து இலங்கையில் இருந்ததை நிரூபிக்க முடியும்? என்று அவர் கேட்டார்.

காரசாரமான விவாதத்துக்குப் பிறகு திருத்த மசோதா மீது ஓட்டெடுப்பு நடந்தது. பொன்னம்பலமும் அவர் ஆதரவாளர்களும் மசோதாவை ஆதரித்து ஓட்டுப் போட்டனர்.

செல்வநாயமும் அவர் ஆதரவாளர்களும் எதிர்த்து வாக்களித்தனர்.


### மசோதா நிறைவேறியது

ஏனினும் செல்வநாயம் கூறியது போலவே இந்த மசோதாவினால் எந்தப் பலனும் இல்லை. 10 இலட்சம் தமிழர்கள் நாடற்றவர்கள் என்ற நிலையில் நீடித்தனர்.

### தேர்தலில் இழப்பு

மலையகத் தமிழர்களின் தலைவராக சி.தொண்டமான் விளங்கினார்.

1947 தேர்தலின்போது மலையத் தமிழர்கள் ஓட்டுரிமை பெற்றிருந்ததால் பாராளுமன்றத்தில் 7 இடங்களை அவர்கள் பெற்றனர். ஆனால், 10 லட்சம் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்ட



புத்தர் ஞானம் பெற்ற போதி மரத்தின் (அரச மரம்) ஒரு கிளை, இலங்கைக்கு கொண்டு போகப்பட்டு வளர்க்கப்பட்டது. இன்றும் அந்த மரம் பாதுகாக்கப்படுகிறது. இதன் வயது 2 ஆயிரம் ஆண்டு!

தால் 1952 ஆம் ஆண்டு தேர்தலில் அவர்கள் போட்டியிடுவதற்கான தகுதியைக் கூட இழக்க நேரிட்டது.

### சேனநாயக்க மரணம்

1952 தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன், பிரதமர் டி.எஸ். சேனநாயக்க மரணம் அடைந்தார். (தொடரும்)

### புலம்பெயர் அமைப்புக்கள், தனிநபர்கள் பற்றிய

# மகிந்தவின் தடைப்பட்டியல் மைத்திரி அரசால் மீளாய்வு

## அறிக்கை இம்மாதம் கையளிப்பு



**(கொழும்பு)** — **விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகள என்றும், தீவிரவாதத்துக்கு ஆதரவளித்தனர் என்றும், மகிந்த அரசாங்கத்தினால் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்ட பட்டியல் மைத்திரி அரசால் மீளாய்வு செய்யப்படுவதாக பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.**

விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகள் என்று, 16 புலம்பெயர் அமைப்புகளையும். தீவிரவாதத்துக்கு ஆதரவளித்தனர் என்ற 400 தனிநபர்களையும், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தடை செய்தது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஆயிரத்து 373 தீர்மானத்துக்கு அமைய, இந்த அமைப்புகள் மற்றும் தனி நபர்களின் பெயர்களை உள்ளடக்கிய வர்த்தமானி அறிவிப்பு, கடந்த ஆண்டு மார்ச் மாதம் வெளியிடப்பட்டது.

தடை செய்யப்பட்ட இந்த அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் பட்டியல் பாதுகாப்பு அமைச்சினால் மீளாய்வு செய்யப்பட்டு வருவதாகவும், இந்த மீளாய்வு அறிக்கை இந்த மாதம் வெளிவிவகார அமைச்சிடம் கையளிக்கப்படும் என்றும் பாதுகாப்புச் செயலர் தெரிவித்துள்ளார்.

இது புலம்பெயர் அமைப்புகள், தனிநபர்கள் மீதான தடையை நீக்குவதற்கான முன்னோடி நடவடிக்கை என்று கருதப்படுகிறது.

கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பில் இடம் பெற்றிருந்த 16 அமைப்புகள், 400 தனிநபர்களின் விபரங்களை வெளிவிவகார அமைச்சுடன் இணைந்து, பாதுகாப்பு அமைச்சு மீளாய்வு செய்து வருவதாகவும், பாதுகாப்புச் செயலர் தெரிவித்தார்.

இந்தப் பட்டியல் தொடர்பாக, பாதுகாப்பு அமைச்சு விரிவாக ஆய்வில் ஈடுபட்டுள்ளதாகவும், வெளிவிவகார அமைச்சு இந்த தடையை நீக்குவது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து தீர்மானிக்க முன்னர் இந்த மீளாய்வு அறிக்கை இம்மாதம் சமர்ப் பிக்கப்படும் என்றும் அவர் கூறி யுள்ளார்.

வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகளுடன் தொடர்புகளை வைத்துள்ள தனது வலையமைப்புகளின் மூலம், அவர்களின் வலையமைப்பு, நிகழ்வுகள், சம்பவங்களில் தொடர்புடையவர்கள் பற்றிய தகவல்களை பாதுகாப்பு அமைச்சு சேகரித்து வருவதாகவும், பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, புலம்பெயர் தமிழர்களுடனான தொடர்புகள் மற்றும் அவர்களிடம் இருந்து தகவல்களை பெறும் விவகாரங்களை வெளிவிவகார அமைச்சே கையாளவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# நல்லாட்சி குறித்த கனவுகள் நொறுங்கிப் போய்விட்டன

நல்லாட்சி தொடர்பான கனவுகளுடன் அதிகாரம் கையளிக்கப் பட்டுள்ள அரசின் செயற்பாடுகள் காரணமாக பொதுமக்களின் எதிர்பார்ப்புகள் நொருங்கிப் போயுள்ளதாக கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

திவயின பத்திரிகையின் ஞாயிறு வார இதழுக்கு புரவெசி பலய அமைப்பின் முக்கியஸ்தர் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி அளித்துள்ள நேர்காணலில் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள கலாநிதி நிர்மல் ரஞ்சித்,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கிராமப் புறங்களில் பெற்றிருந்த செல்வாக்கைப் பார்த்து அவரை ஒருபோதும் தோற்கடிக்க முடியாது என்று ஆரம்பத்தில் நாங்கள் நினைத்திருந்தோம்.

எனினும் பொதுமக்களின் மீதான அடக்குமுறை காரணமாக மகிந்த அரசாங்கம் வீட்டுக்கு அனுப்பப்பட்டது.

அதன் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிய இந்த அரசாங்கமும் பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை நொருங்கிப் போகச் செய்துள்ளது.

நல்லாட்சி என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையே இந்த அரசின் செயற்பாடுகள் மூலம் தகர்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்றும் கலாநிதி நிர்மல் ரஞ்சித் தேவசிறி மேலும் கவலை தெரிவித்துள்ளார். (இ-7-10)

# நாம் ஆட்சி நடத்தும் போதே அடிவாங்க நேரிட்டுள்ளது!

## எம்.பி.சிறினால் டி மெல் ஆதங்கம்

எங்களுடைய அரசாங்கம் ஆட்சி நடத்தும் போதே அடிவாங்க நேரிட்டுள்ளதாக தேசிய தொழிலாளர் சங்கத்தின் செயலாளரும், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சிறினால் டி மெல் தெரிவித்துள்ளார்.

கடந்த இருபது ஆண்டுகளாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கங்களினால் நெருக்குதல்களை எதிர்நோக்கினோம்.

அரச நிறுவனங்களில் பணியாற்றி வரும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சார்பான தொழிற்சங்கங்களுக்கு மீளவும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

தேசிய தொழிலாளர் சங்கத்திற்கும், ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் சங்கத்திற்கும் இடையில் அதிகாரத்தை உறுதி செய்து கொள்ளும் போட்டி நிலைமை உருவாகியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நெருக்கமான தொழிற்சங்கங்கள் பல்வேறு வழிகளில் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றன.

மக்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாக்களித்துள்ளார்கள் என்பதனை அனைவரும் புரிந்து கொணடு செயற்பட வேண்டுமென சிறினால் டி மெல் சிங்கள வார இறுதி பத்திரிகையொன்றுக்கு மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## அளவுக்கு மிஞ்சினால்

அசடு அண்ணாசாமி என்று ஒருவர் இருந்தார்! அவர் அசட்டுத் தனமாக ஏதாவது பண்ணிக் கொண்டே இருப்பார். ஒருநாள் உடம்பு சரியில்லை என்று டாக்டரிடம் போனார். டாக்டரும் சோதித்துப் பார்த்தார். சத்துக்குறைவாக இருந்தது. அதற்குத் தேவையான விற்றமின் மாத்திரை எழுதிக் கொடுத்தார்.

இதில் 30 மாத்திரை வாங்கிக் கொள்ளுங்கள். தினமும் ஒன்று சாப்பிட்டு வந்தால் சரியாகப் போய்விடும் என்றார். டாக்டர் நான் ஒரு யோசனை சொல்லலாமா? இந்த 30 மாத்திரையை எதற்காக 30 நாட்கள் சாப்பிடச் சொல்றீங்க. ஒரேநாளில் சாப்பிட்டால் உடனே குணமாகிவிடாதா என்றார்? இதுதான் அசடு அண்ணாசாமி.

அதன்பின் அந்த டாக்டர் எச்சரிக்கையாக இருந்தார். 30 மாத்திரையையும் தான் வாங்கி தினம் ஒரு மாத்திரை கொடுத்துக் கொண்டுவந்தார். இல்லையென்றால் விடயம் விபரீதமாகிவிடும் என்பதை புரிந்து கொண்டார். இந்த அண்ணாசாமி மாதிரி நினைப்பவர்கள் நம்மிலும் பலபேர் உண்டு.

சத்து மாத்திரைகளை அதிகம் உட்கொண்டால் உடம்பில் அதிக சத்து சேரும் என்று பலபேர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுதவறு. சத்து மாத்திரைகளை அளவுக்கதிகமாக உட்கொண்டால் தேவையில்லாத பல பிரச்சினைகள் வந்து சேரும். அதனால் கவனமாக இருக்க வேண்டும். மருத்துவரை அணுகாமல் நம்முடைய இஷ்டத்துக்கு உட்கொள்ளக்கூடாது.

விற்றமின் டியை அதிகமாக உட்கொண்டால் அதன் காரணமாகவும் அதனால் ஏற்படும் இரத்த கல்சிய அதிகரிப்பு காரணமாகவும் பல உடல் கோளாறுகள் ஏற்படும். விற்றமின் டியை ஒருவர் ஒரு நாளைக்கு 4000 யுனிற் அளவுக்கு உட்கொண்டால் அதன் காரணமாக உடல் அசதி, மனச்சோர்வு, மூளைக் குழப்பம், குமட்டல், வாந்தி, பசியின்மை, மலச்சிக்கல், அதிக சிறுநீர் போக்கு, இதயத்துடிப்பு சீரின்மை போன்ற பாதிப்புக்கள் ஏற்படும்.

விற்றமின் டி காரணமாக உடம்பில் கல்சியம் 13 மில்லி கிராம் வரை அதிகரித்தால் கல்சிய கல் உண்டாகும். சிறுநீரகம், நுரையீரல், இதயம், இரத்தக்குழாய், தோல் போன்ற பகுதிகளில் கல்சியகல் உண்டாகும்.

4000 யுனிற் விற்றமின் டியினால் சிலசமயம் ஒவ்வாமை காரணமாக உடம்புவலி, வயிற்றுவலி போன்ற நோய்களை உண்டாக்கும். விற்றமின் டியானது 18 மில்லியன் அளவுக்கு போய்விட்டால் உயிருக்கே ஆபத்து ஏற்படும்.

அடுத்தது விற்றமின் ஏ. விற்றமின் ஏ அடங்கிய மருந்துகளை குழந்தைகளுக்கு சாதாரணமாகக் கொடுக்கிறோம். கடல்மீன் என்பவற்றை தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு விற்றமின் ஏ உடலில் அதிகமாவதால் வயிற்றுவலி, குமட்டல், வாந்தி, தலைவலி, மயக்கம், சோம்பல், கண் நரம்பு உறை வீக்கம், குழந்தையின் உச்சிப் பள்ளம் வீக்கம், தோல் உரிதல் போன்ற பாதிப்புக்கள் உண்டாகும்.

ஒருவர் ஒரு நாளைக்கு 40 ஆயிரம் யுனிற் வீதம் விற்றமின் ஏயை தொடர்ந்து உட்கொண்டு வந்தாரானால் எலும்புவலி, மூட்டுவலி, எலும்புகளில் அதிக வளர்ச்சி, முடி உதிர்தல், உதடு-வாய் வறட்சி, பசியின்மை, உதடு வெடிப்பு, இலேசான காய்ச்சல், எடை இழப்பு, கல்லீரல்- மண்ணீரல் வீக்கம் எல்லாம் வந்துவிடும்.

விற்றமின் ஈ அதிகமாக உட்கொண்டால் உடல் அசதி, சமிபாட்டுத் தொந்தரவு, தலைவலி, அதிக இரத்த அழுத்தம் என்பன உண்டாகும். விற்றமின் கே அதிகமானால் கர்ப்பிணிப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மஞ்சள் காமாலை வரக்கூடும். விற்றமின் சி அதிகமானால் உடலில் பி $_{12}$ விற்றமின் குறைபாடு ஏற்பட்டு சிறுநீரகத்தில் ஒக்சலேட் கற்கள் உற்பத்தி ஆகலாம்.

இரும்புச்சத்து, துத்தநாக மருந்து ஆகியவற்றை அதிகமாக உட்கொண்டாலும் பல பாதிப்புகள் ஏற்படும். அதனால் எந்தச் சத்து மாத்திரைகளாக இருந்தாலும் மருந்தாக இருந்தாலும் அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு கஷ்டத்தை விலை கொடுத்து வாங்காதீர்கள்.

நம்ம அசடு அண்ணாசாமியின் அசட்டுத்தனத்துக்கு இன்னொரு உதாரணம் கூட உண்டு. டாக்டர் ஒரு தடவை அவரிடம் தினம் 8 டம்ளர் தண்ணீராவது குடியுங்கள் என்றார். உடனே அவர் அது முடியாது டாக்டர்... தினம் 5 டம்ளர் தண்ணீர்தான் என்னால் குடிக்க முடியும் என்றார். ஏன் என்று கேட்டார் டாக்டர். அதற்கு அவர் எங்க வீட்டில் 5 டம்ளர்தானே இருக்கு என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தமிழ் சினிமா வரலாறு

**43**

## 28 வயதில் கிட்டப்பா மரணம் (2-12-1933)

...எவ்வளவு நல்ல வழியில் நடந்தாலும் நீங்கள் இல்லாததால் ஒவ்வொருவரும் நீ என்ன இருந்தாலும் நாடகக்காரி தானே! அவர்தான் உன்னை விட்டுப் போய்விட்டாரே! நீ ஏன் இன்னும் அவரையே நினைத்திருக்க வேண்டும் என்று சொல்லும் வார்த்தையானது, இனி நான் உலகில் இருந்து என்ன பயன் என்ற முடிவு க்குக் கொண்டு வந்து விடுகிறது.

நான் ஏன் உலகில் இருக்க வேண்டும். இறந்தால் நலம். என் அன்பார்ந்த பர்த்தாவாகிய நீங்கள் இருக்கும்போது என்னை இம்மாதிரி உலகத்தார் பேசுவது முறையா- கடவுளுக்குத்தான் கண் இல்லையா? கண்ணா! இம்மாதிரி எல்லாம் என்னை அபகீர்த்திக்கு ஆளாக்க வேண்டாம். நான் எந்த விதமான குற்றங்கள் செய்திருந்த போதிலும் என்னை மன்னிக்கவும். ஆனந்த சாகரத்தில் மூழ்கும் நாளை எதிர்பார்க்கிறேன்.

தங்கள் தேகத்தைப் பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளுங்கள். அலட்சியமாக இருக்க வேண்டாம். உங்களை நம்பிக்கொண்டிருக்கும் என்னை கைவிட்டுவிடாதீர்கள். சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும்.

இவ்வாறு கல்லும் கரையும்படி சுந்தராம்பாள் எழுதிய கடிதங்கள் பல.

தமிழ் நாடக உலகில் ஈடு இணையற்ற நடிகராக- பாடகராகத் திகழ்ந்த கிட்டப்பா, தமது 28 ஆவது வயதில் மரணம் அடைந்தார். 25 வயதில் விதவையாக கே.பி.சுந்தராம்பாள் துறவுக்கோலம் பூண்டார்.





கிட்டப்பாவும் சுந்தராம்பாளும் பிரிந்து வாழ்ந்த காலத்தில் கிட்டப்பாவுக்கு சுந்தராம்பாள் எழுதிய பல கடிதங்களில் உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று குறிப்பிட்டுள்ளார். அதற்குக் காரணம் உண்டு.

கிட்டப்பாவுக்கு மதுப் பழக்கம் உண்டு. குடும்பச் சூழ்நிலை காரணமாக குடிப்பழக்கம் அதிகமாகி மதுவுக்கு அடிமையானார்.

சிகிச்சை அளித்த டாக்டர், உங்கள் குடல் வெந்து போய்விட்டது. ஈரல் சுருங்கிப்போய் விட்டது. இனி குடித்தால் உயிருக்கு ஆபத்து என்று எச்சரித்தும் குடியை கிட்டப்பா நிறுத்தவில்லை.

**28 வயதில் மரணம்**

1933 ஆம் ஆண்டு திருவாரூரில் ஒரு நாடகத்தில் நடித்துக்கொண்டிருந்த போது மயக்கம் போட்டு விழுந்தார். பிறகு குணம் அடைந்தாலும்படுத்த படுக்கையானார்.

1933 ஆம் ஆண்டு டிசெம்பர் 2 ஆம் திகதி பிற்பகல் கிட்டப்பா காலமானார். இறந்தபோது அவருக்கு 28 வயது. சுந்தராம்பாளுக்கு 25 வயது.

கிட்டப்பா இறந்த செய்தியை சுந்தராம்பாளுக்கும் தாமதமாகவே தெரிவித்தார்கள். தகவல் தெரிந்தும் கதறி அழுதுகொண்டே விரைந்தோடினார்.

ஆனால், பிற்பகல் 3 மணிக்கு இறந்த கிட்டப்பாவின் உடலை 6 மணிக்கு தகனம் செய்துவிட்டனர்.

ஆயினும் சுந்தராம்பாள், கிட்டப்பாவின் அஸ்தி கலசத்தைப் பெற்று காசிக்குச் சென்று திரிவேணி சங்கமத்தில் கரைத்தார்.

**துறவுக்கோலம்**

கிட்டப்பா, சுந்தராம்பாளைப் பிரிந்து வாழ்ந்த போதிலும் அவர் மீது சுந்தராம்பாள் கொண்டிருந்த அன்பு அளவு கடந்தது.

கிட்டப்பா இறந்ததும் சுந்தராம்பாள் வெள்ளை ஆடை உடுத்தி துறவுக்கோலம் பூண்டார்.

நாடகங் களில் நடிக்க மறுத்தார்.

சுந்தராம்பாள் பாடலைக் கேட்டு இதயத்தை பறி கொடுத்தவர்கள், அவர் பாடாமலும் நடிக்காமலும் இருந்ததைக் கண்டு கவலை அடைந்தார்கள்.

காங்கிரஸ் தலைவர் சத்திய மூர்த்தி உட்பட பலரும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, ஆண்களுடன் சேர்ந்து நடிப்பதில்லை என்று உறுதி எடுத்துக்கொண்டு நந்தனார் நாடகத்தில் நந்தனாராக நடித்தார்.

இந்தக் காலகட்டத்தில் தமிழில் பேசும் படங்கள் வெளிவரத் தொடங்கியிருந்தன.

*(தொடரும்)*

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 311**

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

...அவர்களை நோக்கிய நன்றியுணர்வுடன் இருங்கள்; பிறகு நீங்கள் ஒருபோதும் யாரையும் சாதாரணமாக எடுத்துக்கொள்ள மாட்டீர்கள்.

பிறகு நீங்கள் ஒவ்வொருவரையும் அவரும் இந்தப் பிரபஞ்ச இருப்புத் தன்மையின் ஒரு பகுதியாக இருப்பதற்காக வழிபடுவீர்கள்; மரியாதையுடன் நடத்துவீர்கள்.

நீங்கள் விடயங்களைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளாத பட்சத்தில் உங்களுக்குக் கிடைத்தவற்றைப் பெரிதாகக் கருதுவீர்கள்.

நீங்கள் உட்கார்ந்து ஆராய்ந்து பார்ப்பீர்களானால், நாம் எப்பொழுதுமே நமக்குக் கிடைக்காதவற்றைத்தான் பெரிதாகக் கருதுகிறோம் என்பதை உணர்ந்து கொள்வீர்கள்!

நமக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டாலும் நாம் சந்தோஷமாக இருப்பதில்லை; ஏனெனில் நாம் நமக்குக் கிடைக்காதவற்றைப் பற்றியே எண்ணிக் கொண்டு இருக்கிறோம்!

வாழ்க்கை உங்களுக்குக் கொடுத்ததாக நீங்கள் கருதுவதையெல்லாம். அமர்ந்து பட்டியலிட வேண்டும் என்று கற்பனை செய்து கொள்ளுங்கள்.

நீங்கள் அந்தப் பட்டியலை உங்கள் சொந்தக் கண்களிலிருந்தே ஆரம்பிக்கலாம்.

நான் முன்பே சொன்னதுபோல் எத்தனை பேர்களுக்குக் கண் பார்வை அருளப்படவில்லை என்பது உங்களுக்



குத் தெரியுமா?

ஒரு நாள் நீங்கள் எழுந்திருக்கும் பொழுது பார்வையை இழந்துவிட்டீர்கள் என்பதை உணர நேர்ந்தால் என்ன நடக்கும் என்பதை உங்களால் கற்பனையாவது செய்து பார்க்க முடிகிறதா?

உங்களால் படுக்கையில் இருந்து எழுந்து குளியலறைக்குக் கூடச் செல்ல முடியாது!

நன்றியுணர்வேயின்றி நீங்கள் முன்னர செய்த ஒவ்வொரு செயலும் இப்பொழுது உங்கள் முழுப் பிரயத்தனத்தையும் எடுத்துக்கொள்ளும்.

எவ்வாறாயினும் வாழ்க்கையில் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட எல்லா விடயங்களையும் நீங்கள் பட்டியலிட ஆரம்பித்தால் அது ஒரு நீண்ட பட்டியலாக முடியும்.

அதை முடித்த பிறகு உங் களுக்குக் கொடுக்கப்படாததாக நீங்கள் கருதும் விடயங்களைப் பட்டியல் இடுங்கள்.

இதுவும் ஒரு நீண்ட பட்டியலாகவே.... உண்மையில் மிக நீண்ட பட்டியலாகவே இருக்கும்!

இது ஒருவேளை பென்ஸ் காரில் ஆரம்பித்து, பென்ஸ் காரை விடவும் நீளமான ஒரு பட்டியலாக முடியக் கூடும்!

நீங்கள் சிரத்தையுடன் ஒரு விடயத்தைக் கூடத் தவற விடாமல் எழுதுவீர்களானால் இரண்டு பட்டியல்களுமே முடிவற்றவையாக உண்மையில் எல்லையற்றவையாக இருக்கும்.

சரி, இப்பொழுது இரண்டு பட்டியல்களும் நம் முன் இருக்கிறது.

இப்பொழுது நாம் எந்தப் பட்டியலைப் பார்க்கப்போகிறோம் என்பதைத் தீர்மானிப்பது நம்மிடம்தான் இருக்கிறது.

*(தொடரும்)*

**பரமஹம்ஸ சுவாமி**

# அரசியல்வாதிகள் கொள்கைத்திட்டங்களை வகுக்க வேண்டும் அரசாங்க சேவையில் தலையீடு செய்வதாக இருக்கக்கூடாது

## மின்வலு எரிசக்தி பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசியல்வாதிகளின் கடமை நாட்டின் கொள்கைத்திட்டங்களை வகுப்பதாக இருக்க வேண்டுமேயொழிய மக்களுக்கான அரச சேவையில் தலையீடு செய்வதாக இருக்கக்கூடாது என மின்வலு எரிசக்தி பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.**



பண்டாரகம பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற நடமாடும் சேவையில் கலந்து கொண்ட மக்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசியல்வாதிகள் அரச சேவை விவகாரங்களை கட்டாயம் மேற்பார்வை மட்டும் செய்ய வேண்டும். அத்துடன் பொதுச் சேவைகள் சீராக இடம் பெறுவதையும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

பொலிஸ் அதிகாரிகளை இடமாற்றுதல், பிரதேச செயலர்களை இடமாற்றுதல், பாடசாலை அதிபர்களை இடமாற்றுதல் மற்றும் அரச அதிகாரிகளை இடமாற்றுதல் என்பவற்றில் அரசியல்வாதிகளின் தலையீடு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடாது. அரசியல்வாதிகள் அரசாங்க சேவையில் சட்டங்களைச் சரியாக அமுல்படுத்துவதையும், அரசாங்க சேவை மற்றும் பொலிஸ் துறை சுதந்திரமாக செயற்படுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் தற்போதுள்ள அரசாங்கம் பொதுச்சேவை ஆணைக்குழு, சுதந்திரமான பொலிஸ் ஆணைக் குழு என்பவற்றை அமைத்துள்ளது. எப்படியிருந்தாலும் அரசாங்க ஊழியர்கள் மக்களுக்கான சேவையில் தமது கௌரவத்தைப் பேணுவதுடன், அரசியல் சார்பு நிலைகளை மறந்து சுதந்திரமாகவும் திறமையாகவும் சேவையாற்ற வேண்டும்.

அரசாங்க ஊழியர்களின் இடர்பாடுகளை அரசாங்கம் உணர்ந்து கொண்டு அவர்களுக்கான சம்பளத்தை 10 ஆயிரம் ரூபாவால் அதிகரித்துள்ளது. மேலும் அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதியத்தையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்க ஊழியர்களின் கௌரவத்தை பாதுகாக்க மேலும் பல சலுகைகள் அடுத்த வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்படவுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (3)

## யானைத் தொல்லையா? அழையுங்கள் 1992 க்கு

யானைத்தொல்லை தொடர்பில் தெரியப்படுத்த புதிய தொலைபேசி இலக்கம் ஒன்று அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இதன் படி 1992 என்ற இலக்கத்திற்கு அழைத்து இது குறித்து அறிவிக்கலாம். வனவிலங்குகள் தொடர்பான அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேராவின் பணிப்புரைக்கு அமைய அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த இலக்கத்தின் ஊடாக பொதுமக்கள் வன ஜீவராசிகள் திணைக்கத்தின் பிரதம அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும். யானைகளால் மனிதர்களுக்கும் மனிதர்களால் யானைகளுக் கும் ஏற்படும் சேதங்களைக் குறைப்பதே இதன் நோக்கம் என வன ஜீவராசிகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (3)

## கொழும்பு நகருக்குள் நுழையும் வாகனங்களுக்கு வரி அறவீடு

(கொழும்பு)

கொழும்பு மாநகரில் ஏற்படும் வாகன போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு கொழும்பு நகருக்குள் நுழையும் அனைத்து வாகனங்களுக்கும் வரி அறவிடுவது தொடர்பாக அரசாங்கம் பரிசீலனை செய்து வருகி ன்றது.

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தில் இந்த வரியை அமுல்படுத்தும் சாத்தியம் தொடர்பாக திறைசேரி ஆராய்ந்து வருகிறது.

நாளாந்தம் கொழும்பு நகருக்குள 5 இலட்சம் வாகனங்கள் நுழைகின்றன. இதனால் வாகன நெரிசல் ஏற்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த கார் உரிமையாளர்கள் பொதுப்போக்குவரத்தை அதிகம் பயன்படுத்துவதில் ஈடுபாடு காட்ட அரசாங்கம் ஊக்கமளிக்கிறது.

மேலும் வாகனங்களுக்கு வரி அறவிடும் நடைமுறையில் கொழும்புக்குள் நுழையும் காலி, கண்டி, நீர்கொழும்பு வீதி நுழைவாயிலில் ஒரு விசேட பற்றுச் சீட்டு நிலையத்தை அமைக்கவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

வாகன உரிமையாளர்கள் கொழும்பு நகரைவிட்டு செல்லும் வரை அநத பற்றுச்சீட்டை தம்முடன் வைத்திருக்க வேண்டுமென அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.


வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த மேற்படி வரி அறவிடும் திட்டம் தொடர்பான திட்ட முன் வரைபை கொழும்பு மாநகரசபை முன்வைததுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 534


கீர்த்து கரன்




அபி





சசி




கஜேந்திரன்




சேந்தன்



சிவராசா



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அனைத்துக் கட்சிகள் மாநாடு (APC): பேசுவதற்கு மட்டுமல்ல, தீர்வுகளுக்காகவுமே!

**சண்டேலீடர் பத்திரிகையில் "அனைத்துக் கட்சிகள் மாநாடு: பேசுவதற்கு மட்டுமல்ல தீர்வுகளுக் காகவுமே (APC)!" எனும் தலைப்பில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தின் மொழியாக்கம்....**

....அப்படி முடிந்திருக்கக்கூடிய ஒன்றாக இருந்திருக்குமானால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிகப் பெரும்பான்மைப்பலத்துடன் வீரப்புருஷராக கோலோச்சி விதிவலம் வந்துகொண்டிருந்த அந்த மாகோன்னத காலத்திலேயே அது நடந்தேறியிருக்க வேண்டும். ஏற்கனவே பிரேரிக்கப்பட்ட அதே 'சட்டவியல் நீதி விசாரணைகள்' இப்போதும் ஓடி மறைந்திடவில்லை. ஐ.நா.மனித உரிமை சபையின் ஒவ்வொரு வருடாந்த அமர்வுகளிலும் அவை தொடர்ந்தும் வந்துகொண்டேயிருக்கின்றன. அதுமட்டுமன்றி காலப்போக்கிலும் அதன் தீவிரம் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. கற்பனை மின்சாரக் கதிரையில் வீர மரணத்தை எதிர்கொள்பவர் போன்றதொரு வெறும் தோற்றப்பாட்டை ஏற்படுத்தி மக்களையே முட்டாளாக்கி அவர்கள் மத்தியில் அச்சத்தையும் பீதியையும் விதைப்பது ஒரு வேளை, உள்ளூர் அரசியலில் வியக்க வைக்கும் வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்திருக்கலாம்.











ஆனாலும் மறைந்து விடாத அந்த ஐ.நா. தீர்மானத்தின் மீது இவற்றின் தாக்கம் எதுவும் செல்லுபடியற்றதேயாகும்.

பரிணாம வளர்ச்சி பெற்ற குறித்த இத்தீர்மானமானது உண்மையில் ராஜபக்ஷ ஆட்சி பெற்றெடுத்த அவலட்சணமான ஒரு குறைப்பிரசவக் குழந்தையேதான்.

இதனையே சிறிசேனவும் விக்கிரமசிங்கவும் சேர்ந்தே சுமக்கும் கடமையாகக் கொண்டுள்ளனர்.

இவ்விதமாக மகிந்த வில்லங்கமாக பெற்றெடுத்த வேண்டத்தகாத அவரது இக்குழந்தை சட்டத்தின் கண்காணிப்பில் வீசி விடக்கூடியதாக இல்லையென்றாலும் அதனைப் பேணி மெருகேற்றி பார்வைக்காவது ஓரளவு சிறப்பான முறையில் அதனை வாழ வைக்க வேண்டியது அவர்களது காலத்தின் கட்டடமாயிற்று.

குற்றஞ்சாட்டுவோர் சட்டவியல் நீதிமன்ற நடைமுறைகளில் வெளி நாட்டு சக்திகள் சம்பந்தப்படுவதை விரும்பாத போதிலும் உள்ளக விசாரணைகளுக்கு அனுசரணையாகவேயுள்ளனர்.

அரசாங்கமும் அந்த விசாரணை நடைமுறைகளை உள்ளக நடைமுறைகளென்றே கூறுகிறது.

இந்த இரு நிலைப்பாடுகளுக்குமிடையிலேயே விட்டுக்கொடுப்புடன் கூடிய ஒருவித நடுநிலை எட்டப்பட வேண்டும்.

குற்றஞ்சாட்டும் எதிர்த்தரப்பினரால் தீர்வொன்றை முன்வைக்க முடியுமா? அல்லது அது பற்றிய ஏதாவது நோக்கமாவது அவர்களுக்கு இருக்கிறதா?

ஐ.நா. மனித உரிமை சபை தீர்மானத்தை தீவிரமாக எதிர்த்துக் குற்றம் சாட்டுபவர்கள் சிலரது மனப்போக்கின் வெளிப்பாடானது தீர்மானத்தையிட்டு எந்தவித கவலையோ கருத்தோ இல்லாமல் மகிந்த ராஜபக்ஷவின் அரசியல் மீள் எழுச்சிக்கு உயிரோட்டம் அளிப்பதற்கான ஒரு கருவியாக அதனைப் பயன்படுத்துவதிலேயே கண்ணுங்கருத்துமாயிருப்பதாகவே தோன்றுகிறது!

குற்றஞ்சாட்டுவோர்களுள், மற்றவர்கள் மீது சேற்றை அள்ளி வீசுவதையே கூடுதல் வழக்கமாகக் கொண்ட சிலர் ஐ.நாவின் தீர்மானம் மட்டில் பயனுள்ள கருத்துக்கள், ஆலோசனைகள் வழங்குவார்களா என்பது சந்தேகமானதே. குற்றஞ்சாட்டுவோர் மத்தியில் இருக்கும் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மட்டுமே ஒருவேளை, பெறுமதியான கருத்துக்களை முன் வைக்கக்கூடிய ஒருவராக இருக்கக்கூடுமென்றாலும் அவருங்கூட தற்போது அவ்வித முயற்சிகளை கைவிட்டவராகவும் அரசியல் சித்துவிளையாட்டுக்களிலேயே கூடுதல் நாட்டங் கொண்டவராகவுமே காணப்படுகிறார்.




பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாத அரசியல் கட்சிகளையும் அனைத்து கட்சி மாநாட்டிற்கு ஜனாதிபதி சிறிசேன அழைத்திருப்பது மாநாட்டின் கலந்துரையாடல் பொருள் வளத்தை மேலும் வலுவூட்டுவதாக அமையக்கூடும். மக்களின் கருத்துக்களை நெருக்கமான முறையில் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களான மதத்தலைவர்கள் - பேராளர்கள் மற்றும் கல்விமான்கள், புத்திஜீவிகள் போன்றவர்களது குறிப்பிடத்தக்க கருத்துக்களும் வரவேற்கப்பட வேண்டும்.

ஆனாலும் இவற்றுக்கெல்லாம் எவ்வளவு காலம் ஆகும்? முன்னைய சர்வகட்சி மாநாடுகள் வருடக்கணக்கில் நடந்தேறியும் பெறுபேறுகள் பூச்சியமே!

முன்னைய காலத்து 'திண்ணைப்பேச்சு' தரவரிசையில் இவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்!

நவீன காலத்து 'வெற்றுவேட்டு- திண்ணைப் பேச்சு'க்களே இவையெல்லாம்.

'நேட்டோ' போன்ற சர்வதேச பேச்சரங்கமும் இதே வகையினதா? செயற்பாடுகளே இல்லாத வெறும் பேச்சுக்கள் மட்டும்தான்!



இவைகளனைத்திலும் பார்க்க மைத்திரிபால சிறிசேனவினால் சிறப்பாகவே சாதித்துவிட முடியும் என நம்புவோமாக!

(முற்றும்)

**தமிழில். யோகர்**

# வியாபாரம் மேற்கொள்ள இலகுவான நாடுகள்; பட்டியலில் 107 ஆவது இடத்தில் இலங்கை

உலக நாடுகளில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலகுவான நாடுகளின் பட்டியலில் இலங்கை 6 இடங்கள் முன்னேறியுள்ளது.

189 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில் கடந்த வருடத்தில் 113ஆவது இடத்திலிருந்த இலங்கை இம்முறை 107ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளது. இந்தப் பட்டியலானது உலக வங்கியினால் வருடாந்தம் வெளியிடப்படுகின்றது.

வியாபாரத்தை ஆரம்பித்தல். அனுமதிப்பத்திரத்தை பெறல். மின்சாரம் பெற்றுக்கொள்ளல் மற்றும் இடங்களைப் பதிவு செய்தல் முதலான பத்து விடயங்களை கருத்திற்கொண்டே இந்த பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

இதனடிப்படையில், சிங்கப்பூர் முதலிடத்திலும் நியூசிலாந்து மற்றும் டென்மார்க் ஆகியன முறையே இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களிலும் உள்ளன.

வியாபாரத்தை ஆரம்பிப்பது தொடர்பில் இலங்கை 98 ஆவது இடத்திலும், கட்டுமானத்திற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதில் இலங்கை 77 ஆவது இடத்திலும் உள்ளது.

அத்துடன். பட்டியலில் மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் வசதி தொடர்பில் இலங்கை 81 ஆவது இடத்திலுள்ளது. வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கான வசதிகள் தொடர்பில் தெற்காசிய நாடுகளான பூட்டான மற்றும் நேபாளம் ஆகிய நாடுகள் முதலிரண்டு இடங்களில் உள்ளதுடன் இலங்கை 3-ம் இடத்திலுள்ளது.

இந்தப் பட்டியலில் வியாபாரத்தை ஆரம்பிப்பதற்கான வசதிகள் மிகக்குறைவாக உள்ள நாடாக எரித்திரியா உள்ளது.

# நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் வீழ்ச்சி

ஓகஸ்ட் மாதத்தில் நாட்டின் ஏற்றுமதி வருமானம் 19.5 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

தேயிலை, ஆடைக்கைத்தொழில் மற்றும் ரப்பர் உற்பத்திகளின் வருமானம் குறைவடைந்துள்ளமையே இதற்கான காரணமாகக் கருதப்படுகிறது.

வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி கடந்த வாரம் வெளியிட்டுள்ள புதிய தகவல்களுக்கு அமைய, கடந்த வருடத்தின் ஓகஸ்ட் மாதத்தில் 993 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. எனினும், இந்த வருடத்தின் ஓகஸ்ட் மாதத்தில் அதன் பெறுமதி 798 மில்லியன் டொலராக குறைவடைந்துள்ளது.

ஏற்றுமதி விகிதம் மற்றும் விலை குறைவு காரணமாக தேயிலை ஏற்றுமதி வருமானம் 34 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், மத்திய கிழக்கு மற்றும் ரஷ்ய வர்த்தக சந்தைகளுக்கான ஏற்றுமதி குறைவடைந்தமை இதில் தாக்கம் செலுத்துவதாகவும அந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

ஐரோப்பிய சந்தையில் விதிக்கப்பட்ட தடை உத்தரவு காரணமாக மீன் ஏற்றுமதி வருமானம் ஓகஸ்ட் மாதத்தில் 42 வீதத்தால் குறைவடைந்துள்ளது. அத்துடன், ரப்பர் ஏற்றுமதி 33 வீதத்தினாலும் தேங்காய் ஏற்றுமதி 16 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது.

நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் 50 வீதத்திற்கும் அதிக பங்களிப்பு வழங்கும் ஆடை ஏற்றுமதி வருமானம் ஓகஸ்ட் மாதத்தில் 6.6 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது.

# ஆர்பிகோவுக்கு அழகிகள் விஜயம்



Arpico சுபர் சென்டரை அண்மையில் அழகும் கவர்ச்சியும் மிக்க பெண்கள் கூட்டம் மொய்த்துக் கொண்டது. உலக அழகு ராணி போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்யும் வாய்ப்பை பெறும் தகுதிக்காக போட்டியிடும் 2015 இலங்கை அழகு ராணி இறுதிப் போட்டியில் பங்கேற்கும் 15 அழகிகளும் இங்கு வருகை தந்திருந்தனர்.

ஹைட்பார்க் கோனர், பத்தரமுல்லை மற்றும் தெஹிவளை Arpico சுபர் சென்டர்களுக்கே இந்த அழகிகள் பட்டாளம் விஜயம் செய்தது.

2012, 2013 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளில் இலங்கை அழகு ராணி போட்டிகளில் வெற்றியீட்டியவர்கள், அடுத்த அழகு ராணியாக வரும் ஆர்வத்தோடு காத்திருப்போர் என இந்த அழகிகள் பட்டாளம் Arpico சுபர் சென்டர் நிலையங்களில் பொருள் கொள்வனவில் ஈடுபட்டது.

படத்தில் 2015 இலங்கை அழகு ராணி போட்டியில் பங்கேற்கும் இறுதிப் போட்டியாளர்கள் Arpico நிலையம் ஒன்றில் காணப்படுகின்றனர்.

# தொழில் தொடங்க உகந்த நாடு; இந்தியா 130வது இடத்தில்

தொழில் தொடங்க உகந்த நாடு என்ற தலைப்பில் உலக வங்கி நடத்திய ஆய்வில் இந்தியா 130-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட உலக வங்கியின் அறிக்கையில், தொழில் தொடங்குவதற்கு சிறந்த இடமாக இந்தியா திகழ்கிறது என்றும், 12 நடைமுறைகளை செய்து 29 நாட்களில் இந்தியாவில் தொழில் தொடங்கி விடலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக. 2004 ஆம் ஆண்டு உலக வங்கி வெளியிட்ட அறிக்கையில் இந்தியாவில் தொழில் தொடங்க 127 நாட்கள் ஆகும் என்று கூறியிருந்தது நினைகூரத்தக்கது.

கடந்த வருடம் இந்தியா 134-வது இடத்தில் இருந்தது. மொத்தம் 189 நாடுகளை ஆய்வுக்கு உள்ளடக்கி தற்போது வெளியிடப்பட்டுள்ள இந்தப் பட்டியலில், சீனா 84-வது இடத்தில் உள்ளது.

எளிதாக தொழில் தொடங்வதற்கு ஏற்ற நாடுகளின் பட்டியலை மொத்தம் பத்து காரணிகளின் அடிப்படையில் வகைப்படுத்துகின்றனர். சில சமயங்களில் நாட்டிற்கு வரும் அந்நிய முதலீடுகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.




# பணப் பரிமாற்றம் இல்லா முதல் நாடாகிறதா சுவீடன்?

உலகின் அனைத்து நாடுகளிலும் பணம் தான் முக்கிய மாற்றுக் கருவியாக செயற்படுகிறது. அனைத்து பரிமாற்றங்களுக்கும் மூல ஆதாரமே பணம் தான். ஆனால் முதல் முறையாக இந்த வழக்கத்தைத் தகர்த்துள்ளது சுவீடன்.

ஐரோப்பிய நாடான சுவீடனில் பெருமளவில் மொபைல் வழி பணம் செலுத்தும் முறை வழக்கத்திற்கு வந்துவிட்டதால், இனி பணத்துக்கு வேலை இல்லை எனும் நிலை சுவீடனில் வந்துவிட்டது.

சுவீடன் நாட்டின் பணமான சுவீடிஷ் கரோனாவை இப்போது அந்த நாட்டு மக்கள் பெருமளவில் பயன்படுத்துவதில்லை. பெரும்பாலான செலுத்துகையை அவர்கள் தங்கள் கடன் அட்டை, வங்கி அட்டை அல்லது மொபைல் மூலமே செலுத்துகிறார்களாம். இந்த நாட்டில் சின்னச் சின்ன பொருட்களை, சிறு தொகைக்கு வாங்கக்கூட கடன் அல்லது வங்கி அட்டைகளே போதுமானதாக உள்ளன.

சுவீடனின் மொத்த பணத்தில் 40 சதவீதம் மட்டுமே புழக்கத்தில் உள்ளது. மீதி ப்ளாஸ்டிக் அட்டைகள் தான். 60 சதவீத ரொக்கம் வங்கிகள் அல்லது வீடுகளில் தூங்கிக் கொண்டுள்ளது. ஏற்கெனவே சுவீடனின் வங்கிகள் பலவும் ரொக்கப் பணத்தை ஏற்பதில்லை என்று அறிவித்துவிட்டன. இதனால் தன்னிச்சையாக வங்கிப் பரிவர்த்தனை ரொக்கப் பணத்தில் நடைபெறுவதில்லை

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 7,081.49 | 7,042.06 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,821.83 | 3,803 ⇩ |

விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) 4,450.563

உயர்வடைந்த பங்குகள்(ரூ) ஓட்டோரோம்(1,084.40), உடப்புசலாவ(26.80), லங்கா சீமெண்ட்(8.40) ஈகுவிட்டி ரூ(73.10) பான்ஏசியன் பவர்(3.60)

சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ) ஹேலீஸ் பைவர்(66.90), ரேடியன் ஜெம்(41.60), போகல காபைட்(36.60) இன்டஸ்ரியல் ஆஸ்ப்(390.30) ஏஎம்எப் கோ லிமிட்(551.80)

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# 100 கண்ட 7 நிறுவனங்கள்

இன்று நமக்கு மிகவும் பரிட்சயமான பிராண்டுகள் பல. நாம் பருகும் குளிர்பானங்களிலிருந்து, அன்றாடம் பயன்படுத்தும் பல பொருள்களை தயாரிக்கும் நிறுவனங்கள் இலங்கையில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் பிரபலமானவை. இவற்றில் பல நிற்வனங்கள் தொடங்கி நூறாண்டுகளைக் கடந்தவை. கால ஓட்டத்தில் கரைந்து போகாமல் இன்றளவும் தங்களைத் தக்கவைத்துள்ள சில நிறுவனங்களின் பின்னணி மிகவும் சுவாரஸ்யமானவை.

<u>ஜெனரல் எலெக்ட்ரிக்</u>

பல்வேறு துறைகளில் தனது முத்திரையை பதித்த நிறுவனங்களில் ஒன்று. தாமஸ் அல்வா எடிசன் 1878ல் தொடங்கிய நிறுவனம். மின்சார பல்பு முதற்கொண்டு விமான சேவை வரை பல நூறு தொழில்களில் ஈடுபட்டுள்ளது.

வீட்டு உபயோகப்பொருட்கள், எண்ணெய், இயற்கை எரிவாயு. மின்சாரம், விமான சேவை, போக்குவரத்து. மருத்துவம் என பல துறைகளிலும் உற்பத்தி மற்றும் சேவைத துறை பணிகளையும் மேற்கொண்டுள்ளது. அமெரிக்காவின் ஃபெர்பீல்டு நகரில் தலைமையகம் அமைந்துள்ளது. பணியாளர்கள் 3,05,000 ஆண்டு வி/னை 14,845 கோடி டொலர்

<u>ஃபோர்டு</u>

கார் உற்பத்தியில் பல நுட்பங்களைப் புகுத்திய ஹென்றி ஃபோர்டு 1903-ம் ஆண்டு தொடங்கினார். அமெரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப்பா, ஆசிய பசிபிக் நாடுகளில் தனது தொழிற்சாலைகளை வைத்துள்ளது. வாகனக் காப்பீடு, முதலீட்டு நிறுவனம், ரியல் எஸ்டேட் போன்ற தொழில்களிலும் ஈடுபட்டுள்ளது. அமெரிக்காவின் மிக்கிசன் மாகாணத்தில் தலைமையகம் உள்ளது.

பணியாளர்கள் 1,87,000 ஆண்டு வி/னை 14,408 கோடி டாலர்

<u>கோல்கேட்</u>

தனிநபர் சுகாதாரம் சார்ந்து தொடங்கப்பட்ட நிறுவனங்களில் நூற்றாண்டுகளை கண்ட முக்கிய நிறுவனம். பற்களுக்கான தயாரிப்புகள், வீட்டுச் சுகாதார பொருட்கள் மற்றும் செல்ல பிராணிகளுக்கான உணவுகள் தயாரிப்பில் உள்ளது.

பற்பசை, பவுடர்களில் முன்னணி பிராண்டுகளைக் கொண்டுள்ளது. வில்லியம் கோல்கேட் என்பவரால் 1806ல் தொடங்கப்பட்டது.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தலைமையகம் உள்ளது.

பணியாளர்கள் 37.700 ஆண்டு வி/னை 1.728 கோடி டொலர்

<u>நெஸ்லே</u>

உலக அளவில் உணவுப்பொருட்கள் துறையில் உள்ள மிகப்பெரிய சுவிட்சர்லாந்து நிறு வனம். குடிநீர், உணவு, நொறுக்கு தீனி வகைகள் என 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தயாரிப்புகளைக் கொண்டுள்ளது.

ஹென்றி நெஸ்லே என்பவரால் 1866-ல் தொடங்கப்பட்டது. ஐரோப்பா, அமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா கண்டங் களில் 197 நாடுகளில் ஆலைகள் வைத்துள்ளது. நியூசிலாந்தின் விவெய் (Vevey) நகரில் தலை மையகம் அமைந்துள்ளது.

பணியாளர்கள் 3,39,000 ஆண்டு வி/னை 10.008 கோடி டொலர்

<u>கோகோ கோலா</u>

குளிர்பான துறையில் இருக்கும் மிகப் பழமையான நிறுவனங்களில் ஒன்று. 1886 ஆம் ஆண்டு ஆசா கிரிக்ஸ் காண்ட்லர் என்பவர் அமெரிக்காவில் தொடங்கினார். உலகம் முழுவதும் ஆலைகளை உள்ளது.

2-ம் உலகப்போர் காலகட்டத்திலேயே 44 நாடுகளில் தனது சந்தையை இந்நிறுவனம் வைத்திருநதது. அமெரிக்காவின் அட்லாண்டாவில் தலைமையகம் உள்ளது.

பணியாளர்கள் 1,29,200 ஆண்டு வி/னை 4.591 கோடி டொலர்

ரோலக்ஸ்

செல்வந்தர்களின் அந்தஸ்தின் அடையாளம் ரோலக்ஸ். சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரில் தலைமையகம் அமைந்துள்ளது.

100க்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பட்டு வருகிறது. லண்டலில் சுவர் கடிகார விநியோகம் செய்து வந்த ஹான்ஸ் வில்ஸ்டோர்ப் என்பவர் தனது 24 வது வயதில் 1905ல் நிறுவனத்தை தொடங்கினார்.

1926லேயே தண்ணீர் புகாத கை கடிகாரத்தை தயாரித்த நிறுவனம். உலகின் முன்னணி விளையாட்டு வீரர்கள் இதன் விளம்பர தூதர்களாக இருந்துள்ளனர். பணியாளர்கள் 37,700 ஆண்டு வி/னை 46 கோடி டொலர்

பிலிப்ஸ்

ஹெல்த்கேர், லைட்டிங், நுகர்வோர் பொருட்கள், என பலதுறைகளிலும் தொழில் செய்துவரும் நெதர்லாந்து நிறுவனம் இது. டெலிவிஷன், ஓடியோ, வீடியோ, மல்ட்டி மீடியா என பல தொழில்களை மேற்கொண்டுள்ளது. லைட் டிங் துறையில் டியூப் லைட் வரை தயாரித்து வருகிறது.

பிடரிக் பிலிப்ஸ், ஜெரார்டு லியோனார்ட்டு பிலிப்ஸ், ஆண்டன் பிலிப்ஸ் என்பவர்களால் 1891 ஆண்டு தொடங்கப்பட்டது. சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் தலைமையகம் உள்ளது.

பணியாளர்கள் 1,05,070 ஆண்டு விற்பனை 2,971 கோடி டொலர்

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 138.56 | 143.05 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 211.40 | 219.90 |
| யூரோ (ஐரோ. ஒன்றியம்) | 151.08 | 157.89 |
| சுவிஸ் பிராங் | 138.99 | 145.51 |
| கனேடிய டொலர் | 104.53 | 109.39 |
| அவுஸ்திரேலிய டொலர் | 97.35 | 102.45 |
| சிங்கப்பூர் டொலர் | 98.40 | 102.66 |
| ஜப்பான் யென் | 1.13 | 1.19 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.15 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 38.35 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி




# பல்லுத் தேய்க்காத பலசாலி!

பேருதான் காட்டு ராஜா.

ஆனா, உலக மகா சோம்பேறியா இருந்துச்சு அந்த சிங்கராஜா.

எப்பப் பாத்தாலும் தூங்கிக்கிட்டே இருக்கும். எழுந்து ஒரு நாளும் வேட்டைக்குப் போனதே கிடையாது. யாராவது வேட்டையாடிச் சாப்பிட்டுக்கிட்டு இருந்தா, அதை மிரட்டிப் பிடுங்கிச் சாப்பிடுறதில மட்டும் படுகில்லாடி.

கண்ணைத் திறந்தா தூக்கம் போயிடுமேன்னு, நாள் கணக்கா கண்ணை மூடித் தூங்கிக்கிட்டே இருந்துச்சு சிங்கராஜா.

சிங்கராஜாவுக்கு அவுங்க அம்மா, அப்பா எவ்வளவோ புத்திமதி சொன்னாங்க. யார் சொன்னதையும் கேட்கவேயில்லை.

அந்தக் காட்டுக்கு ஒரு முனிவர் வந்தாரு. சிங்கராஜா இப்படிச் சோம்பேறியா இருக்கிறதைப் பாத்தாரு முனிவர். ஏதாவது ஒரு வழி செஞ்சு, இந்தச் சோம்பேறி ராஜாவைத்திருத்தணும்னு நினைச்சாரு.


அடுத்த நாள்-

"சிங்கராஜா, சிங்கராஜான்னு..." கூப்பிட்டாரு முனிவர்.

கண்ணைத் திறக்காமலேயே "ம்...என்ன சொல்லுங்க...?" அப்படீன்னுச்சு சிங்கராஜா.

"சிங்கராஜா, நீங்க உலக மகா வீரன்னு எனக்குத் தெரியும். நீங்க எவ்வளவுக்கெவ்வளவு தூங்குறீங்களோ, அவ்வளவு வீரம் உங்க உடம்பில சேரும். இதைத் தெரியாதவங்கதான் உங்களைச் சோம்பேறின்னு திட்டுறாங்க. நீங்க உங்க விருப்பம்போல தூங்குங்க.ஆனா,ஒண்ணு மட்டும் தினமும் காலையிலே மறக்காம செஞ்சிடுங்க...!" அப்படின்னு தயங்கித் தயங்கி முனிவர் சொன்னாரு.

"என்ன செய்யணும், சொல்லுங்க...?" என்று கேட்டுச்சு சிங்கராஜா.



உடனே, முனிவர், "தினமும் காலையில எழுந்து நீங்க பல்லைத் தேய்ச்சிட்டு, அப்புறமா உங்க விருப்பம்போல தூங்குங்க.

நீங்க அப்படிச் செஞ்சா உங்களோட பலம் என்னைக்கும் குறையவே குறையாது.."ன்னு சொன்னாரு.

"பூ, இவ்வளவுதானா! இனிமே செஞ்சாப் போச்சு...!"என்றபடி கண்ணை மூடிப்படுத்திடுச்சு சிங்கராஜா.

மறுநாள் காலையில எப்படியோ கண்ணை லேசா கசக்கிக்கசக்கி விழிச்சிடுச்சு. ஆனா, பல்லைத் தேய்க்கிறது பெரிய அலுப்பா இருந்துச்சு சிங்கராஜாவுக்கு.

'என்ன செய்யலாம்?' யோசிச்சது சிங்கராஜா.

சட்டுனு அதுக்கொரு யோசனை தோணுச்சு. உடனே, காடு முழுக்க அந்த அறிவிப்பைச் செய்யச் சொன்னது.

"நாளையிலேர்ந்து காட்டில உள்ள விலங்குகள்ல தினமும் யாராவது ஒருத்தரு வந்து, சிங்கராஜாவுக்குப் பல் தேய்ச்சி விடணும்...இது சிங்கராஜாவோட உத்தரவு.!" அறிவிப்பால் காடே கிடுகிடுத்தது. சிங்கராஜாவுக்குப் போய் யார் பல் தேய்த்து விட முடியும்? எல்லா விலங்குகளும் பயந்து நடுங்கிச்சு. (தொடரும்)




## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1834 - முதன்முதலாக இந்தியாவில் இருந்து 75 ஒப்பந்தத் தொழிலாளர்கள் மொரீசியஸ் சென்றனர்.
- 1868 - நியூசிலாந்து சீர் நேரத்தை நாடு முழுவதும் அறிமுகப்படுத்தியது.
- 1889 - வடக்கு மற்றும் தெற்கு டகோட்டா ஐக்கிய அமெரிக்காவின் 39வது, 40வது மாநிலங்களாக முறையே இணைந்தன.
- 1899 - தென்னாபிரிக்காவில் போவர்கள் பிரித்தானியர்கள் வசம் இருந்த லேடிஸ்மித் பகுதியை 188 நாட்கள் பிடித்து வைத்திருந்தனர்.
- 1914 - ரஷ்யா ஓட்டோமான் பேரரசு மீது போரை அறிவித்தது.
- 1917 - பிரித்தானியாவின் வெளிநாட்டு விவகாரங்களுக்குப் பொறுப்பான செயலாளராக இருந்த ஆதர் பெல்ஃபர் வெளியிட்ட பிரகடனத்தில் யூதர்களுக்கு பாலஸ்தீனத்தில் ஒரு தேசியத் தாயகம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை இங்கிலாந்து அரசு ஆதரிக்கிறது எனக் கூறப்பட்டது.
- 1930 - ஹைலி செலாசி எதியோப்பியாவின் பேரரசன் ஆனான்.
- 1936 - இத்தாலியின் சர்வாதிகாரி முசோலினி உரோம்- பெர்லின் அச்சு என்ற அச்சு அணியை அறிவித்தான்.
- 1936 - பிபிசி நிறுவனம் தொலைக்காட்சி சேவையை ஆரம்பித்தது.
- 1936 - கனடிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் நிறுவப்பட்டது.
- 1953 - பாகிஸ்தான், பாகிஸ்தான் இஸ்லாமியக் குடியரசு எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1963 - தெற்கு வியட்நாம் அதிபர் நியோ டின் டியெம் Ngo Dinh Diem இராணுவப் புரட்சியை அடுத்து கொலை செய்யப்பட்டார்.
- 2000 - பன்னாட்டு விண்வெளி நிலையத்துக்கு முதன் முதலாக விண்வெளி வீரர்கள் சென்றடைந்தனர்.
- 2007 - இலங்கை வான்படையின் வான்குண்டுத் தாக்குதலில் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் உட்பட ஆறு விடுதலைப் புலிகள் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

- 1795 - ஜேம்ஸ் போக், ஐக்கிய அமெரிக்காவின் 11 ஆவது அரசுத் தலைவர் (இ. 1849)
- 1815 - ஜார்ஜ் பூல், ஆங்கிலேயக் கணிதவியலாளர், (இ. 1864).
- 1965 - ஷாருக்கான், இந்தி நடிகர்

### இறப்புகள்

- 1903 - பரிதிமாற் கலைஞர் வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரிகள், தமிழறிஞர் (பி. 1870)
- 1917 - ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை, ஈழத்துத் தமிழ் எழுத்தாளர் (பி. 1858)
- 1950 - ஜோர்ஜ் பேர்னாட் ஷா, ஐரிஷ் எழுத்தாளரும் நோபல் பரிசு பெற்றவரும் (பி. 1856)
- 1966 - பீட்டர் டெபாய், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1884)
- 1978 - ஏ. பெரியதம்பிப்பிள்ளை, மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழறிஞர் (பி. 1899)
- 2007 - சு. ப. தமிழ்ச்செல்வன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் (பி. 1967)

## ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை



ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை ஏப்ரல் 18, 1858 மானிப்பாய், யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இவர் ஓர் ஈழத்து எழுத்தாளர், பதிப்பாளர். தமிழின் முதற் கலைக் களஞ்சியமான அபிதான கோசத்தை எழுதியவர்.

பிள்ளையவர்களின் ஆரம்பக்கல்வி பி.எஸ். பேஜ் என்ற ஆசிரியரிடம் அவரின் வீட்டிலேயே ஆரம்பமானது. இந்த வீடு பின்னாளில் மானிப்பாய் மெமோறியல் கல்லூரியாக மாறியது. ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் உவெஸ்லியன் மத்திய வித்தியாசாலையில் படித்தார். ஆங்கிலம், தமிழ், வடமொழி ஆகியவற்றை நன்கு கற்ற பிள்ளையவர்கள், இலக்கணக் கொட்டர் எனப் புகழ் பெற்ற, குடந்தை வெண்பா முதலிய பாடல்கள் இயற்றிய சுன்னாகம் முருகேசப் பண்டிதரிடம் தமிழைச் சிறப்பாகக் கற்றார்.

முத்துத் தம்பிப்பிள்ளையவர்கள் எழுதிய பல நூல்களில் இலங்கைச் சரித்திரச் சூசனம், அபிதான கோசம், ஆங்கில-ஆங்கில-தமிழ் அகராதி, யாழ்ப்பாணச் சரித்திரம் ஆகியவை குறிப்பிடத்தக்கன. அபிதானகோசம் 1902-இல் யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக்கூடத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. தமிழகத்தில் சிங்காரவேலு முதலியாரின் அபிதான சிந்தாமணி (1910) வெளிவருமுன் இது வெளிவந்தது குறிப்பிடத்தக்கது.

அரிய குணங்களைக் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தவும் தெரியவேண்டும். -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சரியான நேரத்தில் முஸ்லிம்களை தமிழ் மக்கள் காப்பாற்றினர்

எண்பது வீதத்தை 12 வீதம் எதிர்த்தால், 12 வீதத்தை எட்டு வீதம் ஏன் எதிர்க்கக்கூடாது. இப்படிக் கேள்வி எழுப்பியவர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள்.

80 வீதமான சிங்கள மக்களை 12 வீதமான தமிழர்கள் எதிர்க்கின்றபோது, 12 வீதமான தமிழர்களை 8 வீதமான முஸ்லிம்கள் ஏன் எதிர்க்கக் கூடாது என்று ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பியதற்குள் தமிழர்கள் தொடர்பில் முஸ்லிம் அரசியல் தலைமையிடம் இருந்த காழ்ப்புணர்வு வெளிப்படுகிறது.

வடபுலத்தில் இருந்து முஸ்லிம்களை வெளியேற்றியமையால் அவர்கள் தமிழர்கள் மீது கோபம் கொண்டிருக்கலாம் என்று கருதுவதும் பொருத்தமுடையதன்று.

ஏனெனில் விடுதலைப் புலிகளுடன் ரவூப் ஹக்கீம் உடன்படிக்கை செய்தவர். விடுதலைப் புலிகளை ஏற்று இணங்கிக் கொண்ட ரவூப் ஹக்கீம் தமிழ் மக்களுக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்தமை அவ்வளவு நல்லதல்ல.

வன்னிப் பெருநிலப்பரப்பில் மிகப்பெருமெடுப்பில் தமிழின அழிப்பு நடந்த போது, முஸ்லிம் மக்கள் அந்தக் கொடூரத்தைக் கண்டித்திருக்க வேண்டும்.

இருந்தும் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடூரங்கள் தொடர்பில் முஸ்லிம் அரசியல் தலைமைகளும் அமைப்புகளும் குறைந்தது தமது வருத்தத்தையேனும் வெளிப்படுத்தவில்லை.

இது தவிர, இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்று தமிழ் மக்கள் ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்திய போது, அதற்கு எதிராக-இலங்கை அரசுக்கு ஆதரவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஜெனிவாவில் பிரசாரம் செய்தார். இலங்கை அரசுக்கு முஸ்லிம் நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்கும் ஹக்கீம் உதவினார்.

எனினும் இன்று வரை தமிழ் மக்கள் அது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. இருந்தும் சிறுபான்மைத் தமிழினத்திற்கு இன்னொரு சிறுபான்மை இனமான முஸ்லிம் மக்கள் நிச்சயம் உதவி செய்திருக்க வேண்டும்.

பரவாயில்லை ஆட்சியாளர்களுடன் சேர்ந்து செயற்படுவதே புத்திசாலித்தனமானது என்று கருதிய முஸ்லிம் தலைமைகளுக்கு; தாங்கள் யார் என்பதை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிகத் தெளிவாகக் காட்டியிருந்தார்.

ஒரு கட்டத்தில் மகிந்த ராஜபக்ஷவுக்கு முஸ்லிம் மக்கள் மீது கடும் வெறுப்பு ஏற்பட்டிருந்தது. அதனால் ரவூப் ஹக்கீம், றிசாத் பதியுதீன் போன்றவர்களை மிக மோசமாக அவகௌரவப்படுத்தினார்.

தமிழ் மக்களை கடுமையாக எதிர்த்த மகிந்த ராஜபக்ஷவுடன் முஸ்லிம் அரசியல் தலைமைகள் சேர்ந்து செயற்பட்டன. இருந்தும் அதற்கான பாடத்தையும் அவர்கள் மகிந்தவிடம் கற்றுக் கொண்டனர்.

ஆனால் ஒன்றை மட்டும் அடித்துக் கூறமுடியும். அதாவது முஸ்லிம் மக்கள் மீது தமிழர்கள் வெறுப்புக் கொண்டிருந்தால்-அவர்களை பழிதீர்க்க வேண்டும் என்று நினைத்திருந்தால் அதனை மகிந்த ராஜபக்ஷ மூலமாக செய்திருக்க முடியும்.

ஆம், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்திருந்தால், அவரே ஜனாதிபதியாகியிருப்பார். அவர் ஜனாதிபதியானால் முஸ்லிம் மக்களுக்கு என்ன நடந்திருக்கும் என்பதை நாம் சொல்லி எவரும் அறியவேண்டிய தேவை இருந்திருக்காது.

தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்ததால் இலங்கையில் முஸ்லிம் மக்களின் இருப்பு காப்பாற்றப்பட்டது.

இந்தப் பேருதவியைச் செய்தவர்கள் தமிழ் மக்கள் என்பதை முஸ்லிம் மக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்.

# மகிந்த ஹிட்லர்; மைத்திரி சாப்ளின்

## பொதுக் கூட்டங்களை நடத்த விமல் அணி திட்டம்

(கொழும்பு)

சென்றது ஹிட்லரா? வந்தது சாப்ளினா? என்ற தலைப்பில் நாடு முழுவதும் கலந்துரையாடல்களுடன் கூடிய 10 ஆயிரம் பொதுக் கூட்டங்களை நடத்த உள்ளதாக விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

நவம்பர் 5 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை இந்த கூட்டங்கள் நடத்தப்பட உள்ளன.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, பிரதித் தலைவர் வீரகுமார திஸாநாயக்க, தேசிய அமைப்பாளர் ஜயந்த சமரவீர, அரசியல் சபை உறுப்பினர் உதய சாந்த குணசேகர, நிரோஷன் பிரேமரத்ன உட்பட கட்சியின் பிரதிநிதிகள் இந்த கூட்டங்களில் உரையாற்ற உள்ளதாக தேசிய சுதந்திர முன்னணி குறிப்பிட்டுள்ளது.

கடந்த பத்து ஆண்டுகள் ஆட்சி செய்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சர்வாதிகாரியான ஹிட்லருக்கு நிகராக சித்திரிக்கப்பட்டு, இதனை அடிப்படையாகக் கொண்டே அன்றைய எதிரணிகள் அவருக்கு எதிரான பிரசாரங்களை முன்னெடுத்து வந்தன.

இதன்படியே அவரை ஆட்சியில் இருந்து அகற்றவும் நடவடிக்கை எடுத்தன.

தற்போதைய எதிர்க் கட்சிகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பிரபல ஆங்கில நகைச்சுவை நடிகரான சார்லி சாப்ளினுக்கு ஒப்பிட்டு பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேனவை விட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிகாரங்களை கையில் எடுத்து செயற்படுவதாகவும் தற்போதைய எதிர்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன. (செ-12)

## இந். போதைப் பொருள்; மொஹமட்டுக்கு தொடர்பு

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சர்வதேச போதைப் பொருள் விற்பனையாளரான மொஹமட் சித்திக், இந்திய போதைப்பொருள் விற்பானையாளர்களுடன் தொடர்புகளை கொண்ருந்ததாக தெரியவந்துள்ளது.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

சித்திக் தனது வியாபாரத்திற்காக பயன்படுத்திய வங்கி கணக்குகளை ஆய்வு செய்தபோது இந்த தகவல்கள் கிடைத்துள்ளன.

சித்திக், இந்தியாவை சேர்ந்த குணசேகரம் என்ற போதைப்பொருள் விற்பனையாளருடன் வியாபார தொடர்புகளை கொண்டிருந்தமை விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள போதைப் பொருள் விற்பனையாளரான வெலே சுதா என்ற சமந்த குமார வெளியிட்ட தகவலுக்கு அமையவே மொஹமட் சித்திக் கைது செய்யப்பட்டார்.

சித்திக் கைது செய்யப்பட்டதை தொடர்ந்து சர்வதேச போதைப்பொருள் விற்பனையாளர்களுடன் தொடர்புகளை வைத்திருந்த இலங்கை நபர்கள் பற்றிய முக்கியமான தகவல்கள் தெரியவந்துள்ளன.

கடந்த காலங்களில் சித்திக்குடன் தொடர்புகளை வைத்திருந்த அரசியல்வாதிகள் குறித்த தகவல்களும் கிடைத்துள்ளதாக புலனாய்வு அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர். (செ-12)

## விமான விபத்து; ஜனாதிபதி இரங்கல்

ரஷ்ய பயணிகள் விமானம் எகிப்தில் வைத்து விபத்துக்குள்ளானமைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இரங்கல் வெளியிட்டுள்ளார்.

இலங்கை மக்களுடன் இணைந்து ரஷ்ய மக்கள் மற்றும் அரசாங்கத்திற்கு ஜனாதிபதி தமது இரங்கலை தெரியப்படுத்தியுள்ளார்.

நேற்றுமுன்தினம் எகிப்து நாட்டில் உள்ள சினாய் கோஸ்டல் ரிசார்ட்டில் இருந்து ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பெர்கிற்கு 217 பயணிகள், 7 ஊழியர்களுடன் புறப்பட்டுச் சென்ற பயணிகள் விமானம் 23 நிமிடங்களில் மத்திய சினாய் பகுதியில் விழுந்து விபத்துக்குள்ளானது.

செங்கடலை ஒட்டியுள்ள கடற்கரை நகரமான ஷர்ம் அல் ஷேக் நகரில் இருந்து திரும்பிய அந்த விமானத்தில் இருந்தவர்கள் பெரும்பாலும் ரஷ்ய நாட்டு சுற்றுலா பயணிகள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி 17 குழந்தைகள் உட்பட விமானத்தில் பயணித்த அனைவரும் பலியாகியிருக்கலாம் என வெளிநாட்டு ஊடகச் செய்திகள் குறிப்பிடுகின்றன. (செ-12)

# அமைச்சர்,எம்.பி உட்பட பலருக்கு டெங்குநோய்

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் ஒருவர் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அவரது மனைவி மற்றும் மகன் உட்பட 10 இற்கும் மேற்பட்டோர் டெங்கு நோய்க்கு உள்ளாகியுள்ளனர்.

கொழும்பு கோட்டே மடிவெல பகுதியில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான விடுதியில் தங்கியிருந்தபோதே டெங்கு நுளம்பின் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

மேற்படி விடுதியில் 120 வீடுகள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்களால் பயன்படுத்தப்படாத வீடுகள் வேறு நபர்களுக்கு குறிப்பாக உறவினர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு வாடகைக்கு விடப்படுகிறது.

மேற்படி விடுதியின் சில பகுதிகள் கவனிப்பாரின்றி காணப்படுவதனால் அங்கு டெங்கு நுளம்புகள் பெருக்கமடைந்துள்ளன.

இதனால் மேலும் 6 சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் உட்பட்டோர் டெங்கு நோயின் தாக் கத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

மேற்படி சம்பவத்தையடுத்து சபாநாயகர் கருஜயசூரிய மேற்படி விடுதிக்கு நேரில் சென்று பார்வையிட்டுள்ளதுடன் சுகாதார பரிசோதகர்களுக்கு மேற்படி விடயத்தில் தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமாறு பணிததுள்ளார். (3)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2015

"நீண்ட காலத்தின் முன்பு ஒருவர் மரம் ஒன்றினை நாட்டியதன் பயனாகவே இன்று இன்னொருவர் அம்மரத்தின் நிழலில் அமர்ந்துள்ளார்,"

-வாரன் பஃவெற் (அமெரிக்க தொழிலதிபர்)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### மனிதன் அறிவின் உயர்வில் ஈசன்



கடவுள் எனப் படுபவனே மனிதனானான்,
கருத்தியங்கி, கருத்துயர்ந்து, கருத்தறிந்தான்
கடவுளாய் அனைத்துமே கண்டு விட்டான்
காண்பவனே ஆதியந்த மாகி நின்றான்
கடவுள் நிலை யறிந்தவனே அறியாதோர்க்குக்
கருத்துணர்ந்த நூல்கள் பல எழுதிவைத்தான்
கடவுள் ரகசியமதனை வெளியாய்க் காட்டும்
கடமையே சிறந்ததெனக் கொண்டான் ஞானி.

எந்தத் தத்துவத்தைக் கடவுள் என்று சொல்லுகிறோமோ, அதுவே அதன் பரிணாம உச்சத்தில் மனிதனாகவும் இருக்கிறது.

மனிதன் தன் அறிவை இயக்கி, அறிவை உயர்த்தி, அறிவையும் அறிந்து விட்டான். அவ்விளக்க நிலையில் தானே எல்லாமாய் இருக்கும் நிலையையும் கண்டுவிட்டான். காண்பவனே மூலமாகவும் முடிவாகவும் இருக்கும் ஏக நிலையைக் கண்டு கொண்டான்.


இந்த நிலையை அறிந்தவன் அறியாதவர்களுக்கு உணர்த்தும் சிறந்த நோக்கத்தோடும், பொதுவாக அறிவைப் பண்படுத்தும் பொருட்டும், ஆராயத் தூண்டும் பொருட்டும், பல நூல்களும் எழுதினான்.

மூலாதாரத் தத்துவத்தின் இரகசியத்தை அறியா நிலையில் - அறிய வேண்டிய நிலையில் - உள்ள யாவருக்கும் அறிய ஆவன செய்வதைத் தன்னிலை விளக்கம் பெற்ற ஞானிகள் தங்கள் கடமையாக் கொண்டார்கள். தம்மை யறிந்தவுடன் ஞானிகளின் கடமை தீர்ந்து விடவில்லை.

அரூபமான பேராதார சக்தி நிலையில், ஞாபகத்துடன் பிரபஞ்சத்தை நோக்குகிறான். கோடானு கோடி உருவங்களில், தானே பல்வேறு திறத்தவனாய், வேறுபாடாய், உயிரியக்கம் அறிவியக்கமாய், அறிவியக்க நிலையிலும் பல தரப்பட்டதாய், அறிவு நிலையாய், அறிவு நிலையிலும் பல்வேறு துறைகளாய், அளவினதாய், இருப்பதை உணருகிறான்.

# கராத்தே ஒவ் ஜப்பான் பெடரேசன் வெளிவிவகார பணிப்பாளராக

## கராத்தே பிரதம ஆசிரியர் டினேஸ் நியமனம்







அமெரிக்காவை தலைமையாகக் கொண்ட கராத்தே ஒவ் ஜப்பான் பெடரேசன் இன் வெளிவிவகாரப் பணிப்பாளராக கராத்தே பிரதம ஆசிரியர் அன்ரோடினேஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கிராண்ட் மாஸ்டர் ஹன்சி டிவைட் ஹோலியினால் இதற்கான நியமனச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

இவர் இலங்கையின் தலை சிறந்த கராத்தே வல்லுநராவார். இலங்கையில் பல வீரர்களை இவர் உருவாக்கி வருகின்றார்.


அமெரிக்காவின் கென்டக்கி மாநிசத்தின் சில கராத்தே பயிற்சியாளர்களின் அழைப்பின் பிரகாரம் அங்கு சென்று பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றார்.

அத்துடன்அமெரிக்காவின்ஒகாயோ மாநிலத்தின்ஹமில்டன்நகரில் நடைபெற்ற கராத்தே சுற்றுப்போட்டியில் நடுவராகபணியாற்றியுள்ளார்அன்ரோடினேஸ்.

கனடாவின் ஒன்ராரியோ மாநிலத்தில் நடைபெற்ற கராத்தே போட்டியிலும் இவர் நடுவராகக் கடமையாற்றியுள்ளார்.அதேபோன்று ரொரன்ரோவில் உள்ள கராத்தே பயிற்சியகம் ஒன்றிலும் சிகான் அன்ரோடினேஸ் பயிற்சிகளை வழங்கியுள்ளார்.தனது கலையின் மூலம் பல்வேறு வீரர்களை உருவாக்க வேண்டும் என அவர் கூறினார். (க)

# விபுலானந்தன் ஞாபகார்த்த மாகாண ரீதியான கூடைப்பந்து

## யாழ்.இந்து சம்பியன்



யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் அமரர் பொன் விபுலானந்த ஞாபகார்த்தமாகவும் மாகாண ரீதியாக நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி யாழ்.மத்திய கல்லூரியை வீழ்த்தி சம்பியனானது.

மேற்படி போட்டியானது கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்றது.

யாழ்.இந்து கல்லூரி , மல்லாவி மத்திய கல்லூரியையும் யாழ். மத்திய கல்லூரி ஏஞ்சல் சர்வதேச பாடசாலையையும் அரையிறுதியில் வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டியில் ஆரம்பம் முதலே போட்டி விறுவிறுப்பாக நடைபெற்றது. முதல் முடிவில் யா/ இ/கல்லூரி 5 புள்ளிகளால் முன்னிலை பெற்றது. அவ்வாறே தொடர்ந்தும் யா/இ/க/ தமது ஆதிக்கத்தை வெளிப்படு த்தி மீதி இரண்டு பாதி ஆட்டத்தையும் தன்வசப்படுத்தி கிண்ணத்தை 60: 69 என்ற புள்ளி அடியப்படையில் சுவீகரித்து போட்டியின் ஆட்ட நாயகனாக யா/இ/க இன் விஷ்ணுவரதனும் தொடர்நாயகனாக யா/ம/க இன் வேனுசனும் தெரிவாகியமை குறிப்பிடத்தக்கது. (க)

# வட்டு. மத்திய கல்லூரி மாணவியை இந்து வாலிபர் சங்கம் கௌரவிப்பு

வட்டு.மத்திய கல்லூரி மாணவியும் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்க வீராங்கனையுமான செல்வி. மகேந்திரன் கமலினி தேசிய மட்ட போட்டியில் வெற்றி பெற்றமைக்காக கௌரவிக்கப்பட்டார்.

மேற்படி வீராங்கனையை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் வட்டு இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் சங்க முன்னாள் தலைவரும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலய அதிபருமாகிய நா.சபாரட்ணசிங்கி தலைமையில் நடைபெற்றது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட போட்டியில் கோலூன்றி பாய்தலில் கலந்து கொண்டு 3ம் இடத்தினை பெற்றுக்கொண்டதோடு வட்டு. மத்திய கல்லூரி வரலாற்றில் முதற்தடவையாக தேசிய மட்ட போட்டியில் வெற்றி பெற்றமைக்காகவும் அவ்விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

மேற்படி வீரங்கனைக்கு பொன்னாடையின் வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி. ஐங்கரன் நாகரஞ்சினியும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரன், சரவணபவன் ஆகியோர் வெற்றிக்கிண்ணம் வழங்கி கௌரவித்தனர்.

மேற்படி மாணவி கௌரவிப்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினாகளான சுமந்திரன், சரவணபவன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களான ஆனோல்ட் , சயந்தன், சுகிர்தன், அஸ்வின் ஆகி யோரும் வலி.மேற்கு பிரதேச சபை முன்னாள் தலைவரும் கலந்து கொண்டனர். (க)

# சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழக மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டம்

## இறுதிப் போட்டியில் பலாலி விண்மீன்



வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ் மாவட்ட ரீதியில் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டம் கடந்த வெள்ளிக்கிழமை சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழக மைதானத்தில், மின் அமைப்பில் நடைபெற்றது.

நவிண்டில் கலைமதி வி.க மற்றும் பலாலி விண்மீன் வி.க ஆகிய கழகங்கள் பலப்பரீட்சை நடத்திய இந்த போட்டியில் பலாலி விண்மீன் வி.க 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது. (க)



# ஐ.எஸ்.எல். காற்பந்துத் தொடர் சென்னை-கேரள ஆட்டம் சமநிலையில்

ஐ.எஸ்.எல். காற்பந்து தொடரில் கேரளா பிளாஸ்டர்ஸ் சென்னையின் எப்ஃசி அணிகள் மோதிய 26 ஆவது லீக் போட்டி சமநிலையில் முடிந்தது. கொச்சி நகரில் நேற்று முன்தினம் மாலை 7 மணிக்கு இந்த போட்டி நடைபெற்றது.

ஆட்டத்தின் நடுவே மழை பெய்த போது இரு அணி வீரர்களும் தீவிரமாக விளையாடினர். 33 ஆவது நிமிடத்தில் கேரளாவின் கோல் பகுதியில் வைத்து சென்னை வர்ர் ஸ்டீவன் மென்டோஜா, பந்தை தலையால் முட்ட முயற்சித்த போது, அதை செய்ய விடாமல் அவரை கேரளாவின் சண்டேஷ் ஜின்கான் அமுக்கி தள்ளினார். இதனால் சென்னை அணிக்கு பெனால்டி வாய்ப்பு வழங்கப்பட்டது. இதையடுத்து பெனால்டி வாய்ப்பை சென்னை அணியின் கப்டன் இலனோ புளுமர் லாவகமாக அடித்து கோலாக மாற்றினார். இதனால் சென்னை அணி முற்பகுதியில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனால் பிற்பகுதியின் ஆட்டத்தில் கேரள அணியினர் தீவிரம் காட்டினர். 46 ஆவது நிமிடத்தில் இடது பக்கத்தில் இருந்து கேரளாவின் ராகுல் பெகே வலுவாக அடித்த ஷொட்டை சக வீரர் கிறிஸ் டாக்னால் (இங்கிலாந்து) தலையால் முட்டி பந்தை கோலுக்குள் திருப்பினார். இதனால் ஆட்டம் சமநிலையை எட்டி யது. அதன்பிறகு இரு அணி வீரர்களும் கோல் அடிக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிந்தது.மழை சாரல்களுக்கு மத்தியில் ஆட்டம் கடைசி வரை விறுவிறுப்பாக நடைபெற்றது. கேரளா-சென்னை அணிகளுக்கு இடையிலான இந்தப் போட்டி இறு தியில் 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. நடப்பு தொட ரில் முடிந்த 4ஆவது சமநிலை இதுவாகும்.(க)

# "பதவியைத் தூக்கி எறியுங்கள்"...

அரசியல் கைதிகள் விடுதலை குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது வெளியிட்ட அறிக்கையில், விரைவில் விடுதலையாவோம் 15, 20 வருட கனவு நனவாகிறது என்று மனப் பால் குடித்துக்கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு அமைச்சர் மகிந்த அமரவீர அவர் களின் கூற்று பெரும் அதிர்ச்சியைதந்திருக்கும்.

கணவர் வரப்போகிறார் என்று மனைவியும், பிள்ளை வரப்போகிறான் என்று அம்மா அப்பா, அப்பா வரப்போகிறார் என்று பிள்ளைகள் என இவர்கள் ஒவ்வொரு வினாடியும் எண்ணிக் கொண்டு அந்த நாளை எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்த உறவுகளுக்கு எத்தகைய உணர்வுகள் ஏற்படும் என்று சம்பந்தப்பட்டவர்கள் சிந்திப்பார்களா?

இது சம்மந்தமாக இரு் சட்ட வல்லுனர்களை கொண்டுள்ள பெரும் தமிழ் தலைவர்கள் இருந்தும் அவர்கள் கலந்து கொள்ளாமல் சட்டம் படிக்காத ஒருவரை பிரதிநிதியாக அனுப்பிய தலைவர்களை என்ன சொல்வது? இப்படித்தான் நடக்கும் என்று தெரிந்துதான் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவில்லையா அல்லது வேறு காரணங்கள் உண்டா?

அரசு மாறியது யாரால்? குற்றம் புரிந்தவர் யார்? இந்த நிலை உருவாகியது யாரால்? அவர்களுக்குத் தண்டனை இல்லையெனவும் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட உள்ளது என்றால் விசாரணை யாரிடம்? விடுதலைப் புலிகளிடமா? அதை வற்புறுத்தி கேட்டவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பெயரில் இயங்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லையா? உங்கள் முடிவுதான் என்ன என்பதை மக்களுக்கு கூறுங்கள்.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்காவிட்டால் உங்கள் பதவிகளை இராஜினாமா செய்யுங்கள் அல்லது நாடாளுமன்றத்தில் உண்ணாவிரதம் இருங்கள் அல்லது வீதிக்கு இறங்குங்கள், இந்த அபலைகளுக்கு உதவுங்கள், சிறையில் உள்ளவர்கள் அரசியல் கைதிகள் இல்லை போர்க குற்றவாளிகள் என்ற நிலைப்பாட்டை அரசு முன்னெடுப்பதற்கு இடமளிக்காது அரசுக்கு நிபந்தனை விதித்து ஆதரவளியுங்கள். இந்த விடயம் மனிதாபிமான விடயமே அன்றி அரசியல் அல்ல என்பதை அரசுக்கு உணர்த்துங்கள்.

நான் எவரையும் எதற்கும் தூண்டுவதில்லை. மனிதாபிமான அடிப்படையில் சிந்தித்துப் பார்த்தால் விளைவுகள் பாரதூரமானவையாக அமைந்துவிடும் என்றவொரு அச்சம் ஏற்படுகிறது.

இந்த விடயம் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் 16 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் அவர்கள் ஒன்றுசேர்ந்து ஜனாதிபதியையோ அல்லது பிரதம மந்திரியையே சந்தித்துள்ளார்களா?

நாடாளுமன்ற ஆசனம் அலங்காரப் பொருளல்ல என்பதையும் அப்பாவிகளின் உயிர் வெறும் செல்லாக்காசாகவும் எண்ணாதீர்கள்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக் கோரிக்கையை முன்வைத்து நாடாளுமன்றத்தை விட்டு வெளியேறுங்கள் எனவும் ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார். (செ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## புஸ்ப நிதி...

அரச காணியொன்றை குத்தகைக்கு பெற்றுக் கொண்டு அந்தக் காணியை அரச பணத்தைப் பயன்படுத்தி அபிவிருத்தி செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதனால் அரசாங்கத்திற்கு ஒன்றரை கோடி ரூபாய் பணம் நட்டம் ஏற்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பான விசாரணைக்காக நாளை 3-ம் திகதி ஆணைககுழுவின் எதிரில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

காணியை அபிவிருத்தி செய்வதற்கான இயந்திர சாதனங்களுக்கான செலவு மற்றும் ஊழியர்களுக்கான கொடுப்பனவு ஆகியன தெங்கு அபிவிருத்தி சபையின் நிதியைக் கொண்டு கொடுக்கப்பட்டுள்ளதாக புஷ்பகுமார மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (செ-12)

## மைத்திரியை இரகசியமாக...

ளின் அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டாம் எனவும் இதன்போது கோத்தபாய ராஜபக்ஷ கோரியுள்ளார்.

மக்ஸ்வல் பரணகம அறிக்கை தொடர்பிலும் கோத்தபாய கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளார். குறிப்பாக யுத்தக் குற்றச் செயல் விசாரணைகளுக்கு சர்வதேச ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற பரிந்துரை கண்டிக்கத்தக்கது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளினால் முப்படையினர் அதிருப்தி அடைந்துள்ளதாகவும், இது பாதகமான சூழ்நிலைகளை உருவாக்கும் எனவும் அவர் ஜனாதிபதிக்கு விளக்கியுள்ளார்.

இந்த நிலைமையை மாற்றியமைக்க ஜனாதிபதி எடுத்துக் கொள்ளும் சிரத்தை பாராட்டுக்குரியது என அவர் தெரிவித்துள்ளார். கோத்தபாயவுடன் சந்திப்பு நடத்தப்பட்டதினத்தில், முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, பெருந்தெருக்கள் அமைச்சின் முன்னாள் செயலாளர் ரஞ்சித் பிரேமசிறி, திறைசேரியின் முன்னாள் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர ஆகியோரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தனியாக சந்தித்து பேசியுள்ளனர்.

எவ்வாறான பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என்பது குறித்த வபரங்கள் வெளியிடப்படவில்லை. எனினும் அரச அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தப்படும் போது தமக்கு அது குறித்து அறிவிக்குமாறு ஜனாதிபதி கோரியுள்ளார். (செ-12)

## போர்க்குற்றம் புரிந்தது...

இலங்கையின் போர்க்குற்றங்கள் மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டோர் குறித்து இங்கிலாந்து ராணியின் வழக்கறிஞரும், சர்வதேச நீதிக்கட்டமைப்பு ஆலோசகருமான சேர் டெஸ்மண்ட் சில்வா அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் இறுதிக் கட்டப் போரின் போது விடுதலைப் புலிகளே போர்க்குற்றங்களை புரிந்ததாகவும், மனித அவலங்களுக்கு அவர்களே பொறுப்பு என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

போர்தவிர்ப்பு வலயத்தினுள் விடுதலைப்புலிகள் பொதுமக்களுடன் சேர்ந்து தமது ஆயுத தளபாடங்களை நகர்த்திச் சென்றது முதலாவது போர்க்குற்ற நடவடிக்கை என்று அவர் குறிப்பிடுகின்றார்.

அத்துடன் யுத்தத்தின் கடைசி நாட்களில் விடுதலைப்புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தி அடுத்த போர்க் குற்றத்தை மேற்கொண்டிருந்ததாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

மறுபுறத்தில் இலங்கை இராணுவத்தினர் ஓரிருவர் சிறு தவறுகளில் ஈடுபட்டிருக்கலாம் என்று ஏற்றுக் கொள்ளும் அவர், போர்க் குற்றங்களில் இராணுவத்தினர் ஈடுபடவில்லை என்றும் தெரிவித்திருக்கிறார்.

அத்துடன் போர்க்குற்ற விடயங்கள் தொடர்பில் விசாரணையின் போது அரச ஆதரவு வெளிப்படுத்தப்படவில்லை என்றும் டெஸ்மண்ட் சில்வா தனது அறிக்கையில் தொடர்ந்தும் தெரிவித்துள்ளார். (செ-12)

## மகிந்தவின்...

தாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் இச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் உள்ளிட்ட இருவர் காயமடைந்துள்ளனர்.

இவர்களை அல்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதோடு, காயமடைந்த ஆண் மேலதிக சிகிச்சைகளுக்காக கராபிடிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை இந்த விபத்துடன் தொடர்புடைய ஜீப் வண்டி சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பிடிகல பொலிஸார் மேற்கொண்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் மேலும் கூறியுள்ளது. (செ-12)

## 'ஜனாதிபதி...

இதன்போது ஜனாதிபதி மைத்திரி அவர்களே என்று விளிப்பதற்குப்பதில் பழக்க தோசத்தில் அதிமேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களே என்று புத்ததாச விளித்துள்ளார்.

இதனையடுத்து சபையில் இருநத மேல் மாகாண சபை உறுப்பினர் ஹெக்டர் பெத்மகே, புத்ததாசவின் தவறைத் திருத்தியுள்ளார். அசடு வழிந்த புத்ததாச தனது தவறைத் திருத்திக் கொண்டு உரையைத் தொடர்ந்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவையனைத்தையும் பார்த்துக் கொண்டு மௌனமாக சிரித்துக் கொண்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-12)

## அமைச்சரவை...

நிராகரிப்பதற்கு அல்லது பிற்போடுவதற்கே அவர் முயற்சிக்கின்றார். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி அமைச்சர்களின் அமைச் சரவைப் பத்திரங்களை உடனடியாக அனுமதி வழங்கி செயற்படுத்த இடமளிக்கின்றார்.

இவ்வாறு தொடர்ச்சியாக நடைபெற்றால் இணக்க அரசியல் என்பதன் அர்த்தம் இல்லாமல் போய்விடும் என்று அமைச்சர் நிமீல் சிறிபால டி சில்வா ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்த கருத்தை அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கவும் ஆமோதித்துள்ளார்.

எனக்கும் பல தடவைகள் இந்தப் பிரச்சினைக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது. வெளிக்கு இணக்க அரசியல் பேசினாலும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் மனதில் இணக்கப்பாடு இல்லை என்று அமைச்சர் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து பதிலளித்த ஜனாதிபதி அடுத்த வார அமைச்சரவைக் கூட்டத்தின்போது இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முயற்சிப்பதாக வாக்களித்துள்ளார். (செ-12)

## தமிழர்களின் உணர்வுகளோடு...

எங்கள் துன்பங்களை நேரடியாக அனுபவிக்காதவர்களாகவே இருக்க முடியும் என தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

மாவீரர்கள் நினைவாக மரம் நடுகையின் ஆரம்ப வைபவம் யாழ்.செம்மணி பகுதியில் நேற்றையதினம் காலை நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மரங்கள் நடப்பட வேண்டும் என்ற திட்டத்தை இற்றைக்கு இருபது ஆண்டுகளுக்கு முனனதாகவே தமிழீழ விடுதலைப்புலிகள் நடைமுறைப்படுத்தியிருந்தனர்.

அவ்வாறு விடுதலைப்புலிகளினால் உருவாக்கப்பட்ட பல தேக்கங்காடுகள் தற்போது சட்டவிரோத குடியேற்றங்களுக்காக வலுக்கட்டாயமாக அளிக்கப்பட்டு வரும் அவல நிலை தொடர்கின்றன.

ஆகவே ஒரு இயற்கையான சூழலில் எங்களின் தேசத்தை நாங்கள் எவ்வாறு கட்டியெழுப்ப வேண்டுமோ, அவ்வாறு கட்டியெழுப்ப வேண்டும். எங்களுடைய மண்ணிலே நாங்கள் இயற்கையை எவ்வாறு பேண வேண்டும். அதற்காக மரம் நடுகை திட்டத்தை கொண்டுவந்த வடமாகாண சபைக்கு நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

1995 ஆம் ஆண்டு இந்த செம்மணி பாதை வழியே ஒரு இனச் சுத்திகரிப்பு செய்யப்பட்டு தமிழ் மக்கள் இராணுவத் தால் வெளியேற்றப்பட்டார்கள்.

இவ்வாறு இடம்பெயர்ந்தவர்களில் நானும் ஒருவன். ஆகவே அந்த நாட்களை இந்த இடத்தில் வைத்து பார்க்கும் போது ஒரு இன அழிப்பு இந்த மண்ணிலே நடைபெற்று அது மூடி மறைக்கப்பட்டுள்ளது.

இங்கு இனப்படுகொலைதான் நடந்தது என்பதனை வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதையும் இங்கு அவ்வாறு ஒன்றும் நடைபெறவில்லை என பேசும் சிலர் இப்போது நீங்கள் நாட்டுகின்ற மரங்கள் சரியில்லை. ஒரு மர சுத்திகரிப்பு செய்யுங்கள் என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆகவே நாங்கள் பட்ட வலிகளை நேரடியாக கண்டவர்கள் அனுபவித்தவர்களிற்குதான் இதன் அருமை புரியும்.

இந்த மண்ணில் மக்கள் பட்ட துயரங்கள் எண்ணில் அடங்காதவை நாங்கள் நாட்டிய மரங்கள் காடுகள் இன்று எம்மிடம் இல்லை. என்னென்ன காரணங்களுக்காக நாங்கள் முயற்சிகளை மேற்கொண்டோமோ அவையெல்லாம் அளிக்கப்பட்டு எங்களின் கொள்கைகள் இலக்குகள் வேறு திசைகளுக்கு இழுத்து செல்லப்படும் காலத்தில் உள்ளோம்.

இந்த கார்த்திகை மாதம் எங்களின் உணர்வுகளோடும் நினைவுகளோடும் ஒரு மிக முக்கியமான மாதமாகும், இந்த மாதத்தில் நாட்டுகின்ற ஒவ்வொரு மரங்களும் வரங்களை தரும் என்பதற்கு அப்பால் அது ஒரு விடுதலையையும் தரும் என்ற நம்பிக்கையில் தொடர்வோம் என்றார் சிறிதரன். (செ-4)

## பதுங்குகுழி பற்றி...

தான் அறிந்திருக்கவில்லை என பல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறுவதனை போன்று பாதுகாப்பு பிரிவு அவ்வாறான பதுங்குகுழியில் கூடவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போது,

ஜனாதிபதி மாளிகைக்குள் அமைக்கப்பட்டிருந்த நிலத்துக்கு கீழான பதுங்கு குழி போர் இடம் பெற்ற காலப்பகுதியில் பாதுகாப்பு செயற்பாட்டிற்காக கட்டப்பட்டதாக குறிப்பிட்டிருந்தார்.

காலி, மீபாவல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந் திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா குறித்த பதுங்கு குழி தொடர்பில் கருத்து வெளியிட்டிருந்தார். தொடர்ந்து கருத்து வெளியிட்ட பீல்ட் மார்ஷல்.

நான் குறித்த காலப்பகுதிகளில் பாதுகாப்பு சபைக்கு சென்றால் எப்போதாவதுதான் முன்னாள் ஜனாதிபதியை சந்தித்துள்ளேன்.

இதன்போது குறித்த பதுங்கு குழி அமைத்தல் தொடர்பில் சில பேச்சுகள் இருந்தன, எனினும் எங்கு, யார், என்ன கட்டப்போகின்றார்கள் என்பது தொடர்பில் எதுவும் நாங்கள் காணவில்லை.

எதிரிகளின் விமானங்கள் தாக்குவதற்கு வந்த போது, நாங்கள் ஜனாதிபதியுடன் இந்த நாட்டில் செயற்படுகின்றமையினால், பகுங்கு குழி இன்னும் கட்டப்படவில்லையா?

இராணுவத்தினர் மூலம் அதன் கட்டுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவா என்று நான் பல முறை கேட்டேன்.

எனினும் அதற்கு அதிகமான விருப்பம் காணப்படவில்லை. இந்த பதுங்குகுழி என்னவென்று தற்போதுதான் தனக்கு தெரிகின்றதென பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்துள்ளார். (செ-12)

## கூட்டுப் பயி...

றும் கடற்பகுதியில் இடம்பெற்று வந்தது.

இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான இந்தக் கூட்டுப் பயிற்சியில் இலங்கை கடற்படையின் ஒன்பது போர்க்கப்பல்கள் மற்றும் படகுகளும், இந்தியக் கடற்படையின் மூன்று போர்க்கப்பல்கள் மற்றும் ஒரு கண்காணிப்பு விமானமும் பங்கெடுத்தன.

இந்த கூட்டுப் பயிற்சி இவ்விரு நாட்டுக் கடற்படைகளுக்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்தும் வகையில் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்தக் கூட்டுப் பயிற்சி நிறைவு நிகழ்வில் இலங்கையின் படைத் துறைச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி மற்றும் முப்படைகளின் தளபதிகளும் கலந்து கொண்டனர்.

இந்தியத் தரப்பில் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கப்டன் பிரகாஸ் கோபாலன் பங்கேற்றார். (செ-12)

# தாய்லாந்தில்...

சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் இராணுவ அணி வகுப்பு மரியாதையுடன் தாய்லாந்து துணை பிரதமர் உள்ளிட்ட பிரதிநிதிகள், ஜனாதிபதி உட்பட தூதுக் குழுவினரை வரவேற்றுள்ளனர்.

இதனையடுத்து இலங்கையிலிருந்து கொண்டு செல்லப்பட்டுள்ள சர்வந்த தாதுவுக்காக (புத்தரின் புனித பல்) சுவர்ணபூமி விமான நிலையத்தில் விசேட வழிபாடுகள் நடத்தப்பட்டன.

புத்த பகவனின் ஆசியுடன் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் வலுவடையும் என வழிபாடுகளில் கலந்து கொண்ட தாய்லாந்து பிக்குகள் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளனர்.

தாய்லாந்து வருகை தருமாறு தனக்கு விடுக்கப்பட்ட அழைப்புக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நன்றி தெரிவித்துக் கொண்டதாக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (செ-12)


## அமெரிக்க லொத்தர் விசா

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்.

இந்தவருடத்தில் 55000 பேருக்கான இலவச வாய்ப்பு

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேறலாம்

இளைஞர்களே,யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா? இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

பங்களாதேஸ், இந்தியா,பாகிஸ்தான் போன்ற சனத்தொகை கூடிய நாடுகள் இவ்வருடம் விண்ணப்பிக்க தகுதி இல்லாதமையால் ஆசியாவில் இலங்கையர்களுக்கான வாய்ப்புக்கள் அதிகம்

கடந்த வருடம் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா செல்லும் வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

**V2 TRAVELS**

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 |
| நெல்லியடி 0776699892 | வல்வெட்டித்துறை 0776697960 |

இறுதி நாள் 03-11-2015 (செவ்வாய்) இரவு 10 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

அடுத்த வருடம் இலங்கையர்களுக்கு அமெரிக்க லொத்தர் வாய்ப்பு நிச்சயமில்லை (சி-2596)



## Paper classes
G.C.E(O/L) Dec 2015

**English & Maths**

- ★ 10 years Past Question Papers &
- ★ 5 years Model Question Papers revision

Monday to Thursday at 5.00 p.m & 6.00 p.m
No 886, Hospital road Jaffna. (2218)

Further details
Contact - 0779352999
0779789112



# கோலாகல திறப்பு விழா

## ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்



246, கஸ்தூரியார் வீதி,
கன்னாதிட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.

இன்று 02-11-2015 திங்கட்கிழமை திறந்து வைக்கப்படுகின்றது

விசிற்றிங் காட்
டியூரோ பிறேம்
மக் பிறிண்டிங்
TShirt பிறிண்டிங்

பனர்
ஸ்ரிக்கர்
லைட் போர்ட்
பந்தல் தட்டிகள்

0770731654

என அனைத்து விதமான பிறிண்டிங் வேலைகளையும் இலகுவில் குறைந்த விலையில் செய்து கொள்ள இன்றே நாடுங்கள்

தீபாவளியை முன்னிட்டு எதிர்வரும் 10ம் திகதி வரை விசேட விலைக்கழிவுகள்

(C-2595)



## பதவி வெற்றிடங்கள்

எமது நிறுவனத்தில் பணிபுரிவதற்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர்.

1. Business Management Lecturers
2. IT/ Computing Lecturers
3. IT/ Computing Instructors
4. Project Officers
5. Marketing Officers
6. English Teachers
7. Customer Service Assistants

நேர்முகப் பரீட்சைக்கான பதிவுகளுக்கு

077 4004279 தொடர்பு கொள்ளவும் (C-2591)

**LCBT CAMPUS**

47, சேர் வைத்தியலிங்கம் துரைசாமி வீதி,
(வேம்படி பாடசாலை அருகில்)
யாழ்ப்பாணம்.



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும் கற்கை நெறிகள்

**Spoken English with Grammar - Quick Learning Course** 1½ Months

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. நீங்கள் ஆங்கிலத்தில் உரையாட 100% உத்தரவாதம் தரப்படும். மாணவர்களின் நலன் கருதி Dictionary, CD/DVD, Tutes போன்றவை இலவசமாக வழங்கப்படும்.

இக் கற்கை நெறிகள் பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.

**Diploma In English** 2 Months

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி, உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தேவையும், அதிலே உங்களின் புலமையும் இன்றியமையாதது. இவை யாவையும் கருத்திலே கொண்டு இக் கற்கைநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. Spoken English course முடித்த அனைவரும் பயில வேண்டிய பாட நெறி.

- ★ வகுப்புகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாக(Audio & Video visuals) கூடுதல் பயிற்சிகளுடன் நடாத்தப்படும்
- ★ எமது கற்கை நெறிகள் Reading,Writing, Speaking, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச் சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது
- ★ Excellent Teacher's Panel & Individual Attention
- ★ கிழமை, வார இறுதி நாட்களில் காலை, மாலை நேர வகுப்புகள் உண்டு. குழுக்களாக அல்லது நிறுவனங்களைச் சேர்ந்தோர் குழவாக வரின் அவர்களுக்கு விசேட வகுப்புகள் ஆரம்பிக்கப்படும். (சி-2593)

உத்தியோகத்தர்கட்கு, மாணவர்கட்கு சனி, ஞாயிறு வகுப்புகள்
07.11.2015 காலை 10.00, மாலை 2.30 ஆரம்பமாகின்றது

**Batches Start On**

| | | |
|---|---|---|
| 03.11.2015@10.00am | | 06.11.2015@ 9.00am |
| 04.11.2015@ 9.00am | 05.11.2015@10.00am | 09.11.2015@ 9.00am |

British College of Higher Studies
No.15, Sirambiyady Lane (Off Stanley Road),
Above Sathosa SM, Jaffna. Tel :021-2224550

HotLine(S)
0777585913, 0777222422
0776555677



# சரவணா ரெக்ஸ்
நல்லூர்




(வேறு கிளைகள் இல்லை)

சரவணாவின் தீபாவளி சிறப்பு தள்ளுபடியால்
உங்கள் வீட்டு கஜானா தப்பியது

வித விதமான அழகிய
சாறிகள் மற்றும் ரெடிமேற் சல்வார் தெரிவுகளுக்கு மட்டும்

526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர், (பின் வீதி)
(சிவன் கோவில் அருகில்) யாழ்ப்பாணம். (சி-2594)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.11.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.